பக்கங்கள்: 12

Registered as a Newspaper

New Master Institute
B. M. C. Lane, Jaffna.
90 A/L
கலை, வர்த்தகம்
ஆரம்பமாகிவிட்டது!
(SAT & SUN)
Economics — 8.00
Logic — 9.00
Accounts — 10.00
Commerce — 11 00
Logic — 12.00
Tamil & Hindu Culture

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 3-50

New Master Institute
1st Lane, Power House Rd
Jaffna.
89 A/L கலை, வர்த்தகம்
ஆரம்பமாகிவிட்டது!
(SAT & SUN)
Logic — 8.00
Economics I — 9 00
Economics II — 10.00
Accounts — 11.00
Commerce — 12.00
Logic — 1.00
Tamil & Hindu Culture

மலே: 3 யாழ்ப்பாணம் விபவ ஆடி 01 சனிக்கிழமை ஹிஜ்ரி 1403 துல்ஹஜ் பிறை 01 (16-07-1988) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 20

# பரந்தன் சந்தையில் சூடு!

# ஐந்து பொதுமக்கள் பலி!!

## சென்றிக்கு நின்ற ஜவான் மரணம்

– அலுவலகச் செய்தியாளர்கள்: அகில்ராஜ், எஸ். ராஜ்குமார் –

யாழ்ப்பாணம், ஜூலை 16

பரந்தன் சந்தைப் பகுதியில் நேற்றுக்காலை 11.00 மணிக்கு பெரிய அளவில் நடைபெற்ற கடும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களின் போது ஐந்து பொதுமக்கள் பலியானார்கள். பத்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர். இந்திய அமைதிப்படை வீரர் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்தார்.

உயிரிழந்த பொதுமக்களின் எண்ணிக்கை ஏழு என ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகள் தெரிவித்தன.

இந்தச் சம்பவங்களின் போது பரந்தன் சந்தையில் உள்ள சில கடைகள் சேதப்படுத்தப்பட்டன. சிலர் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

மார்க்கெட் பகுதியில் "சென்றி" கடமையில் ஈடுபட்டிருந்த இந்திய அமைதிப்படை ஜவான் ஒருவர் மீது இனந்தெரியாதோர் சுட்டத்தை யடுத்தே அப்பகுதியில் பெருமளவில்வேட்டுகள் தீர்க்கப்பட்டதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இன்றைய ஆடிப்பிறப்புத் தினத்தை முன்னிட்டு பொருள்கள் வாங்குவதற்காக பெருமளவில் சந்தைப்பகுதியில் கூடியிருந்த பொதுமக்களே இந்தச் சூட்டுச் சம்பவத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

காயமடைந்தோரில் இரண்டு பேர் அவசர

[4 ஆம் பக்கம் பார்க்க]

## முல்லைத்தீவில் ஷெல் தாக்குதல்

ஒட்டுசுட்டான், ஜூலை 16

முல்லைத்தீவு தண்ணிமுறிப்புக் குளத்திற்கு அருகேமுகாமிட்டிருக்கும் இந்திய அமைதிப்படையினர் இரவு, பகலாக ஷெல் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். அடிக்கடி துப்பாக்கிச் சூடுகளும் இப்பகுதியில் இடம் பெறுகின்றன.

குமுளமுனை, அளம்பில், ஆண்டான்குளம், கழிக்காடு ஆகிய பகுதிகளை நோக்கியே ஷெல் தாக்குதல்கள் நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் பீதி நிலவி வருகின்றது.

இதேவேளை இப்பகுதிகளை அண்டியுள்ள காட்டுப் பிரதேசங்களிலும் தீவிர தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 4 தொகுதிகளில் இடைத்தேர்தல்:

## மூன்றில் ஐ. தே. க. வெற்றி!

### அதிக வாக்குகள் சு. கவுக்கு!!

கொழும்பு, ஜூலை. 16

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற நான்கு இடைத்தேர்தல்களில் மூன்றில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்றது. இரத்தினபுரித் தொகுதியில் மட்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் வெற்றிபெற்றார்.

எனினும் நான்கு தொகுதிகளிலும் அளிக்கப்பட்ட வாக்குகளில் அதிகப்படியான வாக்குகளை

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

16 – 7 – 1988
ஆடி – 01
சனிக்கிழமை
சுபநேரம்:
03–00 முதல் 04–30 வரை
ராகுகாலம்:
09–00 முதல் 10–30 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## சு. க. வெற்றி பெற்ற தொகுதி:

## இரத்தினபுரியில் ஊர்வலங்களுக்குத் தடை!

இரத்தினபுரித் தொகுதியில் ஊர்வலங்களுக்குப் பொலீஸார் தடை விதித்துள்ளனர்.

இத்தடை ஒருவார காலத்துக்கு அமுலில் இருக்கும் என்று இரத்தினபுரி பொலீஸ் அதிபர் எச். எம். ஹேரத் நேற்றுத் தெரிவித்தார்.

இடைத் தேர்தலில் இரத்தினபுரி எம்பியாக சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு. நந்தா எல்லவல தெரிவானார்.

தேர்தலுக்குப் பின்னரும் இத் தொகுதியில் பதற்றம் நிலவியதாக நேற்று அறிவிக்கப்பட்டது. (உ–எ)

## கண்ணிவெடி!

### அக்கராயன் வீதியில்

யாழ்ப்பாணம், ஜூலை 16

முறிகண்டி - அக்கராயன் வீதியில் இரண்டாம் கட்டை என்னும் இடத்தில் நேற்றுக் காலை கண்ணிவெடிச் சம்பவம் ஒன்று இடம் பெற்றதாகக் கூறப்பட்டது. காலை சுமார் 10-30 மணியளவில் இடம் பெற்ற கண்ணி வெடிச் சம்பவத்தை தொடர்ந்து சரமாரியான துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் அங்கு கேட்டதாகவும், ஏராளமான அமைதிப் படையினர் இந்தப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காயமுற்ற உரிமையாளர் எங்கே?

யாழ்ப்பாணம், ஜூலை 16

பரந்தன் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கடை உரிமையாளர் ஒருவரும் காயமடைந்தார்.

பலத்த காயத்திற்குள்ளான அவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

காரொன்றிலேயே அனுப்பி வைக்கப்பட்டதாகக் கூறப்பட்ட பிரஸ்தாப கடைஉரிமையாளர் செய்தி எழுதப்படும் வரை யாழ் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்படவில்லை என அறிவிக்கப்பட்டது. [அ–10]

## தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16

பரந்தன் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து அப்பகுதி கடை உரிமையாளர்களும் ஊழியர்களும் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ–9]

## தமிழ் தொழிலாளர் காயம்

கொழும்பு, ஜூலை 16

இனந்தெரியாத நபர்கள் சுட்ட போது ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபையைச் சேர்ந்த எட்டுத் தமிழ்த் தொழிலாளர்கள் காயமடைந்தனர்என்று அறிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் கொஸ்கம என்னுமிடத்தில் கடந்த புதன்கிழமை அதிகாலை இடம் பெற்றது. [உ–எ]

## கிளிநொச்சி வந்த ரயில்

யாழ்ப்பாணம், ஜூலை 16

கொழும்பிலிருந்து புறப்பட்ட யாழ் தேவிரயில் நேற்றுகிளிநொச்சிவரை சேவையில் ஈடுபட்டது. ரயில் நண்பகல் 12.40 மணிக்கு கிளிநொச்சி வந்து சேர்ந்தது.

வழமையாக வவுனியா வரை சேவையாற்றும் யாழ். தேவி ரயில் சனி, ஞாயிறு தினங்களில் கிளிநொச்சி வரை இனிமேல் சேவையாற்றும்.

பரந்தனில் நடந்த அசம்பாவிதத்தினால் ரயில் பயணிகளும் கிளிநொச்சியில் தங்கி மாலை 5.00மணியின் பின்னரே பஸ்களில் பயணத்தைத் தொடர்ந்தனர். அவர்கள் இரவு 7.00 மணியின் பின்னரே யாழ். நகரைவந்தடைந்தனர். [அ–10]

## இப்போது இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 16

ஆகக்குறைந்தது நான்கு பதிவாளர்களாவது தற்பொழுது தேவை. அவர்கள் இல்லாமல் மருத்துவ பீட விரிவுரைகளை இப்போதைக்கு ஆரம்பிக்க முடியாது.

யாழ்- பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் பொதுக்கூட்டம் நேற்று மருத்துவபீட விரிவுரைமண்டபத்தில் நடைபெற்றபோதேஇத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

விரிவுரையாளர்கள், பதிவாளர்கள் பற்றாக்குறையால் யாழ்- பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரைகள் காலவரையறை இன்றி பின்போடப்பட்டுள்ளது தெரிந்ததே. (அ–5)

## செய்திச் சாரம்

## நிலக்கண்ணிக்கு 34 பேர் பலி

அடிஸ் அபாபா, ஜூலை15

எத்தியோப்பியாவின வட பகுதி எரித்திரியாவில் நேற்று இடம் பெற்ற நிலக்கண்ணி வெடித்தாக்குதலில் 34 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது. பயணிகளுடன் வந்த பஸ் ஒன்றே நிலக்கண்ணியில் சிக்கிய தாக்க் கூறப்பட்டது. [அ–எ]

## ஏவுகணைத் தாக்குதல்

காபூல், ஜூலை 16

ஆப்கன் கெரிலாக்கள் நேற்றுக்காலை காபூலை நோக்கி நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 20 பேர்உயிரிழந்தனர்என்று டாஸ் செய்திஸ்தாபனம் அறிவித்தது.

இருபது ஏவுகணைகள் இத்தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ–எ)

## என் கண் முன்னே இருவர் சூடுபட்டு சுருண்டு விழுந்தனர்

யாழ்ப்பாணம், ஜூலை16

"ஆடிப் பிறப்புக்கு பொருள்கள்வாங்கவந்த நான் புடவைக் கடைக்குள் நுழைந்த போது துப்பாக்கிக் குண்டுகள் என்னைத்தாக்கின."

"சிறி வந்த துப்பாக்கிக்குண்டுகள் தாக்கிஎன் கண்முன்னே நின்ற இரண்டு பேர் சூடுபட்டு சுருண்டு விழுந்து மரணமானார்கள்."

நேற்று பரந்தன் நகரில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த நாகராசா மகேஸ்வரி (வயது 39) இவ்வாறு தெரிவித்தார்.

### காயமுற்ற பெண் தகவல்

சண்டாவளையைச் சேர்ந்த இவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவர் எமது செய்தியாளரிடம் மேலும் தெரிவித்ததாவது:–

பொருள்கள் வாங்கு

(4 ஆம் பக்கம் பார்க்க]

## பல்கலைக்கழக அனுமதி:

## தேர்வு நிலைப் புள்ளிகள் விவரம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16

கடந்த வருடம் ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்கான தெரிவு நிலைப்புள்ளிகள் பற்றிய விவரங்கள் நேற்று வெளியாகின.

மாவட்ட விகிதாசார அடிப்படையில் இப்புள்ளிகள் அமைந்துள்ளன. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அனுமதிக்கான சிரேஷ்ட உதவிச் செயலாளர் திரு. நிஸ்ஸநந்தசேனவினால் இவை அறிவிக்கப்பட்டன.

(விவரம் 4 ஆம் பக்கத்தில்)

## பொதுத்தேர்தல் முன்னதாகவே வரும்?

கொழும்பு, ஜூலை 16

திட்டமிட்ட காலத்துக்கு முதல் பொதுத் தேர்தலை நடத்த அரசு நடவடிக்கை எடுக்கலாம் என்று கொழும்பில் அரசியல் வட்டாரங்களில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

நான்கு இடைத் தேர்தல் முடிவுகளை வைத்து இந்த அபிப்பிராயத்தை அரசியல் அவதானிகள் வெளியிட்டனர்.

1977 பொதுத் தேர்தலின் போது இந்த நான்கு தொகுதிகளிலும் யு.என்.பிக்குக் கிடைத்த வாக்குகளிலும் பார்க்க இடைத் தேர்தலில் அதிக வாக்குகள்கிடைத்துள்ளன. என்றும்

ஆகவே பொதுத்தேர்தலுக்கு அரசு எந்தநேரத்திலும் உத்தரவிடக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் பேராசிரியர் ரால்ப்புல்ஜின்ஸ் ஏ.எப்.பி செய்தி ஸ்தாபனத்திடம் தெரிவித்தார் என அறிவிக்கப்பட்டது. (அ–எ)

## மாலிச்சந்தியில் சம்பவம்:

## ராணுவ வாகனம் மினிபஸ் மோதலில் 8 பேர் காயம்

வடமராட்சி, ஜூலை 16

நெல்லியடி மாலசந்திக்கு அண்மையில் பிரயாணிகளை இறக்கிக் கொண்டிருந்த மினிபஸ் ஒன்றுடன்இந்திய அமைதிப் படையினரின் ட்ரக்ஒன்று மோதியதில் 8 பேர் காயமடைந்தனர். காயமுற்ற 8 பேரும் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழன் நண்பகல் 12-30 மணியளவில் மாலிசந்திக்கு அருகில் பரமானந்த ஆசிரமத்திற்கு முன்பாக இடம் பெற்றது.

காயமுற்றோரை அமைதிப்படையினரே மந்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்துக் சென்று அங்கு சேர்த்தனர். (உ–160)

## மினி சினிமாக்கள் இன்று முதல் இயங்கும்

யாழ்ப்பாணம் ஜூலை 16

யாழ். மாவட்டத்திலுள்ள மினி சினிமாக்கள் அனைத்தும் இன்று நண்பகல் 2. 30 மணிக் காட்சியுடன் இயங்கத் தொடங்கும்.

யாழ். மாவட்ட மினி சினிமா சங்கத்தினால் சில நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்ட மினி சினிமாக்கள் மட்டுமே இன்று முதல் இயங்கும்.

சில மினி சினிமாக்களில் திரையிடப்படும் திரைப்படங்கள் ஆபாசமாகவும், தமிழ் மக்களின் பண்பாடு கலாசாரம் என்பவற்றை கெடுப்பனவாகவும் அமைந்திருந்ததினால் சில மாதங்களின் முன் யாழ். மாவட்ட மினி சினிமாக்கள் தடைசெய்யப்பட்டன.

தற்பொழுது சில நிபந்தனைகளின் அடிப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மினி பஸ்கள் மோதல் பன்னிருவர் காயம்

கிளிநொச்சி, ஜூலை 16

யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த இரு மினிபஸ்கள் ஆனையிறவில் மோதி விபத்துக்குள்ளானதில் 12 பயணிகள் படுகாயமுற்றனர். மற்றைய பிரயாணிகள் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

விபத்துக்குள்ளான மினிபஸ்களில் ஒன்று குடை சாய்ந்தது.

நேற்றுக்காலை 8 மணி அளவில் ஆனையிறவு பாடசாலைக்கு முன்பாக இந்தவிபத்து நடந்தது.

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கியும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கியும் வந்த மினிபஸ்களே விபத்துக்குள்ளாகின.

பிரயாணிகளை இறக்குவதற்காகத் தரித்து நின்ற மினிபஸ் ஒன்றின் மீது பின்னால் வந்து கொண்டிருந்த மற்றைய மினிபஸ் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இருபஸ்களிலும் வந்த 12 பேர் படுகாயமடைந்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியாவுக்கு அருகே வ. ப. போ. ச. பஸ் எரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை.16

திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த வட பிராந்திய போக்குவரத்துச்சபை பஸ் ஒன்று வியாழக்கிழமை பகல் இனந்தெரியாதவர்களினால் தீமூட்டி எரிக்கப்பட்டது.

வவுனியாவில் இருந்து இரண்டு மைலுக்கு அப்பால் உள்ள மாமடு என்ற இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

பிரயாணிகளை இறக்கிவிட்டே பஸ்ஸிற்கு சம்பந்தப்பட்ட நபர்கள் தீவைத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 6 Sri Morris Oxford வாகனம் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 119, பருத்தித்துறைவீதி, நல்லூர் இந்து விடுதி முன்பாக. (5065)

### வீடும் காணியும் விற்பனைக்குண்டு

முள்ளானை இளவாலையில் வீடும் தோட்டக் காணியும் விற்பனைக் குண்டு. இளவாலை கொன்வென்டுக்கு அருகாமையில் 2 பரப்பு 1 குழி விஸ்தீரன முள்ள சகல வசதிகளுடன் அமைந்த வீடும், வீட்டுக்கண்மையில் 11 பரப்பு தோட்டக்காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு சி. நடராசா மேற்பார்த்து அ. கந்தையா, 'ஏரகம்', கேணிக்கரை, அளவெட்டி. (4916)

வேலணைகிழக்கு முத்துமாரியம்மன் கோவில் ரேட்டில் 10 பரப்புக் காணியும் எட்டு அறை கொண்ட வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சோமநாதன் 369/2 நாவலர் ரேட் யாழ்ப்பாணம் அல்லது M. நவரெத்தினம் 14A, விதானைவீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (4996)

### கோழிக்குஞ்சுவிற்பனை

ஒருநாள் (Tetra- SL) பிறவுண் சேவல் பேட்டுக் குஞ்சுகள் (Christombu) Golden Comet பிறவுண் சேவல், பேட்டுக்குஞ்சுகள் ஆடி 19ஆம், 20ஆம் திகதிகளில் விநியோகிக்கப்படும். 250சேவல் குஞ்சுகளுக்குமேல் எடுப்பவர்களுக்கு விலை 4 ரூபா/- R.S.K. Farm 'முருகபதி' உடுவில் (டச்சுரோட், மான்ஸ் பாடசாலைக்கு அருகாமை) (4927)

Prima Lohmann வெள்ளை, சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் சிவப்பு சேவல் குஞ்சுகள் Hy-Line வெள்ளை கறுப்புப் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன்முன்கூட்டியே பதிவுசெய்யவும் Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர். (C5626)

### ஒரு நாள் குஞ்சு விநியோகம்

ஒரு நாள் (SHETNA-B-380) பேட்டுக் குஞ்சு, குறுகிய காலத்தில் கூடிய நிறை தரக்கூடிய சேவல் குஞ்சுகள், புரேயலர் குஞ்சுகள் 22-7-88 இல் விநியோகிக்கப்படும். —R. S. K Farm: முருகபதி, உடுவில், குபேரன்ஸ்ரோர்ஸ் கொக்குவில்சந்தி, கொக்குவில். (4928)

### புரெயிலர் (Broiler) இறைச்சி விற்பனை

புரெயிலர் (Broiler) இறைச்சி எப்பொழுதும் குறைந்த விலையில் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். R. S. K Farm முருபதி உடுவில்; R. S. K. Farm தபால் கந்தோர் வீதி, மானிப்பாய். தொகையாக எடுப்போருக்கு சலுகை வழங்கப்படும். (4929)

### இறைச்சிக்கோழி விற்பனை

Broiler இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre C/O நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர். (சி 5625)

## விற்பனைக்கு

GOLDI Sausages எல்லாவகையான Sausages மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு கழிவு தரப்படும். Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். [C.5624]

### பஸ் விற்பனை

சிவிலியன் (CEVELION) பஸ் முழுமையாக அல்லது உதிரிப் பாகமாக இரண்டு இன்ஜின்கள் கழற்றிய நிலையில் விற்பனைக்குண்டு. எந்நேரமும் பார்வையிடலாம், தொடர்பு: 32/4 நீக்கிலஸ் லேன், கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (4932)

### சுத்தமான புரெய்லர் கோழிவிற்பனை

புரெய்லர் முழுத் தோல் உரித்த கோழி விற்பனைக்குண்டு, கிலோ ரூபா 65/-. இரவு 7-30 வரை திறந்து இருக்கும். யாழ். சைனீஸ் ரெஸ்ரொரண்ட் Pvt லிமிடெட், 1 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (4919)

### காணி விற்பனை

யாழ்/மருத்துவக் கல்லூரிக்கு அண்மையில் அமைந்துள்ள கோணமலை வைரவர் கோவில் ஒழுங்கையில், 9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. முழு விபரங்களுக்கு:- பொ. நடராசா, 64, கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு. கொக்குவில். [4934]

## தேவை

இரும்புத் தொழில் பழகுவதில் ஆர்வமுள்ள ஆண்கள் தேவை: மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்கவும்: ரவி - என்ஜினியரிங் வேக்ஸ் 54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி/5738)

### வேலைக்கு ஆள் தேவை

ஸ்பிறே பெயின்ரிங் வேலை தெரிந்த ஒருவர் தேவை. பெயின்ரிங் வேலை பழக விரும்புபவர்களும் வரலாம். தொடர்பு;- Omega, Manipay Road, Jaffna. (4923)

### மணமகன் தேவை

இந்துவேளாளர்குலத்தைச் சேர்ந்த, Accountancy படித்த அமெரிக்க குடியுரிமையுள்ள 12 ல் செவ்வாய் உள்ள, 27 வயது அழகிய பெண்ணுக்கு, Doctor, Engineer, Accountant தராதரம் உள்ள மாப்பிள்ளையை பெற்ரோர் விரும்புகிறார்கள். மணமகனுக்கு அமெரிக்கா செல்வதற்கான சகல ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும். தொடர்பு விலாசம் 277, C/o உதயன் யாழ்ப்பாணம். (4908)

### மணமகள் தேவை

1. யாழ்/இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த 38 வயது நிரம்பிய பிரபல்யமான ஸ்தாபனத்தில் Accountant ஆக வேலைசெய்யும் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை 2. யாழ்/வேளாள ரோமன் கத்தோலிக்க U. K யில் ''டாக்டர்'' ஆக பணிபுரியும் 29 வயது நிரம்பிய மணமகனுக்கு மணமகள் தேவை. டாக்டர், எக்கவுண்டன், பட்டதாரியாக இருத்தல் வேண்டும். தொடர்பு: ''ABCDE'' விவாகப் பொருத்துனர். 328, நாவலர் ரேட். ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (4917)

## கல்வி

1988 December இல் நடைபெறவுள்ள புதிய, பழைய கல்வித் திட்டத்திற்கு அமைய கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 20 வருட அனுபவமுள்ள ஆசிரியரால் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்கு வீடுகளில் சென்று கற்பிக்கப்படும். இதுவரை சித்தியெய்தாதவர்களும், ஆரம்ப அறிவோ இல்லாதவர்களும், உடன் தொடர்புகொள்ளவும். 2 மாதத்துக்குள் சகல போசன்களும் முடிக்கப்படும். பாலர் வகுப்பிலிருந்து சகல பாடங்களும் நிறைவேற்றப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். [4930]

### SPOKEN ENGLISH

Spoken English with Grammar by S. B. Iyar புதிய பிரிவு தூர இடங்களில் இருந்து வருபவர்களுக்காக ஆரம்பம் 21- 07- 88 நேரம் பகல் 10 மணி - 12 மணி வரை. 12, வைமன்வீதி' நல்லூர். (5050)

### A/L1990 வகுப்புக்கள்

தூயகணிதம், பிரயோககணிதம் சனி, ஞாயிறு வகுப்புக்கள் 16-7-88இல் ஆரம்பமாகின்றது. காலை 10-30 தொடக்கம் 12-30 வரையும் ஆசிரியர் எஸ். துரையப்பா B.Sc. (சிறப்பு) மாணவர்க்கு இலவச கணிதப் பயிற்சி நூல் ஒன்றும் வழங்கப்படும். -12. Forest Office lane, Chundikkuli. (4926)

### A/L 90 இரசாயனம் ஆரம்பம்

ஆசிரியர் சத்தீஸ் 108, பிறவுண் ரேட், A/L 90 இரசாயனம் பிரிவு I ஆரம்பம் [18-7-88] திங்கள் 6-30 காலை; பிரிவு II ஆரம்பம் திங்கள் [18-7-88] 5.00 மாலை. [4907]

### தவறி விட்டது

யோகநாதன் கருணாகரன் ஆகிய எனது 621281907V இலக்கமுடைய அடையாள அட்டை நல்லூருக்கும் ராசாவின் தோட்டத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்திலோ அல்லது நல்லூர் வீடியோ சென்ரரிலோ தயவுசெய்து ஒப்படைக்கவும். (5064)

### அடையாள அட்டை தவறிவிட்டது

யாழ் பஸ் நிலையத்தில் 642692089V இலக்கமுடையதும் கலீலுர் றகுமான் என்னும் பெயரைஉடையதுமான தேசிய அடையாள அட்டை காணமல்போய் விட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில்ஒப்படைக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். [4933]

### கண்டெடுக்கப்பட்டது

குருநகர் மீனவர்களால் கடலில் கண்டெடுக்கப்பட்டவலைகள், அமைப்பின் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அத்தாட்சிகளைக் காட்டி பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: யாழ் / குருநகர் கிராமிய கடற்தொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு. (4920)

### மணப்பந்தல்

யாழ்/இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த கனடா பிரஜா உரிமை உள்ள 30 வயது நிரம்பிய ''டெக்னிசியன்'' மணமகனுக்கு செவ்வாய்க் குற்றமுள்ள மணமகள் தேவை. நட்சத்திரம் உத்தரம் தொடர்பு ''ABCDE'' விவாகப் பொருத்துனர். 328, நாவலர் ரேட், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (4918)

### ALSATION PUPS FOR SALE

Excellent Pedigree Wormed and Weaned month old Pups for Sale- Pathinathan Samuel Mann Road, Uduvil (4922)

### ரேனியோ - தட்டச்சு

தமிழ் - ஆங்கில தட்டச்சு Typewriting ரேனியோ வேலைகள் மற்றும் சகலவிதமான அச்சுவேலைகளும் சிறந்த முறையில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும். தயா அச்சகம் இல 138, நாவலர் ரேட், மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம். (C 5? 00)

### கண்ணாடி அலுமாரி

புடவை விற்பனை நிலையத்திற்கு தேவையான மரத்தால் செய்யப்பட்ட அலுமாரிகள், கண்ணாடி அலுமாரிகள் புதியது விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க:- 4 நியூ மார்க்கட் ரஞ்சனாஸ் ரெக்ஸ் சுன்னாகம். (C/5785)

### சோதிடம்

நினைத்த காரியம் ஜாதகபலன், விவாகப் பொருத்தம், எண்சோதிடம் முதலான விடயங்களுக்கு அரச அங்கீகாரம் பெற்ற சோதிட விற்பனரை நேரிலோ தபால் மூலமோ தொடர்பு கொள்க. 'சக்திசரவண' 210, கஸ்தூரியார் வீதி, 'இந்துக் கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். (4903)

### TYPE WRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக்கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road, Jaffna. Samy & Co Shabra அருகாமையில் (C5300)

### மாந்திரிக பரிகாரம்

தொழில் விருத்தி மங்கலமான மணவாழ்வு மனைகளில் மங்கலம் நோய் பிணி தீரல் சத்துரு மித்துருவாதல் போன்ற சகல விடயங்களுக்கும் பாரம்பரிய பரம்பரை சோதிட மாந்திரீக பரிகாரகரால் தீர்வு காணப்படும். நேரில் வருக. 'சக்தி சரவண' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (இந்துக்கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) (4904)

### வாடகைக்கு

யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவிலுள்ள 48 ஆம் இலக்க இல்லத்தின் மேல்மாடியில் 3 அறைகள் வாடகைக்குண்டு. தொடர்புகட்கு R. அல்போன்ஸ் (மாணவர்கள் விரும்பத்தக்கது) (5060)


எமது நேற்றைய

புதிய வெளியீடு

பிரபு - கார்த்திக் - அமலா நடித்த

'அக்கினி நட்சத்திரம்'

குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.


# இலங்கைப் பல்கலைக்கழகங்களின் வெளிவாரிப் பட்டமாணிப் பரீட்சைகள்

## கல்வியாண்டு 1988/89

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் அனுமதி கிடைக்காதவர்களின் தேவைகருதி வெளிவாரிப்பட்டப்படிப்புகளுக்கான பயிற்சி வகுப்புகள் ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி [7-8-88] ஆரம்பமாகின்றன.

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் பின் வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

**கலைமாணி(B.A) வர்த்தகமாணி (B.Com) விஞ்ஞானமாணி (B.Sc)**

[புள்ளிவிபரவியல்]

மாணவர்களின் நலன்கருதி 3 மாத இலவச ஆங்கில வகுப்புகள்.

விண்ணப்பங்கள் யூலை 30 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப்படிவத்தினையும் விபரத்திரட்டினையும் பெற ''பதிவாளர்'' அஸ்ரன் இன்ஸ்ரியூட் என்ற பெயருக்கு ரூபா 10ற்கான காசுக்கட்டளையுடன் 9''×4'' அளவுடைய சுயமுகவரியிட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறையை அனுப்பிவைத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்

**அஸ்ரன் இன்ஸ்ரியூட்**

166/1 ஆஸ்பத்திரிவிதி, யாழ்ப்பாணம், [A. S சங்கரப்பிள்ளை கட்டிடம் 1 ஆம் மாடி]

(C.5499)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. V. K. இராமலிங்கம்**

(முன்னாள் பிரபல வர்த்தகர், மார்கட், சாவகச்சேரி)

தோற்றம்: 06 - 01 - 1906 மறைவு: 16 - 07 - 1987

எங்கள் அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. (5311)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை குலதிலகன்

(வைத்தியர்)

இல. 14. இராணி வீதி நல்லூரைச் சேர்ந்த வைத்தியர் வேலுப்பிள்ளை குலதிலகன் 12-07-88 அன்று சிவபதமடைந்து விட்டார். இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை காமாட்சியம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், இராஜலட்சுமியின் அன்புக் கணவரும், டாக்டர் வாசவன் (ஜேர்மனி) வாசுகி, வைதேகி, வாசுதன் (ஜேர்மனி) வைகரன் (ஜேர்மனி) வைகுந்தன் வான்மதி ஆகியோரின் அன்புத்தந்தையும், வடிவேல், வாமதேவன், பதஞ்சலி, திலகவதி, பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தனபாலசிங்கம் (பிரதேசசபை - பூநகரி) இராஜத்திலகன் (தெங்கு அபிவிருத்திச்சபை - லுனுவெலை) டாக்டர் கலைச்செல்வி ஆகியோரின் அன்புமாமனும், கோபி கிருஷ்ணா இளமதி, பவித்திரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரது ஈமச்சடங்குகள் 17 - 07 - 88 ஞாயிறு அன்று மாலை 2 மணியளவில் நடைபெற்று செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்

[மனைவி, மக்கள், மருமக்கள்]

(5067)


கொழும்பு மாநகர் வரும் பிரயாணிகளுக்கு:

ஓர் நற்செய்தி!

தரமான சைவ உணவு வகைகளுக்கும்
தரமான தங்குமிட வசதிகளுக்கும்

நாடுங்கள்!

ஹோட்டல் ஐலண்ட்
HOTEL ISLAND

உண்டு களித்திட உவகை நிறைந்திட
உன்னதமான உணவு வகைகளும்
தேனமுதச் சிற்றுண்டி வகைகளும்
உள்ளங் கவர்ந்திடும் உபசரணைகளுடன்

தலைநகரில் தன்னிகரற்ற சைவ உணவகம்

ஹோட்டல் ஐலண்ட்

சகல வசதிகளையும் கொண்ட பாதுகாப்பான
தங்குமிட வசதிக்கு

ஐலண்ட் லொட்ஜ்
ISLAND LODGE

இணைந்த சேவை செய்யக் காத்திருக்கின்றது

முக்கிய குறிப்பு:
* வாகனங்கள் நிற்பதற்கும் இடவசதி உண்டு.
* கொழும்பு - யாழ் சொகுசு பஸ், மினி பஸ் ஆசனங்கள் பதிவு செய்து இவ்விடத்தில் இருந்தே பிரயாணம் செய்ய ஒழுங்குகள் செய்யப்படும்.
* சர்வதேச தொலைபேசி வசதித் தொடர்புகளும் இங்கே கிடைக்கும்
* விரும்பும் இடங்களுக்கு விரைவில் சென்று வர இரவு பகல் வாகன வசதியும் கிடைக்கும்.
* பெண்கள் தனியாகத் தங்குவதற்கும் வசதிகள் உண்டு.

HOTEL ISLAND <=> ISLAND LODGE
ALL VARIETIES OF HIGH CLASS VEGETARIAN DISHES — ROOMS WITH ALL COMFORTS

AVAILABLE UNDER ONE ROOF

141, Sri Kathiresan Street, Colombo. 13.
T. P. 547?10, 548358.

(5223)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Asanga Enterprises
## A. வாசன்

மகிழ்ச்சியுடன் அறியத்தரும்
### வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்
வடபகுதி மக்களுக்கு அரிய சந்தர்ப்பம்

★ **மலேசியா**

| | | | |
|---|---|---|---|
| கோழிப்பண்ணை வேலையாட்கள் | 40 | 400 | வெள்ளி |
| சமையற்காரர் | 3 | 500 | வெள்ளி |
| உதவிச் சமையற்காரர் | 5 | 400 | வெள்ளி |

5 வருட ஒப்பந்தம், உணவு, இருப்பிடம், மருத்துவம் இலவசம்.

28-7-88 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

செல்ல விரும்புவோர் எமது காரியாலயத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

மிகவும் பாதுகாப்பான, நிச்சயமான பிரயாண ஒழுங்குகள்

★ **கனடா**

குறுகிய காலத்துக்குள் பிரயாணத்தை மேற்கொள்ளலாம்.

★ **புறுணை**

கிளீனேர்ஸ் 15 பேர் US டொலர் 200

40 நாட்களுக்குள் பயணம் செய்ய முடியுமானவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

★ சவூதி, குவைத்துக்கான வெற்றிடம் எம்மிடம் உண்டு. செல்ல விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

## அசங்கா என்டர்பிறைஸர்ஸ்
இல. 32, 5ஆம் குறுக்குத்தெரு,
(பிலிட்ஸ் நேஷன்ஹோமுக்கு எதிரே)
யாழ்ப்பாணம்.

(சி-5792)



இதோ! உங்கள் பிரபல்ய போஷாக்கு நிறைந்த
# லீடா
## முழு ஆடைப்பால்மா
வசதியான பக்கட்களில்




விநியோகஸ்தர்கள்,
மில்லர்ஸ் லிமிடெட்
த. பெ. இல: 100,
கொழும்பு – 1

400 கிராம் பக்கட் ரூ 29/90
1 கி. கிராம் பக்கட் ரூ 85/-
2 கி. கிராம் பக்கட் ரூ 162/-

லீடா இப்பொழுது ஓர்குடும்பத்தின் அங்கம்

IMAGE


## ஆலாபனு சங்கீத இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜூலை 16 ''ஆலாபனு'' கர்நாடக சங்கீத நிகழ்ச்சி இன்று 16ஆம்திகதி சனிக்கிழமை நல்லை ஆதீனத்தில் நடைபெறும். மாலை 4. 45 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்ச்சியில் செல்வி. ராதை ஜெகானந்தகுருவின் வீணை இசையும், ரீ.வி. பிச்சையப்பா, ரீ.வி விநாயகமூர்த்தி ஆகியோரின் வயலின் இசையும் இடம்பெறும். (சி)


## I. E. T. TECHNICAL INSTITUTE
11 B, STANLEY ROAD, JAFFNA.
[லிடோ தியேட்டருக்கும் முட்டாசுக்கடைச் சந்திக்கும் இடையில்]

✶ எலக்ரிஷன் ✶ஓட்டோ எலக்ரிஷன்
✶ வெண்டிங் ✶ மெக்கானிக்

பயிற்சியளிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றார்கள்

ஆரம்பம் - 18- 07- 1988

(5307)



## வெளிநாட்டு வேலைவாய்ப்பு
## SAUDI OPERATION & MAINTENANCE COMPANY LIMITED
S. O. M. C.

| | | | |
|---|---|---|---|
| 1. | Hospital Cleaners Male | 456 | SR |
| 2 | Hospital Cleaners Females | 456 | SR |
| 3. | University Cleaners Males | 456 | SR |
| 4 | Masons | 600 | SR |
| 5. | Carpenters | 600 | SR |
| 6 | Drivers | 700 | SR |
| 7 | A. C. Mechanics | 650 | SR |
| 8. | Electricions | 650 | SR |
| 9. | Plumbers | 650 | SR |
| 10. | Mechanics | 650 | SR |

AGE: 21 — 49 வரை

### KUWAIT Cleaners

1. Male Hospital Cleaners – 30 KD

AGE: 18 — 49 வரை

● மு.கு: முற்பணம் யாதும் அறவிடப்படமாட்டாது. தங்கள் விசா பெற்றுத்தந்த பின்பு தங்கள் செலவுத் தொகையை அறவிடப்படும். மேலும் எங்கள் நிறுவனத்தால் பின்வருவோரை மட்டும் SUB AGENT ஆகநியமனம் செய்துள்ளோம். இவர்களைத் தவிர வேறு ஒருவரிடமும் கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம்.

1. S. KOMALESWARAN
   Station Road
   Kokuvil
2. T. NAGARAJAH
   40/1, Ramanathan Road
   Jaffna
3. T. JEYARATNAM
   1/4, Convent Road
   Jaffna
4. K. NAGASIVAKUMARAN
   Araly North
   Vaddukoddai
5. V. R. SADACHARAM
   Maravanpulo
   Chavakachcheri.

இப்படிக்கு
S. THAMILVANAN
DIRECTOR

## T.V. TRAVELS & TOURIST
BROWN ROAD,
(Kokuvil Railway Station Front)
KOKUVIL.

(C 5739)



## ஈழத்திலும்
### சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ்

✶ பகவான் சத்தியசாயிபாபா நேரடிதரிசனம்
✶ தென்னிந்திய புனிதஸ்தல யாத்திரை
✶ நம்பிக்கையான (CANADA) பயண ஒழுங்கு

மேலதிக விபரத்திற்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரிகள்:

கிளை
24/11 பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

தலைமையகம்
33, 1வது மாடி,
புதிய ஜெமினி கொம்பிளக்ஸ்
சென்னை - 6
தொ. பேசி: 475382.

✶ [illegible] புனிதஸ்தல யாத்திரை
10 . 8 . 88 ஆரம்பம்

(C 5769)



Zellers chocolates

அதி சுவையூட்டும் மிகச் சிறந்த சொக்கிலேட்

★ **ஸெல்லர்ஸ்** ★

யாழ் குடாநாட்டின்
ஸெல்லர்ஸ் சொக்கிலேட்டின்
எமது ஏக விநியோகஸ்தர்கள்:

**சரன்கா ஏஜென்சி**
281 – A, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி ; 22896

ZELLERS CONFECTIONERIES LTD.
4, Jeyasingha Road,
COLOMBO - 6.
Tel : 552488

(C/ 5795)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**செல்வி திரியம்பகி ஹரிச்சந்திரன்**

தாயின் மடியில்:– 3.5.84
இறைவன் அழைப்பு:- 16.6.88

ஜேர்மனியில் நலமாக வாழ பறந்து
சென்று இருந்தாயே!
இறந்த மாயமென்னம்மா பகியே!
நாளும் எம் நினைவில் நின்றே
வாட்டுகின்றாய்
ஏங்கும் எம் ஏக்கம் என்று தீருமோ பகி
உனது ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

உம் பிரிவால் துயருறும்
அப்பம்மா, அப்பா, அம்மா,
சகோதரர்கள்
சித்தப்பாமார், மாமன்மார்,
உற்றார், உறவினர்.

7ம் கட்டை மல்லாகம்
தகவல்:– ப. தெய்வேந்திரம் கொக்குவில்
(5306)


எமது புதிய வெளியீடுகள்

உஷா சினிமா–
விஜயகாந் – ராதிகா நடித்த
**'பூந்தோட்ட காவல்காரன்'**

**'அக்னி நட்சத்திரம்'**
[தெலுங்கு]

படப்பிரதிகளுக்கு
உடன் தொடர்பு கொள்ளவும்:–
162, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[5066]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிக்கனம்**

மாணவ மணிகளே, 25 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளில் உள்ள திருக்குறளைக் கொடுத்து ஒரு அப்பியாசக் கொப்பியைப் பெற்றுக்கொள்ளுங்கள்-

'மில்க்வைற்-யாழ்ப்பாணம்'



# சஞ்சீவி

16 - 07 - 1988 சனிக்கிழமை



**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**

தினமும் யோகாசனம் செய்து நோயின்றி வாழுங்கள்.

20 மில்க்வைற் நீலசோப் உறைகளில் உள்ள திருக்குறளையோ அல்லது 2 பார் சோப் மேலுறைகளையோ அனுப்பி ஒரு யோகாசன விளக்கப் புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

'மில்க்வைற்-யாழ்ப்பாணம்'


## ஆடிப்பிறப்பு உணர்த்தும்

## அறிவியல், ஆத்மீக உண்மைகள்

இந்துக்களின் கொண்டாட்டங்களில் ஆத்மீகத் தத்துவங்கள் மட்டுமன்றி அறிவியல் உண்மைகளும் பொதிந்துள்ளன.

அந்த வகையில் ஆடிப்பிறப்பு, தைப்பொங்கல் என்பன முக்கியமானவை.

**அறிவியல் உண்மை**

விஞ்ஞான ரீதியாக வானசாஸ்திரத் துறை விரிவடைவதற்கு எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பே ஆடிப்பிறப்பு, தைப்பொங்கல் என்பன கொண்டாடப்பட்டு வந்துள்ளன. இதிலிருந்து நம்முன்னோர் சோதிடக்கலையின் துணையுடன் அறிவியல் துறையில் மேலை நாட்டாரை விட பல மைல்கற்கள் முன்னேறியிருந்தனர் என்பது தெளிவாகின்றது.

உருண்டைவடிவமான பூமி தன்னையும் சுற்றி, சூரியனையும் சுற்ற ஒரு வருட காலம் எடுக்கின்றது. இதனாலேயே பருவ காலங்கள் ஏற்படுகின்றன.

தை மாதம் முதல் ஆனி மாதம் வரை சூடான காலமாகவும், ஆடி முதல் மார்கழி வரையான காலம் குளிரான காலமாகவும் இருப்பதற்கு இதுவே காரணம் என்ற அறிவியல் உண்மை ஆடிப்பிறப்பு, தைப்பொங்கல் ஆகிய கொண்டாட்டங்களின் அடிநாதமாக விளங்குகின்றன.

சூரியன் மகர ரேகையில் இருந்து கற்கடக ரேகைக்கும், பின் கற்கடக ரேகையில் இருந்து மகர ரேகைக்கும் செல்வதை வானியல் ஆராய்ச்சியாளர்கள் அறிந்து உணர்ந்து வெளியிடுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே —

சூரிய பகவான் மகர இராசியில் இருந்து கடக இராசிக்குப் போகும் போது தைப்பொங்கல் கொண்டாட்டத்தையும், கடக இராசியில் இருந்து மகர இராசிக்குப் போகும்போது ஆடிப்பிறப்புக் கொண்டாட்டத்தையும் நம் முன்னோர் ஏற்படுத்தியிருக்கின்றனர்.

இது விஞ்ஞான உண்மைகளை நம் முன்னோர் நன்கு அறிந்திருந்தனர் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

**ஆத்மீக உண்மை**

இறை வழிபாட்டிற்கு மனம் குளிர்ச்சி பெற்று இருக்க வேண்டும். அவ்வாறு மனம் குளிர்ச்சி பெற்றிருப்பதற்கு சுவாத்தியம் குளிர்ச்சியாக இருக்க வேண்டும். அவ்வாறு ஒரு குளிர்ச்சியான காலம் ஆடிமாதத்தில் இருந்தே ஆரம்பிக்கின்றது.

> இன்றுஆடிப்பிறப்பு அதையொட்டி இக் கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

நம் நாட்டிலும் பொதுவாக ஆலயங்களின் உற்சவங்கள் அனைத்தும் ஆடி மாதத்தின் பின்னரே ஆரம்பிக்கப்படுவதை அவதானிக்கலாம்.

சூடான காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர்— அதாவது ஆடி மாதத்திற்கு முன்னர், குளிர்ச்சிக்குரிய தெய்வமான, அம்மன் ஆலயங்களில் மட்டும் உற்சவங்கள் நடைபெறுவதையும் அவதானிக்கலாம்.

**பிதுர் வழிபாடு**

மானிடர்களுக்கு ஒரு வருடம், தேவர்கள், பிதுர்களுக்கு ஒருநாள் என்று சொல்லப்படுவதால், ஆடிமாதம் முதல் அவர்களுக்கு இராக்காலம் ஆரம்பமாகின்றது.

எனவேதான் ஆடிப் பிறப்பன்று நம் முன்னோர்களான பிதுர்களுக்குப் படைக்கும் சடங்கு நடைபெறுவதுடன்—

இராக் காலத்திற்குரிய உணவாக கூழ், பிட்டு, கழி என்பன படைக்கப்படுகின்றன.

**உலகியல் உண்மை**

ஆடி மாதம் ஆரம்பித்ததும் புதிதாக திருமணமாகியவர்கள் கூடி இருக்காது மணமகளைப் பெற்றோர் தம் வீட்டிற்கு அழைத்துக்கொள்ளும் வழக்கமும் இருந்து வந்துள்ளது.

இல் வாழ்க்கைக்குப் பொருள் தேடவேண்டியது கணவன் கடமை அவ்வாறு பொருள் தேட வேண்டியவன் வயல் உழ வேண்டிய காலம் ஆடிமாதமே. அக்காலத்தில் அவன் இல்லற சுகத்தில் கண்மூடி இருந்துவிட்டால் அவன் எதிர்காலம் என்னாவது?

இதனை அவனுக்குப் பெற்றோர் உணர்த்துவதுடன், உற்சாகமாக அவனை விவசாயத்தில் ஈடுபடுத்துவதற்காகவே மாமனைப் பெற்றோர் தம் வீட்டிற்கு அழைக்கின்றனர்.

**கற்கோவளன்**
( துளபகிரி சோதிடர் )

## மினிசினிமா...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

படையில் மினி சினிமாக்கள் இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

அந்த நிபந்தனைகளாவன:-

★ பாடசாலை நாட்களில் 10.30 மணிக் காட்சிகள் காண்பிக்கப் படக்கூடாது.

★ அனுமதிப்பத்திரம் பெற்ற மினி சினிமாக்கள் மட்டுமே இயங்க வேண்டும்.

★ தணிக்கை செய்யப் படாத ஆங்கிலப் படங்கள் காண்பிக்கப்படக் கூடாது.

★ ஆபாசப் படங்களும், தமிழர் போராட்ட உணர்வுகளை மழுங்கடிக்கக்கூடிய படங்களும் திரையிடுவதை நிறுத்த வேண்டும்.

இந்த நிபந்தனைகளுக்குக் கட்டுப்படாத மினி சினிமாக்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவுறுத்தப்பட்டே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது .(உ-9)

## மினிபஸ்..

(1ஆம்பக்க தொடர்ச்சி)

தனர். இவர்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை,பளை அரசினர் வைத்தியசாலை, யாழ் ஆஸ்பத்திரி என்பவற்றிற்கு அனுப்பி வைக்கப் பட்டனர்.

சிறு காயங்களுக்கு உள்ளானவர்கள் ஆனையிறவு மருந்தகம், ஆனையிறவு இந்திய இராணுவ முகாம் அவசரசிகிச்சைப் பிரிவு ஆகியவற்றில் சிகிச்சை பெற்றனர். [உ-76]

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி திருநாவுக்கரசு

தாவடி தெற்கு, சின்னத்தம்பி திருநாவுக்கரசு அவர்கள் (தெல்லிப்பளை ப.நோ.கூ.ச. முன்னாள் கொள்வனவு உத்தியோகத்தர்) காலமானார். அன்னார் வண்ணை வீரமாகாளி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி, தங்கம் ஆகியோரின் அன்பு மகனும், தாவடி தெற்கு காலஞ்சென்ற நாராயணபிள்ளை, சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், திருமதி பூமணியின் அன்புக் கணவரும் பிரபாகரன் (லண்டன்) சுதாகரன் ஆகியோரின் அருமைத் தந்தையாரும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை, அன்னலட்சுமி (மணிஅக்கா) இரட்ணசபாபதி ஆகியோரின் சகோதரரும், இளைப்பாறிய ஆசிரியர் சி. கார்த்திகேசு ஆகியோரின் மைத்துனரும் சிவானந்தராசா, சிவசோதி, கௌரி, ஆனந்தி, புஸ்பா ஆகியோரின் மாமனாரும் திரு. சண்முகதாஸ், திருமதி பவளம், திரு. விவேகானந்தன் திருமதி மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், சந்திரமலர், சாந்திமலர், கிருபாகரன், விமலன், விமாலினி ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார். அன்னாரின் ஈமச்சடங்குகள் 16-07-88 இன்று காலை 9 மணி அளவில் அன்னாரின் தாவடி இல்லத்தில் நடைபெற்று ஈமக்கிரியைகளுக்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

(5315) தகவல்: சுதாகரன்.

### திருமதி சிவஞானஅம்மா இராசரத்தினம்

உடுவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி சிவஞானஅம்மா இராசரத்தினம்15-7-88 இல் காலமானார். அன்னார் ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் பொலீஸ் இலாகா திரு. க இராசரத்தினத்தின் அருமை மனைவியும், திரு. சந்திரகுமார் (சவூதிஅரேபியா), திருமதி செல்வராணி, திருமதி சிவசக்தி (3 ஆம் வருட மாணவி ஆயுர்வேத கல்லூரி கைதடி),செல்வி ஜீவராணி (கலைப்பீட மாணவி 1 ஆம் வருடம் யாழ்.வளாகம்),செல்வி கலைவாணி(உயர் வகுப்பு மாணவி உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. இ. ஸ்ரீகரன் (நோர்வே), டாக்டர் பாலகுமார், (குமரன் வைத்தியசாலை காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்) ஆகியோரின் மாமியாரும், செல்வி டிலானியின் பேத்தியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 17-7-88 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைகளுக்காக பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
திரு. க. இராசரத்தினம்
சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (5319)

### திரு. தில்லைநாதன் பரிமேலழகன்

அல்லைப்பிட்டி தில்லைநாதன் பரிமேலழகன் 12-7-88 அன்று கனடாவில் அகால மரணமானார். இவர் அல்லைப்பிட்டி முத்து தில்லைநாதன் சிரோண்மணி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், பத்மநாதன் (அல்லைப்பிட்டி) பரிமளகாந்தன் (ஆசிரியர் நாவற்குளம் றோ. க. வித்தியாலயம் திருக்கேதீஸ்வரம் மன்னார்) பரஞ்சோதி நாதன், (டென்மார்க்) பாக்கியசீலன் (கனடா) பற்குணன் [லண்டன்] ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வநாயகி, கண்ணகை, [மாந்தை மேற்குப் பல. நோ.கூ. சங்கக் காரியாலயம் திருக்கேதீஸ்வரம்] சந்திரவதனா [டென்மார்க்] ஆகியோரின் மைத்துனருமாவார். இவரின் பூதவுடல் 16-7-88 சனிக்கிழமை கனடா நேரப்படி காலை 9.30 மணிக்கு [இலங்கை நேரப்படி சனிக்கிழமை இரவு 8 மணிக்கு] இந்து முறைப்படி தகனம் செய்யப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அல்லைப்பிட்டி
[5073] தகவல்: தி. பரிமளகாந்தன்

### வைத்திலிங்கம் துரைசாமி

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட வைத்திலிங்கம் துரைசாமி அவர்கள் 14ஆம் திகதி வியாழக்கிழமை காலமாகிவிட்டார். இவர் செல்லமுத்துவின் அன்புக் கணவரும் து. தர்மலிங்கம் (R. M. P. மிகிந்தலை) து. சாம்பசிவம் (W. Germany) து. சிவபாக்கியம் ஆகியோரின் தந்தையாரும் லோகநாதன் Ret Surveyor Superintendant குணவதி, நாகேஸ்வரி ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (16-7-88) மாலை 4,00 மணியளவில் நடைபெறும்.

தகவல்
து. தர்மலிங்கம்.
நயினாதீவு, (5072)

| | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | மன்னார் | முல்லைத்தீவு | வவுனியா | திருகோணமலை | மட்டக்களப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| மருத்துவம் | 279 | 203 | 226 | 216 | 270 | 247 | 253 |
| பல் வைத்தியம் | 276 | — | 223 | — | — | 245 | 252 |
| மிருக வைத்தியம் | 272 | — | — | — | — | 242 | 249 |
| விவசாயம் | 263 | 198 | 193 | 201 | 254 | 234 | 239 |
| உயிரியல் விஞ். | 248 | 183 | 184 | 196 | 229 | 226 | 228 |
| பொறியியல் I | 273 | 219 | 224 | 219 | 240 | 221 | 222 |
| பொறியியல் II | 266 | — | — | — | — | 217 | 217 |
| பௌதீக விஞ். | 218 | 209 | 180 | 181 | 195 | 181 | 181 |
| முகாமைத்துவம் | 264 | 249 | 230 | 241 | 236 | 243 | 236 |
| வர்த்தகம் | 246 | 241 | 221 | 226 | 226 | 229 | 222 |
| சட்டம் | 245 | 221 | 216 | 193 | 215 | 233 | 235 |
| கலை | 239 | 240 | 238 | 237 | 234 | 232 | 239 |
| கட்டடக்கலை | —. | — | — | — | — | — | — |
| கணி. நில அளவை | 263 | — | — | — | — | — | — |

## என் கண்முன்னே.....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வதற்காக கண்டாவளையில் இருந்து பரந்தனுக்கு வந்தேன்.

பதினொருமணியளவில் புடவைவாங்குவதற்காக புடவைக் கடை ஒன்றுக்குள் நுழைந்தேன். திடீரென துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

அங்கு குழுமி நின்ற மக்கள் நாலா புறமும் சிதறி ஓடினார்கள். நான் நின்ற கடையை நோக்கியும் துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

கடைக்குள் நின்றவர்கள் ''ஐயோ...ஐயோ'' என்று கத்தியும் வேட்டுகள் நிறுத்தப்படவில்லை.

ஒரு வேட்டு எனது கையைத் தாக்கியது. கடைக்குள் இருந்தபலர் துப்பாக்கி வேட்டுக்கு இலக்கானார்கள். அவர்களில் இரண்டுபேர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். அங்கு உயிரிழந்தவர்களுள் ஒருவர் இளம் பெண்.

கடைக்குள் பலர் காயமடைந்த நிலையில் முனகிக் கொண்டு கிடந்தனர்.

சுமார் ஒரு மணிநேரத்தின் பின்னர் அமைதிப் படையினர் காயமடைந்தவர்களை அங்கிருந்த வாகனம் ஒன்றில்ஏற்றிக் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அதன் பின்னர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக் குஎன்னைக்கொண்டு வந்தனர்.

-இவ்வாறு நாகராசா மகேஸ்வரி தெரிவித்தார். (உ-10)

### ஏழுபேர் மீது வழக்கு!

நிக்கரகுவா கிளர்ச்சியாளருக்கு சட்டவிரோதமாக ஆயுதங்களை வழங்கியதாக ஏழுபேர்மீது அமெரிக்க நீதிமன்றத்தில் அரசு வழக்குத் தாக்குதல் செய்யப்பட்டது.

ஏழுபேரில் ஒருவர் கொன்முக் கிளர்ச்சித் தலைவர் ஒருவரின் சகோதரர் என்றும் அறிவிக்கப்பட்டது. (எ)

## கண்ணி......

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பகுதிகளைச் சுற்றிவளைத்து தேடுதல் மேற்கொண்டதாகவும் அறிய வருகிறது. செய்தி எழுதப்படும் வரை சேத விவரங்கள் தெரியவில்லை.

பிரஸ்தாப கண்ணி வெடிச் சம்பவத்தை அடுத்து முறிகண்டிப் பகுதியில் பதற்றம் நிலவியது. கடைகள் ஒற்றைக் கதவிலேயே திறந்திருந்தன. (அ-9)

## பரந்தன் - - - - - - -

சிகிச்சைக்காக யாழ் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்டனர் ஏனையோர்கிளிநொச்சி பரந்தன் ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த மூவரின் சடலங்கள் உடனடியாகக் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப் பட்டன. மற்றைய இருவரின் சடலங்கள் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு அருகில் கடை ஒன்றினுள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

இந்தச் சம்பவத்தையடுத்து இப்பகுதியை இந்தியப் படையினர் சுற்றிவளைத்தனர். பலர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இப்பகுதியூடான வாகனப் போக்குவரத்துகளும் நேற்று மாலை வரை தடைப்பட்டிருந்தன. [உ-9-10]

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம் ஜூலை 16

யாழ் தெய்வீகத் திருக்குறள் மன்றத்தின் ஆதரவில் கந்தர்மடம் சிவகுருநாதபீட வேதாந்த மடத்தில் இன்று (சனி) பிற்பகல் 4.30 மணியளவில் திருமந்திரச் செம்மல் திரு. எஸ். இராமநாதன் திருமந்திரச்சொற்பொழிவு நிகழ்த்துவார் என்று அறிவிக்கப்படுகிறது. (உ-எ)

## மூன்றில்.......

ஸ்ரீ. ல. சு. கட்சியே பெற்றது.

நான்கு தொகுதிகளிலும் மொத்தமாக 90 ஆயிரத்து 458 வாக்குகளை ஸ்ரீ. ல. சு. கட்சி பெற்றது. ஐ. தே. கட்சிக்கு 89 ஆயிரத்து 952 வாக்குகளே கிடைத்தன.

தேர்தல் முடிவுகள் வருமாறு:-

**வெலிமட**

★ ரவீந்திர சமரவீர [ஐ. தே. க]- 17.822
★ ஏ. ஆர். மதுமபண்டா [ஸ்ரீ.ல.சு.க]-16,772

**கெக்கிராவ**

★ லால். டி. கமகே [ஐ. தே. க] - 17,646
★ ஏ. எம். ஜி. அதிகாரி [ஸ்ரீ.ல.சு.க]-17,285

**கட்டுகம்பொல**

★ உபாலி தஸநாயக்கா [ஐ.தே.க]-27,415
★ அனுரா யாப்பா [ஸ்ரீ.ல.சு.க]-24,547

**இரத்தினபுரி**

★ நந்தா எல்லவல [ஸ்ரீ.ல.சு.க] - 31,854
★ எஸ். ஜி. புஞ்சிநிலமே - 27, 069

வெலிமட தொகுதியில் மூன்று பேரும், கெக்கிராவை தொகுதியில் ஐந்து பேரும், கட்டுகம்பொல தொகுதியில் ஆறுபேரும், இரத்தினபுரியில் ஏழு பேரும் சுயேச்சையாய் போட்டியிட்டு கட்டுப் பணம் இழந்தனர். [உ]


**A/L 90**
சனி, ஞாயிறு வகுப்பு

1. 15: பிரயோக கணிதம்
2. 30: தூய கணிதம்

ஆரம்பம்: 23. 7. 88

ஆசிரியர்: திரு. ரவி மோகன்
யாழ்ப்பாணம்.

(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

(5048)

**BECON**
156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**O/L** பகல் நேரவகுப்பு

கணிதம் — தயாபரன்
விஞ்ஞானம் — ரவிந்திரன்
தமிழ் / இந்துசமயம் — தாஸ்
சமூகக்கல்வி — பூபாலசிங்கம்
ஆங்கிலம் — குமார்
வர்த்தகம் — ஜோதீஸ்வரன்

ஆரம்பம் - 18- 07- 88
8 - 30 a . m
மாலை நேர வகுப்பு
ஆரம்பம் - 3 - 30 p . m
(சி-5856)

**BECON**
156/3 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கலை, வர்த்தகம்
**A/L 90**

பொருளியல்:- வரதராஜன்
கணக்கியல்:- மரியதாஸ்
வர்த்தகம்:- ரட்ணம்
அளவையியல்:- S. S. மனோகரன்
தமிழ்:- செல்விஸ்ரீமீரா
இந்து நாகரிகம்:- ஜோதீஸ்வரன்
அரசியல்:- மனோகரன்

ஆரம்பம்: 16-7-88
சனி காலை 8-00 மணி
C-5855)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களாது அச்சகத்தில் 16-07-1988ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna 01 Saturday 16 th July 1988.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்க நகைகளை நல்ல விலையில் விற்று உடனே பணத்தைப் பெற்றிட நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.
**New Eelam Jewellery Mart**
No. 423, (247) K. K. S. Road, Sivan Kovilady, Jaffna.
(குளிரூட்டப்பட்ட தனியார் வர்த்தக ஸ்தாபனம்)
Prop: RAJAKOPAL CHANDRAN.

சஞ்சீவி
# சஞ்சிகை
16 - 7 - 1988 சனிக்கிழமை

தங்க நகைகளை நல்ல விலையில் விற்று உடனே பணத்தைப் பெற்றிட நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.
**நியூ ஈழம் ஜுவல்லரி மாட்**
இல. 423 (247) கே. கே. எஸ். வீதி, சிவன் கோவிலடி யாழ்ப்பாணம்.
(குளிரூட்டப்பட்ட தனியார் வர்த்தக ஸ்தாபனம்)
உரிமையாளர்:
இராஜகோபால் சந்திரன்

# கொலைகார பொல்பொட் கோஷ்டி மீண்டும் ஆட்சியைப் பிடிக்குமா?

## கம்பூச்சியாவில் இரத்தக் களறியை தவிர்க்க ஜூலை 25இல் ஜாகர்த்தாவில் சமரச மாநாடு

**1978** ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வியட்நாம் துருப்புகள் திடீர் என்று கம்பூச்சியாவுக்குள் படை எடுத்தன. கம்பூச்சியாவில் அப்போது ஆட்சியிலிருந்த கமெர்ரூச் தலைவர் பொல்பொட் தப்பி ஓடினார்.

ஹெங்சாம்ரின் என்பவர் தலைமையில் கம்பூச்சியாவில் புதிய அரசாங்கம் ஒன்று வியட்நாம் துருப்புக்களின் உதவியுடன் நிறுவப்பட்டது.

இந்தச் சம்பவம் நடந்து இன்று 10வருடங்கள் கழிந்து விட்டன.

சர்வதேச அரங்கில் அன்று இருந்த நிலை இன்று இல்லை. சர்வதேச நிர்ப்பந்தங்கள், ராஜ தந்திர அழுத்தங்கள், பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் தனது துருப்புகளை கம்பூச்சியாவிலிருந்து வாபஸ் பெறப் போவதாக வியட்நாம் அறிவித்திருக்கிறது.

கம்பூச்சியாவில் உள்ள 1 லட்சத்து 20 ஆயிரம் துருப்புகளில் 50 ஆயிரம் துருப்புகளை இம்மாதமும் ஏனைய துருப்புக்களை படிப்படியாக 1990 ஆம் ஆண்டளவிலும் வாபஸ் பெறப் போவதாக வியட்நாம் அறிவித்திருக்கிறது.

கம்பூச்சியாவில் ஹெங்சாம்ரின் அரசுக்கு முட்டுக் கொடுத்து வந்த தனது படைகளை வியட்நாம் வாபஸ் பெறும் பட்சத்தில் கம்பூச்சியாவில் ஹெங்சாம்ரின் அரசு நீடிக்குமா? அப்படியானல் யார் ஆட்சிக்கு வருவார்கள்?

இதுவே இன்றுள்ள முக்கிய கேள்வி ஆகும்.

★ தனது மூன்றரை வருட ஆட்சிக்காலத்தில் சுமார் 10 லட்சம் மக்களைப் படுகொலை செய்த பொல்பொட் தலைமையிலான கமெர்ரூச் இயக்கம்.

★ சொன்சான் என்பவரைத் தலைவராகக் கொண்ட கமெர் மக்கள் தேசிய விடுதலை முன்னணி (K. P. N. L. F).

★ கம்பூச்சியாவின் முன்னுள் பிரதமர் நொறடன் சிஹானூக் தலைமையிலான பிரிவினர்.

இந்த மூன்று குழுக்களும் கடந்த காலங்களில் இளவரசர் சிஹானூக் தலைமையில் ஒன்ருக இணைந்து வியட்நாம் ஆதரவு ஹெங்சம்ரின் அரசுக்கு எதிராகப் போராடி வந்தன.

இந்த மூன்று அரச எதிர்ப்புக் குழுவினரையும் வியட்நாம் ஆதரவு ஹெங்சம்ரின் ஆட்சியாளரையும் சந்திக்க வைக்கும் யோசனைகள் சமீபத்தில் பாங்கொக்கில் நடந்த "ஆசியான்" வெளிவிவகார அமைச்சர்கள் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டன.

இதன்படி இம்மாதம் 25 ஆம் திகதி இந்த நான்கு தரப்பினரும் இந்தோனேஷியாவின் தலைநகரான ஜாகர்த்தாவில் சந்தித்து முதல்கட்டப் பேச்சுவார்த்தை நடத்த உள்ளனர். இரண்டாம் கட்டப் பேச்சு வார்த்தையிலேயே வியட்நாம் கலந்து கொள்ளும்.

'ஆசியான்' அமைப்பில் இந்தோனேஷியாவும் ஓர் அங்கத்துவ நாடு. தாய்லாந்து, பிலிப்பீன்ஸ், மலேசியா, சிங்கப்பூர், புரூணி ஆகியவை ஏனைய அங்கத்துவ நாடுகள்.

இதில் வியட்நாம், கம்பூச்சிய அகதிகளால் பெரும் அளவில் பாதிக்கப்பட்டுள்ள நாடுகள் தாய்லாந்தும், மலேசியா'வும். இதனால்தான் 'ஆசியான் இந்த விவகாரத்தில் அதிக அக்கறை காட்டி வருகிறது.

### 10 லட்சம் அகதிகள்

தாய்லாந்தில் மட்டும் 3 லட்சம் கம்பூச்சிய அகதிகளும் 4 லட்சம் வியட்நாம் அகதிகளும் தஞ்சம் அடைந்துள்ளனர்.

1975 ஆம் ஆண்டு தென் வியட்நாமில் அமெரிக்க ஆதரவு நூயன் வான்தியூவின் அரசாங்கம் வீழ்ச்சி அடைந்து வியட்கொங் கெரில்லாக்கள் ஆட்சியைக் கைப்பற்றிய நாளில் இருந்து 10 லட்சம் வியட்நாமியர் வரை அகதிகளாகி வெளியேறி உள்ளனர்.

இவர்களில் ஏராளமானேர் படகுகளின் (Boat People) உதவியுடன் ஹொங்கொங், மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்றனர்.

சிலர் தரைமார்க்கமாக யுத்த நெருக்கடி மிக்க கம்பூச்சியாவைக் கடந்து தாய்லாந்தை அடைந்தனர்.

இந்த அகதிகளுடன் கம்பூச்சியாவின் மூன்று அரச எதிர்ப்புக் குழுக்களும் தாய்லாந்து எல்லைக்கு உள்ளேயே முகாம் இட்டுத் தமது எதிர்ப்பு நட

ரிக்க ஆதரவு லொன்நொல் ஆட்சி கம்பூச்சியாவில் கவிழ்க்கப்பட்டபோது கமெர்ரூச் கெரில்லாக்கள் ஆட்சியைக் கைப்பற்றி இருந்தனர்.

அதன் தலைவர் பொல்பொட்டின் மூன்றரை வருடகால ஆட்சியில் சுமார் 10



பொல்பொட் தலைமையிலான கமெர்ரூச் கெரில்லாக்கள்.

வடிக்கைகளை ஹெங்சம்றின் அரசுக்கு எதிராக மேற்கொண்டு வருகின்றன,

### பொல்பொட்

இந்த மூன்று குழுக்களிலும் பொல்பொட் தலைமையிலான கமெர்ரூச் குழுவினரே பலம் வாய்ந்த கெரில்லாக்குழுவினராகக் கருதப்படுகின்றனர்.

கமெர்ரூச் கெரில்லா இயக்கத்தில் மட்டும் 35 ஆயிரம் முதல் 40 ஆயிரம் வரையிலான கெரில்லாக்கள் உள்ளனர்.

1975 ஆம் ஆண்டு அமெ

லட்சம் கம்பூச்சிய[?] மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

உகண்டாவில் தன்ஸானியப்படைகளின் உதவியுடன் இடி அமீன் எப்படி பதவியில் இருந்து துரத்தப்பட்டாரோ அதே நிலைதான் 1978 டிசம்பரில் பொல்பொட்டுக்கும் ஏற்பட்டது.

அன்றில் இருந்து தாய்லாந்து எல்லையில் பொல்பொட் இன்றும் மறைந்து வாழ்ந்து வருகிருர்.

பொல்பொட் தற்போது பலவீனமுற்று இருப்பதாக

தகவல்கள் தெரிவிக்கின்றன அவர் தலைமையிலான கமெர்ரூச் கெரில்லாக்கள் கம்பூச்சியாவில் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற முஸ்தீபு செய்து வருகின்றனர்.

### ஆயுதக்கடத்தல்

தாய்லாந்து எல்லைக்குள் கமெர்ரூச் நடத்தும் அகதி முகாம்களில் மட்டும் 70 ஆயிரம் கம்பூச்சியர்கள் தற்போது இருந்து வருகிருர்கள்.

இந்த அகதிகள் மூலம் கம்பூச்சியாவுக்குள் தற்போது கமெர்ரூச் கெரில்லாக்கள் பெரும் அளவு சீன தயாரிப்பு ஆயுதங்களைக் கடத்தி வருகின்றனர்.

நிலக்கண்ணிகள், ரொக்கெட் லோஞ்சர்கள், ஏ. கே. 47, வெடி மருந்துகள், கிரனேட், உந்துவிசை ரொக்கெட்டுகள் மற்றும் அரிசி போன்றவற்றை கம்பூச்சியக் கிராமங்களுக்குள் எடுத்துச் சென்று பதுக்குவதற்கு கமெர்ரூச் கெரில்லாக்கள் தமது முகாம்களில் உள்ள அகதிகளையே பயன் படுத்துகின்றனர்.

வியட்நாம் படைகள் வாபஸ் ஆகும் பட்சத்தில் கம்பூச்சியா மீது பெரும் அளவுதாக்குதலை மேற்கொள்ளும் விதத்தில் கமெர்ரூச் கெரில்லாக்கள் ஆயுதங்களையும் ஆட்பலத்தையும் தயார்ப்படுத்தி வருகின்றனர்.

மூன்று கெரில்லாப்பிரிவுகளும் கூட்டணி அமைத்துள்ள போதிலும் கடந்த சில வருடங்களாக வியட்நாம் துருப்புக்களுடன் இடம்பெற்றநேரடி மோதல்களில் இளவரசர் சிஹானூக்கின் படைகளும் சொன்சானின் படைகளும் பெரும் இழப்புகளை அடைந்தன.

தமக்கு ஏற்படக்கூடிய உயிரிழப்புகளையும் ஆயுத இழப்புகளையும் கமெர்ரூச் கெரில்லாக்கள் தவிர்த்து வந்தனர். அதிகாரத்தைக் கைப்பற்றும் இறுதிப் போராட்டம் ஒன்றுக்கு தம்மைத் தயார்ப்படுத்துவதிலேயே கமெர்ரூச் கவனம் செலுத்தி வந்தது.

K. P. N. L. F என்று அழைக்கப்படும் கமெர் மக்கள் தேசிய விடுதலை முன்னணியையும் இளவரசர் சிஹானூக் தலைமையிலான பிரிவையும் அமெரிக்காவும் கம்யூனிஸ்ட் அல்லாத நாடுகளும் ஆதரித்து வருகின்றன.

பொல்பொட் தலைமையிலான கமெர்ரூச்சை சீன ஆதரிக்கிறது.

சீனவே இவர்களுக்கு முழு ஆயுத உதவிகளையும் வழங்கி வருகிறது.

### பொருளாதார நெருக்கடி

கம்பூச்சியாவில் இருந்து தனது படைகளை வாபஸ் பெறும் உறுதிமொழி காப்பாற்றப்படும் என்பதில் மேற்கு நாடுகள் நம்பிக்கை கொண்டுள்ளன.

வியட்நாம் மீதான பொருளாதார. ராஜதந்திர அழுத்தங்கள் குறிப்பிட்ட காலத்துக்கு முன்னதாகவே படை வாபஸைத் துரிதப்படுத்தினலும் ஆச்சரியப்படுவதற்கு

ஆசியானுடனும் அமெரிக்காவுடனும் மீண்டும் நல்லுறவை ஏற்படுத்துவதில் வியட்நாம் அதிக அக்கறை காட்டி வருகிறது.

லாவோஸில் உள்ள தனது 40 ஆயிரம் துருப்புக்களில் 20 ஆயிரம் துருப்புக்களை வியட்நாம் வாபஸ் பெற்றுக் கொண்டிருக்கிறது.

அதிருப்தியாளர்கள் என்று சந்தேகிக்கப்பட்டு வியட்நாமில் மறுகல்வி முகாம்களில் வைக்கப்பட்டிருந்த சுமார் 10 ஆயிரம் வியட்நாமியர் அமெரிக்காவுக்குச் சென்று குடியேற வியட்நாம் அரசு இணக்கம் தெரிவித்திருந்தது.

### சோவியத் அக்கறை

கம்பூச்சியப் பிரச்சினையைத் தீர்ப்பதில் சோவியத் யூனியனும் அதிக அக்கறைகாட்டி வருகிறது.

கம்பூச்சியாவில் உள்ள வியட்நாம் துருப்புகளுக்காக சோவியத் யூனியன் தினமும் 30 லட்சம் டாலர்களைச் செலவிட்டுவருகிறது.

அத்துடன் இப்பிரச்சினை சுமுகமாகத் தீரும்பட்சத்தில் சீனவுடனன தனது உறவு

**உலக உலா**
என்.பி. சீலன்

இல்லை என்று கூறப்படுகிறது.

வியட்நாமின் வட பகுதியிலும் மத்திய பகுதியிலும் நிலவும் கடும் வரட்சியால் சுமார் 40 லட்சம் வியட்நாம் விவசாயிகள் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளனர்.

வியட்நாமில் 18 மாதகால பொருளாதார சீரமைப்புத் திட்டம் வகுக்கப்பட்டுள்ள போதிலும் பொருளாதார நெருக்கடிகள் நீடிக்கின்றன.

இந்த நெருக்கடிகளினல்

அபிவிருத்தி அடைய வாய்ப்பு ஏற்படும் என்றும் சோவியத் யூனியன் கருதுகிறது.

கம்பூச்சியாவில் இருந்து வியட்நாம் படை வாபஸ், உண்மையில் அமெரிக்க அதிபர் றேகனின் சித்தாந்தங்களுக்குக் கிடைத்த வெற்றியாகவே கருதப்படுகிறது.

அதற்காக கம்பூச்சிய மக்களை இது மீண்டும் இரத்தக் களறியை நோக்கி இட்டுச் செல்லக்கூடாது. ★

## யாழ். நகர வாசிகளே!

காலையில் எழுந்ததும் உதயன் வாங்குவதற்காகக் கடைக்குச் செல்கிறீர்களா?

உங்களுக்கு ஏன் அந்தச் சிரமம்?

**உடனடியாக உதயசேவையில் சேர்ந்துவிடுங்கள்!**

**விடியும் வேளை உதயன் உங்கள் வீடு தேடி ஓடி வருவான்!!**




**இலவசம்! இலவசம்!!**

யாழ். மாநகர பிரதேசத்திற்குள் வதியும் வாசகர்களுக்கு
**விநியோகக் கட்டணம் எதுவுமில்லை.**

தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:
விநியோக முகாமையாளர்,
உதயன் / சஞ்சீவி
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# மோசடியின் மறுபெயர் தேர்தலா?

**தென்** ஆசிய நாடுகளுள் பரவி வரும் ஒரு நோய் நமது நாட்டிற்கும் வந்து விட்டதோ?

இந்தச் சந்தேகத்தின் மத்தியில் நான்கு இடைத் தேர்தல்கள் நடந்து முடிந்து விட்டன.

நல்ல படியாக நடந்தனவா என்பது குறித்து பல தரப்பட்ட கருத்துக்கள்.

ஒன்று மட்டும் உறுதியாகி விட்டது.

தேர்தல்கள் உரிய காலத்தில் வருங் காலத்தில் நடக்குமா என்பது குறித்து மட்டும் மக்கள் நம்பிக்கை இழக்கவில்லை;

நடக்கும் தேர்தல்களும் நாணயமானவையாக அமையுமா என்பது குறித்தும் மக்கள் மனதில் சந்தேகம் வேருன்றத் தொடங்கி விட்டது.

நமது நாடு சுதந்திரம் பெற்று நாற்பது வயதைத் தாண்டி விட்டது.

எட்டுப் பொதுத் தேர்தல்களைக் கண்டு விட்டன. அடிக்கடி வந்த இடைத்தேர்தல்கள் இக்கணக்கில் வரா.

1977 பொதுத் தேர்தலின் பின்னர் ஒரு சர்வசன வாக்கெடுப்பு, ஒரு ஜனதிபதித் தேர்தல் ஆகியவற்றையும் மக்கள் சந்தித்து விட்டார்கள்.

அவற்றைவிட நகரசபை, மாநகரசபை என்ற குட்டித் தேர்தல்களும் நடந்து முடிந்தன.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும் பொதுத் தேர்தல் [illegible] சர்வசன வாக்கெடுப்பு என்ற [illegible] இடப்பட்டது.

அதன் பின்னர் பல இடைத் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

இந்த ஆண்டில் மாகாண சபைத் தேர்தல்கள் ஏழு நடத்தப்பட்டன.

தேர்தல் ஆண்டில் தேர்தல்களின் எண்ணிக்கையும் கூடியுள்ளன. அதே நேரத்தில் மக்களின் அவநம்பிக்கையும் அதிகரிக்கத் தொடங்கி உள்ளது.

தேர்தலில் மோசடி வாக்குச் சீட்டுக்கள் கைப்பற்றப்படுவது, ஆள் மாருட்டங்கள் இவை எல்லாம் தென் ஆசியாவின் பல நாடுகளில் சர்வ சாதாரணமாக இடம்பெற்று வருகின்றன.

பங்களாதேஷ், பாகிஸ்தான் நாடுகளில் தேர்தல்கள் என்பது வெறும் மோசடியானவை என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன,

அண்டைநாடான இந்தியாவில் கூட இந்த நிலை உருவாகி வருவதாக எதிர்க்கட்சிகள் குறைகூறி வருகின்றன.

இதனல் தென் ஆசிய நாடுகளில் உள்ள எதிர்க்கட்சிகள்

தேர்தல்களைக் கண்காணிக்க வெளிநாட்டு கண்காணிப்பாளர் குழு அழைக்கப்படவேண்டும் என்று கோரி வருகின்றன.

இக்கோரிக்கை நமது நாட்டிலும் எழுப்பப்பட்டுள்ளது.

எழுப்பியுள்ளவர் சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி. சிறிமாவோ பண்டார நாயக்கா.

நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தல்களில் இடம் பெற்றதாகக் கூறப்படும் ஊழல் நடவடிக்கைகள், இக்கோரிக்கைக்கு வலுவூட்டி வருகின்றன.

அதேவேளை பழம்பெரும் அரசியல் தலைவரான டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா இக்கோரிக்கையை எதிர்த்துள்ளனர்.

'வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழு வேண்டாம்; வாக்காளர் தேசிய அடையாளக் கார்டுடன் வந்து வாக்களிக்க வேண்டும்.—என்று சட்டம் கொண்டு வரவேண்டும் என டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா கேட்டுள்ளார். தேர்தல் ஆணையாளரும் இதனையே வலியுறுத்தி இருக்கிருர்.

கொல்வினின் கோரிக்கை குறித்து அரசு இன்னும் பதிலளிக்கவில்லை; மௌனம் சாதிக்கிறது.

ஆனல் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் கோரிக்கை குறித்து தர்மிஷ்டர் பதில் கூறிவிட்டார்.

'சிறிமாவோவின் தலையைப் பரிசோதிக்க வேண்டும்'— என்பதுதான் பதினெரு ஆண்டுகளாகப் பதவியில் இருக்கும் தர்மிஷ்டரின் பதில்.

மக்களின் பதிலை தர்மிஷ்டர் அறிந்துகொள்ள நாணயமான தேர்தல் நடத்தப்படுமா?

இது கொழும்பு அரசியல் அவதானிகளின் கவலை. ★

**உள்ளும் புறமும்**
குறுமுனி

## பொது அறிவுப் போட்டி இல: 8

முடிவுகள் வருமாறு;

**முதலாவது பரிசு:**
சி. வல்லிபுரம்
கோவில்காடு,
பளை.

**இரண்டாவது பரிசு:**
செல்வி. அனுசா மேதர்,
195, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

**மூன்ருவது பரிசு:**
ரி. வை. கோபு,
'யோகஸ்தான்'
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசனத்தை ஒடித்து எழுதிவிட்டால் அது "புதுக் கவிதை" ஆகிவிடுமா?

(பகுதி இரண்டு)
சென்ற வாரத் தொடர்ச்சி)

மரபு யாப்பில் (Conventional metre) எழுதப்படாத புதிய கவிதை வடிவங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். 1. கவிவசனம் (Poetic prose) 2. வசனகவிதை (Prose poem) 3. புதுக்கவிதை (New verse).

## கவிவசனம்

கவிவசனத்தில் வசனத்தன்மை மிகுந்தும் கவிப்பண்பு குறைந்தும் இருக்கும். மரபு யாப்பின் சில சந்த ஒழுங்கும், எதுகை, மோனை போன்ற தொடைகளும் இடையிடையே வரும்.

குமரியொடு வடவிமயத்
தொருமொழி
வைத் துலகாண்ட
சேரலாதற்குத்
திகழொளி ஞாயிற்றுச்
சோழன்
மகளீன்ற மைந்தன்
கொங்கர்
செங்களம் வேட்டுக்
கங்கைப்
பேர்யாற்றுக் கரைபோகிய
செங்குட்டுவன்
சினஞ் செருக்கி வஞ்சியுள்
வந்திருந்தகாலை.........

சிலப்பதிகாரத்தில் காணப்படும் இந்த உரைப்பாட்டு மடையை முற்காலத்தில் எழுதப்பட்ட கவிவசனத்திற்கு உதாரணமாகக் காட்டலாம்.

தலையறுத்த வீரர்கதை
பாடுவதால்
தலையகற்றிப் பாடுகின்றேன்
நானும்—அவர்
தொடை தட்டித்
துரோகிகளை வீழ்த்தியதால்
தொடை தட்டும்
என்பாட்டும்! என் கவிதை,
யாப்பின்றிப் போனாலும்
போகட்டும்-நம்நாடு
மொழி, மானம்,
உணர்வெல்லாம்
காப்பின்றிப் போதல்
கூடாதெனும்
கொள்கையொன்றால்
வாய்ப்பின்றிப் போனாலும்
செய்யுள் கற்கக்
காய்ப்பின்றி நிற்கின்ற
மரமாக ஆகாமல் நெஞ்சில்
ஊறுகின்ற உணர்ச்சிகளை
வரிகளாக்கிக் கொள்கை
மாறுகின்ற கோடரிகள்
உணர்வதற்கு ஒன்று
சொல்வேன்.

— கலைஞர் மு. கருணாநிதியின் இந்தக் கவிதை இக்காலத்துக் கவிவசனத்திற்குச் சான்றாகக் கொள்ளலாம்.

## வசனகவிதை

வசனகவிதை சொற்றொடர் அமைப்பில் வசன வடிவத்தைக்கொண்டிருக்கும். மரபு யாப்பின் சந்த ஒழுங்குகள் இதில் காணமுடியாது. அழுத்தத்தையோ, குரல் ஏற்ற இறக்கத்தையோ காட்டும் வகையில் வாக்கியங்கள் அடிகளாசப் பிரிக்கப்பட்டிராது. ஆனாலும் சொல்லும் பொருளாலும், முறையாலும் கவித்தன்மை பெற்றிருக்கும். அதாவது வசன வடிவில் இருந்தாலும் கட்டுரையாக இராது.

குழந்தைகள் கண்ணீர்
சிந்தும்போது
வானத்து நட்சத்திரங்கள்
சன்னத்தில் உதிர்கின்றன.
அவைகள் சிரிக்கும்போது
தேவதைகள்
பூத்தூவுகிறார்கள்!

காமராசனின் இந்தக் கவிதை வசனகவிதைக்குச் சான்றாகும். புதுக்கவிதை என்ற பெயரில் இன்று எழுதப்படுவனவற்றுள் பெரும்பாலானவை வசன கவிதைகளே.

## புதுக்கவிதை

புதுக்கவிதை வசனத்தன்மைக்கு முற்றிலும் மாறுபட்டது.

அது ஒரு புறத்தில் வசனத்தின் உணர்வைக் கிளராத சொற்றொடர் அமைப்பில் இருந்தும் ஒலி நயமற்ற வறண்ட தன்மையிலிருந்தும், விடுபட்டு நிற்கிறது.

மற்றொருபுறம் செய்யுளின் செயற்கைத் தளைகளில் இருந்தும், வெறும் கணிதத்தன்மையான செயற்கைச் சந்த ஒழுங்கிலிருந்தும் (Metronome) விடுபட்டு நிற்கிறது. இதனால் தான் இதைச் சுதந்திரக் கவிதை (Free Verse) என்றும் அழைக்கிறார்கள். ஆனால் இதன் பொருள் அது எந்தக் கட்டுப்பாட்டிலும் அடங்காது என்பதல்ல.

இயற்கைக்கு மாறான பொருள் வெளிப்பாட்டிற்குத் துணை புரியாது தடை செய்கின்ற செயற்கைத் தளைகளையே புதுக்கவிதை மறுக்கிறது.

புதுக்கவிதை கூறப்படும் கருத்துக்கும் உணர்வுக்கும் ஏற்ற இயல்பான வடிவத்தை விரும்புகிறது. எனவே அது வசனத்தின் வறண்ட தன்மையையும், யாப்பின் செயற்கைச்சந்தத்தையும் உதறிவிட்டு உணர்வு வெளிப்பாட்டிற்கும், குரல் ஏற்ற இறக்கத்துக்கும் துணைபுரியும் இயற்கையான பேச்சுநிலையை மேற்கொள்கிறது. மனிதனுடைய பேச்சில் அமைந்திருக்கும் இயல்பான சப்தமே (Speech rhythm) புதுக்கவிதையின் சந்த ஒழுங்காக அமைகிறது.

இயல்பான பேச்சில் உணர்வு நிலைக்கேற்ப வாக்கியங்கள் நீண்டும், குறுகியும், தர்க்க ஒழுங்கற்றும், முழுமை பெறாதும் அமைவது போன்றே புதுக்கவிதையிலும் அமைகின்றன.

யாரிது...?
இதுதான் என் பிறப்பா...?
இது பிரதி,
இரட்டை
எனது புதிய மறுமை
பிறப்பல்ல.

இந்தக் கவிதையில் பேச்சு எப்படி எங்கே விட்டொலிக்குமோ அந்த முறையில் அடிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கருத்துக்கும் உணர்வு நிலைக்கும் ஏற்ப வாக்கியங்கள் முழுமை பெறுதவைகளாக, சிறியனவாக அமைந்திருக்கின்றன.

புதுக்கவிதை இந்தவகையில் உணர்வோட்டமுடைய தனிமொழியாக (Soliloquy) உட்பேச்சாக (Inner Speech) அமைகிறது. புதுக்கவிதைப் பேச்சுப்போலவே ஒவ்வொரு அடியிலும் கருத்து, உணர்வு வெளிப்பாட்டிற்கேற்ற சந்தத்தைப் பெறுகிறது. இந்தச் சந்த அமைப்பு உணர்வோடு தொடர்புடைய சந்தம் ஆதலின் இது தொடர்பு நிலைச் சந்தம் (Associationat rhythm) எனப்படுகிறது. இதை இயற்கைச்சந்தம் (Natural rhythm) என்று அழைக்கலாம்.

புதுக்கவிதையின் அடி அமைப்பு குரல் ஏற்ற இறக்கத்தையும், அழுத்தத்தையும் (Stress) காட்டும்வகையில் அமைக்கப்படுகிறது.

நீ நிற்கும்
சிலுவையின்
நிழலில் கூட
ஆணிகள்

இந்தக்கவிதையின் ஒவ்வொரு அடியின் தொடக்கமும் அழுத்தம் பெறுவதால் அங்கு நிற்கும் சொற்கள் மிகுதியான அதிர்வுகளை உண்டாக்குகின்றன. இந்தக் குரல் ஏற்ற இறக்கம், அழுத்தம் ஆகியவற்றை உணர்த்த எதுகை மோனைகளும் பயன்படும்.

### - கவிஞர் அப்துல் ரகுமான் -

புதுக்கவிதை மரபு யாப்பை முற்றிலும் கைவிட்டு விடவில்லை. மரபு யாப்பில் புதுக்கவிதை எழுதுவோரும் உண்டு. வேண்டிய இடங்களில் யாப்பின் சந்த ஒழுங்கு, எதுகை மோனை ஆகியவற்றைப் பயன்படுத்தி, வேண்டாத இடங்களில் விட்டு விடுவதும்உண்டு. சந்தத்தை மட்டும் எடுத்துக் கொண்டு செந்தொடையாக எழுதுவதும் உண்டு.

ஐயா உம் விரல்கள்
மூன்று கிடந்தன
பெற்றுக் கொள்ளும்
அம்மணி உனதும் கூட

ஞானக் கூத்தனின் இந்தக் கவிதை விளம் மா தேமா என்ற வாய்பாடுடைய அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தத்தின் சந்தஒழுங்கை மட்டும் கையாண்டு கொண்டு எதுகை மோனைகளைத் தவிர்த்துச் செந்தொடையாக அமைந்திருப்பதைக் காணலாம்.

கவிஞர்களின் மனப்போக்கிற்கும் நோக்கத்திற்கும் ஏற்பப் புதுக்கவிதைப் புதுப் புது வடிவச் சோதனைகளையும் மேற்கொள்கிறது. சொற்களையும் சொற்றொடர்களையும் சிதைத்துக்கையாள்வதும் இத்தகைய சோதனைகளுள் ஒன்று.

போன யுகத்தில்
படித்த தோழி
எவளாவதொருத்-
தி
வரமாட்டாளா......

என்ற சி. மணியின் கவிதையில் "ஒருத்தி" என்ற சொல்லின் கடைசி எழுத்தான 'தி' பிரிந்து தனித்து நிற்பதோடு "தீ" என நீண்டும் ஒலிக்கிறது. இந்தக் கவிதையின் பொருளான ஓர் இளைஞனின் பாலுணர்வு வேதனையை உக்கிரமாக உணர்த்துவதற்கு இந்தச் சொற்சிதைவும், மாற்றமும் கையாளப்பட்டுள்ளன. "தீ" என்பது நெருப்பு என்ற பொருளையும் தந்து கவிதைப் பொருளுக்கு மேலும் வேகத்தைத் தருகிறது.

இதே கவிதையில் மற்றோரிடத்தில் உள்ள,

எதிர் வீட்டுக் குலவிளக்கு
அத்தீ ராத்தீ ராப்புதிர்.

என்ற வரிகளில் "அத் தீராத் தீராப்புதிர்" என்ற வாக்கியம் சிதைக்கப்பட்டு நிற்கும் நிலையில் மற்றொரு பொருளையும் தருவதைக் காணலாம். அவசியமானால் சிலேடையும் கூடப் புதுக்கவிதைக்கு விலக்கல்ல என்பதையும் இதனால் அறிந்து கொள்ளலாம்.

இயல்பான பேச்சுச் சந்தமே பெரும்பாலும் புதுக்கவிதையின் அடி அமைப்புக்குக் காரணம் என்றாலும், சில நோக்கங்களுக்காக இந்த இயல்பான சந்தம் சிதைக்கப்பட்டு அழுத்தம் அமைய வேண்டிய இடத்தில் அமையாமல் வேண்டாத இடத்தில் அமையுமாறு எழுதப்படுவதும் உண்டு. அழுத்த மாற்றச் சந்தத்திரிபு (Syncopation) என்றழைக்கப்படும். இந்தஉத்தியை ஆங்கிலக் கவிஞர்இ. இ. கும்மிங்ஸ் மிகுதியாகக் கையாள்வார்.

என்னை நீதப்பாகப் புரிந்து
கொண்டுவிட்டதாக வருந்து
கின்றாய் என்ன தான்
நெருங்கிய நண்பன் என்
றாலும் கைக்கு வெளிப்பு
றம்தான். என்னைத் தப்பா
கப் புரிந்து கொள்ளும்
தேவை எனக்கில்லை.

வேண்டாத இடங்களில் அழுத்தம்அமையுமாறு சொற்களைச் சிதைத்து எழுதப்பட்டுள்ள இந்த அழுத்தமாற்றச் சந்தத் திரிபையாப்பிலக்கணம் வகையுளி என்று கூறும். ஆனால் வகையுளி யாப்பிலக்கணத்தை நிறைவுசெய்வதற்காக அமைக்கப்படுகிறதே அன்றி அதற்கு வேறுபொருள் நோக்கம் இல்லை. இந்த அழுத்தமாற்றச் சந்தத் திரிபுக்கு வேறு நோக்கங்கள் உண்டு. அதிர்ச்சியூட்டிப்படிப்பவர்களின் கவனத்தைக் கவர்வது ஒரு நோக்கம். நவீன உலகில் உறவுநிலைகளில் ஏற்படும் சிக்கலைக் கவிதையின் வடிவவாயிலாகக் குறிப்பாக உணர்த்துவதும் ஒரு நோக்கம்.

கவிதையின் பொருளை அதன் அச்சு வடிவத்தின் மூலமாகவும் உணர்த்த முயலும் 'தூலக்கவிதை' (Concrete Poetry) வடிவங்களையும் சிலர் கையாண்டுள்ளனர்.

கி
யூ
வி
லே
ஒரேகூட்டம்

என்ற எழில் முதல்வனின் முயற்சியை இதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். பழைய சித்திரக்கவிக்கும் தூலக்கவிதைக்கும் வேறுபாடுண்டு. சித்திரக்கவியின் சித்திரத்துக்கும் கவிதைப் பொருளுக்கும் தொடர்பிருக்காது. தூலக்கவிதையில் தொடர்பிருக்கும். இன்னும் பல்வேறு வகையான வடிவங்களைப் புதுக்கவிதையில் இனங்காண முடியும். இங்கே சிலவற்றை மட்டும் எடுத்துக்காட்டலாம்.

சுதந்திரம்
இரவில் வாங்கினோம்
விடியவே இல்லை

என்பதுபோன்ற நுட்பவுரை (Epigram) வடிவமும்,

நாங்கள் பசியை
விரட்டுவது
எப்படித் தெரியுமா...?
பட்டினி கிடந்து
நாங்கள் நோயை ஒழிப்பது
எப்படித் தெரியுமா...?
செத்துத் தொலைந்து

என்பது போன்ற சொல் ஒழுங்குக் கட்டுமான (Symmetrical Structure) வடிவமும்

'விவேக சிந்தாமணியின்
ஆசிரியர் யார்?
"மாணிக்க வாசகர்"
"ஏறுபெஞ்சு மேலே',

என்பது போன்ற நாடக உரையாடல் வடிவமும்

பூக்களில் நானுமொரு
பூவாய்த்தான்
பிறப்பெடுத்தேன்.
பூவாகப் பிறந்தாலும்
பொன் விரல்கள்
தீண்டலையே
பொன்விரல்கள்
தீண்டலையே நான்
பூமாலையாக வியே

என்பது போன்ற நாட்டுப் பாடல் வடிவமும்

வாடக் காண்பது
என்னவர் மானம்
வருத்தக் காண்பது
ஒரு சாண் வயிறு

என்பதுபோன்ற ஏளனக் கவி (Parody) வடிவமும் புதுக் கவிதையில் கையாளப்பட்டுள்ளன.

கவிஞர்களின் இலக்கியக் கொள்கைகளுக்கேற்ப, உள்ளடக்கத்திற்கேற்ப புதுக்கவிதையின் வடிவங்கள் மாறுபடுகின்றன. புதுப்புது வடிவங்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன; இதனால் புதுக் கவிதையின் வடிவ வகைகள் தேக்கமடையாமல் எல்லையற்றுப் பெருகிக்கொண்டிருக்கின்றன. புதுக்கவிதைக்கு வடிவம் இல்லை என்று கூறுவோர்க்கு வடிவம்பற்றிய புதிய இலக்கணத்தைப் புதுக்கவிதை கற்றுத்தருகிறது.

(முற்றும்) ★

---

## சஞ்சீவி நூல் வரிசை

**நூல்:** யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்
**ஆசிரியர்:** புலவர், பண்டிதர் பொ. ஜெகந்நாதன்
**வெளியீடு:** யாழ் இலக்கியவட்டம்
**விலை:** ரூபா 30/-
**ஆய்வுரை:** இராசையா ஸ்ரீதரன்.

ஈழவளநாட்டின் சரித்திர ஆராய்ச்சி பற்றிய வரலாற்று நூல்கள் பல்வேறு மட்டங்களிலும், கோணங்களிலும் எழுதப்படுகின்றன. மக்களின் கவனத்தை ஈர்க்கவல்லதும் ஆக்கபூர்வமான சிந்தனைகளைத் தூண்டவல்லதும் தமிழரின் வரலாற்றை முழுமையாகவும் தரவல்லதுமான ஓர் அருமையான நூலை யாழ் இலக்கியவட்டம் வெளியிட்டிருக்கிறது.

புலவர் பண்டிதர் திரு. பொ. ஜெகந்நாதன் எழுதிய 'யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும், எனும் சரித்திர ஆராய்ச்சி நூல் தமிழர் தம் வரலாற்றுச் சிறப்பினைப் பற்றிய அறிவியற் சிந்தனைகளைத் தூண்டும்வகையில் எழுதப்பெற்றுள்ளது. வயது முதிர்ந்த மூதறிஞராக விளங்கும் திரு. ஜெகந்நாதன் வரலாற்று உண்மைகளைத் தேடி அவற்றை ஆய்ந்து ஆக்கியெடுத்த அரியதொரு நூல் இது.

மறுக்கக்கூடிய கருத்துக்களை மேற்கோள் காட்டி தகுந்த சான்றுடன் ஆதாரத்தோடு நிறுவியிருக்கின்றார் ஆசிரியர். அத்தோடு முன்னோர் கண்டிருந்த முடிவுகளைக் கண்டித்தும் இருக்கின்றார். இஃது ஆசிரியனின் துணிவை வெளிக்கொணர்கின்றது.

யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன்– பொ. ஜெகந்நாதனின் யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்' என்ற நூல் காலத்தின் தேவைக்கேற்ப எழுந்த தொன்றாகும். இலங்கைத் தமிழரின் வரலாற்றுச் சிறப்பினைப் பற்றிய சிந்தனைகளைப் பொதுமக்களிடையே ஏற்படுத்த வல்லதொன்றாகும். யாழ்ப்பாண வரலாற்றில் அவர் கொண்டுள்ள ஆர்வமும் ஈடுபாடும் பாராட்டிற்குரியனவாகும்' என்று தமது வாழ்த்துரையில் குறிப்பிடுகின்றார்.

மேலும் யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை – 'இந்நூலிலேஅச்சுப் பிழைகள் பல இடம்பெற்றுள்ளமையால் நீண்டபிழைதிருத்தமும் இடம்பெற்றுள்ளது. ஆகவே தென்னாசிய வரலாற்றுப் பின்னணியிலே நூலாசிரியரின் கருத்துக்களுட் சில மீளாய்வு செய்யப்படவேண்டி உள்ளன. இந்நூலின் இரண்டாவது பதிப்பு திருத்தங்களோடு வெளிவருமானால் இந்நூல் யாழ்ப்பாண வரலாற்றாய்வுகளிலே போற்றப்படக்கூடிய ஓர் இடத்தைப்பெறும் என்பதில் ஐயமில்லை என்று மதிப்புரை வழங்கியுள்ளார். இஃது ஒரு ஆக்கபூர்வமான அருங்கருத்து. அச்சிட்டோர் கவனத்திற்கொள்ளவேண்டியது.

யாழ் இலக்கிய வட்டச் செயலாளர் செங்கையாழியான் தமது மதிப்புரையில் அறிஞர் ஜெகந்நாதனின் ஆளுமைக்கும் ஆராய்வுத் திறனுக்கும் அனுபவத்துக்கும் ஏற்ப இந்நூலில் அவர் முன்வைத்துள்ள வரலாற்றுச் செய்திகளை ஏற்பதும் ஏற்காது விடுவதும் தக்க ஆதாரங்களுடன் மறுப்பதும் போற்றுவதும் இந்நூலினைச் சீர்தூக்கிப்பார்க்கும் அறிஞர் பெருமக்களின் அரும்பணிகளாகும்' என்கிறார்.

மேற்கூறப்பட்ட கருத்துக்களை நோக்குமிடத்து இந்நூலின் குறைநிறைகள் தெற்றெனத் துலங்கினாலும் இடையறாது ஆராய்ந்து அரிய பெரிய வரலாற்றுண்மைகளை மேற்கோள்காட்டியும் சான்றுகள் பகர்ந்தும் ஆங்காங்கே அனுபவக் கருவூலத்தின் ஆளுமை வெளிப்பட்டிருப்பதன் காரணமாக உவந்தேற்று நயந்து வியந்து போற்றவேண்டியது நம் கடனாகும்.

யாழ்பாடியின் யாழ்ப்பாண இராச்சியம், மாகன் காலத்துக்கு முன்னரே நல்லூரில் தலைநகர் அமைந்திருந்தது, நல்லூர் இராச பரம்பரை, பரராசசேகரன் திருப்பணி, இலக்கிய சகாப்தம் என்னைத் தொழுபது, யாழ்ப்பாண வைபவமாலையும் யாழ்ப்பாண வைபவ விமர்சனமும், கோட்டை அரசன் செண்பகப் பெருமாள் வரலாறு, யாழ்ப்பாணம் எனும் பெயர் முதலிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் மிகவும் பயன் தரத்தக்கவை.

இந்நூலில் புதிதாக வெளியாகும் உண்மைகளை வரலாற்றுக் கண்கொண்டு பார்க்கும்போது தனித்துவம் வாய்ந்த தனிக்கருத்தாக தத்ரூபமாகத் தரப்பட்டிருப்பது தனச்சிறப்பாகும் தற்கால மாணவ உலகுக்கு இது ஓர் அரிய பொக்கிஷமாகும். யாழ்ப்பாண இராச்சியப் பெருமையை விளக்கி நிற்கும் இந்நூல் அறிஞருலகம் நமக்களித்த அருமையான விருந்து எனலாம். ★

## கிடைக்கப் பெற்றோம்

திருகோணமலையில் இருந்துவெளிவரும் 'வசந்தம்' கலை இலக்கிய மாத சஞ்சிகையின் முதலாவது இதழ் கிடைக்கப் பெற்றோம்.

'சொல்லும் செயலும் ஒன்றாயிருந்தால், உலகம் பழிக்காது' என்பதை இலட்சியமாகக் கொண்டு இந்தச் சஞ்சிகை வெளியாகியுள்ளது.

முகப்பு அட்டையை, சாதிப் பிரிவுகள் சொல்லி...... என்று தொடங்கும் பாரதியாரின் பாடல் அலங்கரிக்கின்றது.

சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், பேட்டி எனப் பல அம்சங்கள் இதில் இடம் பெற்றுள்ளன.

சஞ்சிகையைப் பெறவிரும்புவோர், ஆக்கங்களை அனுப்ப விரும்பும் அன்பர்கள் "ஆசிரியர், வசந்தம், 18/7, வெலிங்டன் அடை வீதி, திருகோணமலை" என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர். ★

---

# சிங்கள இசைத்துறையை வளர்த்த

# தமிழ்நாட்டுக் கலைஞர் முத்துசாமி

தமிழ் நாட்டில் இருந்து இலங்கை வந்து சிங்களத் திரைப்படவுலகில் இசையமைப்பாளராகப் பிரகாசித்து அண்மையில் மறைந்தவர்திரு. ஆர். முத்துசாமி. அன்னார் பற்றி யாழ். பல்கலைக்கழகம் இராமநாதன் நுண் கலைத்துறையில் பணியாற்றும் திரு. ஏ.கே. கருணாகரன் எழுதியுள்ள குறிப்பு இங்கு பிரசுரமாகிறது.

சிங்களத் திரைப்பட உலகில் தனிப்பெரும் இசையமைப்பாளராக விளங்கிய தமிழர்திரு. ஆர். முத்துசாமி.

முறைப்படி கர்நாடக இசை வயலின் பயின்ற திரு. முத்துசாமியின் பூர்வீகம் தமிழ் நாட்டில் நாகர் கோவிலாகும்.

சிறுவயதில் கொழும்பு வந்த அவருக்கு இசையமைக்கும் வாய்ப்பைச் சிங்களப்படவுலகம் வழங்கியது.

அச்சமயம் சிங்களப் படவுலகில் சிங்கள இசை, வாத்தியக் கலைஞர்கள் குறைவு.

திரு, முத்துசாமியே சிங்களக் கலைஞர்களை உருவாக்க வேண்டியதாயிற்று.

சுமார் 80 சிங்களத் திரைப் படங்களுக்கு இசை அமைத்த அன்னாரைக் கௌரவிக்குமுகமாக1956இல் சர்ஜோன்கொத்தலாவலை அரசாங்கம் இலங்கைப்பிரசா உரிமையை அவருக்கு வழங்கியது.

1970இல் இலங்கை வானொலியில் தமிழ்த்துறையில் நிரந்தர நிலையக் கலைஞராக பணிபுரிய ஆரம்பித்தார்.

இவரின் காலத்தில் இருந்து ஈழத்து மெல்லிசைப்பாடல்கள் தனி மெருகு பெறத் தொடங்கின.

1970இல் கர்நாடக இசைத் தயாரிப்பாளனாக இலங்கை வானொலியில் சேர்ந்தேன். அப்போதிருந்து திரு. முத்துசாமியுடன் எனக்குப் பரிச்சயம் ஏற்பட்டது.

1972இல் நான் மெல்லிசைத் தயாரிப்பாளனாக பணியாற்ற ஆரம்பித்தேன். அதில் இருந்து திரு. முத்துசாமியுடன் மிக நெருக்கம் ஏற்பட்டது.

ஈழத்துக் கவிஞர்களின் பாடல்களைத் தெரிந்து திரு. முத்துசாமியிடம் கொடுக்கும்போது அவர் அவற்றுக்கு இசையமைத்து பலதரமான மெல்லிசைப் பாடல்கள் உருவாக உதவினார்.

இன்றைய பிரபலமெல்லிசைப் பாடகர்கள் அப்போது உருவானவர்களே. அவரும் பல பாடல்களைப் பாடியிருக்கிறார்.

புதிய பாடகளுக்கு உற்சாகமூட்டுவதில் அவருக்கு நிகர் அவரேதான்.

கர்நாடக இசையிலும் அவர் தனது பங்கை நிலைநாட்டினார். பல கலைஞர்களுக்குப் பக்க வாத்தியம் வாசித்தார்.

1980 இல் தமிழ் வாத்தியக் குழுத்தலைவராகப் பணியாற்றினார்.

சிங்கள நாட்டுக் கூத்துக்களுக்கும் அவர் இசையமைத்தார். 'முத்துசாமி மாஸ்டர்' என்று சிங்கள மக்களினால் அன்புடன் அழைக்கப்பட்டு வந்தார்.

மஞ்சள் குங்குமம், குத்து விளக்கு, காத்திருப்பேன் உனக்காக, வெண்சங்கு ஆகிய இலங்கைத் தமிழ்ப்படங்களுக்கு திரு. முத்துசாமி இசை அமைத்தார். ★

## தூங்கும் நேரம் எது?

பல்வேறு நாட்டு மக்களின் தூங்கும் பழக்கம் பற்றி மேற்கு ஜேர்மனி பல்கலைக்கழகம் ஆராய்ச்சி நடத்தி ருசிகரத் தகவல்களை வெளியிட்டு உள்ளது.

மயன் இன மக்கள் அதிகாலை 3 மணிக்குத் தூங்கி விழிக்கிறார்கள். விழித்ததும் வேலைக்குச் செல்கிறார்கள்.

யாகன் இனத்தவர், தூங்குவதற்குக் குறிப்பிட்ட நேரம் வைத்துக்கொள்வது இல்லை. தூக்கம் வரும் போது தூங்குகிறார்கள். விழித்ததும் வேலைக்குச் செல்கிறார்கள்.

ஆசிய நாட்டினர் பஸ், ரெயில் போன்ற வாகனங்களில் பயணம் செய்யும்போது கூடத் தூங்குகிறார்கள். ஆனால் மேற்கிந்திய நாட்டினருக்கு இப்படி ஆடிக் கொண்டு இருக்கும் வாகனங்களில் தூக்கம் வராது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் நோய் போக்கும் நவபாஷாண லிங்கம்

ஒன்பது வகையான பொருள்களைக் கொண்ட நவபாஷாண லிங்கத்தைச் சென்னையைச் சேர்ந்த சித்த மருத்துவர் ஒருவர் உருவாக்கியிருக்கின்றார்.

கேரள மாநிலத்தைச் சேர்ந்த டாக்டர் பி. ஜே. தோட்டம் என்பவர் அவர். ஐந்து ஆண்டுகால ஆராய்ச்சியின் விளைவாக இந்த நவபாஷாண லிங்கம் உருவாக்கப்பட்டது என்று டாக்டர் தோட்டம் கூறுகின்றார்.

அவர் கூறுகிறார்: ''பழனி ஆலயத்தின் மூல விக்கிரகத்தைச்சுமார் எண்ணூறு ஆண்டுகளுக்குமுன்னர் போகர் என்ற சித்தர் உருவாக்கினார். மக்களின் நோயைப் போக்க அந்த விக்கிரகம்உருவாக்கப்பட்டிருக்கக்கூடும் என்பதில் ஐயமில்லை. இந்தச் சிலைக்கு பால், தேன், இளநீர், நீர், பஞ்சாமிர்தம், போன்ற பொருள்களினால் அபிஷேகம் செய்யும் போது, விக்கிரகத்தின் மீதுள்ள சிறு நுண்ணிய ரசாயனப்பொருள்கள் அந்த அபிஷேகப்பொருள்களில் கலந்து விடும். அவற்றைப் பக்தர்கள் அருந்தும் போது, அது உடலில் மருந்தாகச் செயல்பட்டு நோயைத் தீர்க்கும்.



கடந்த சில ஆண்டுகளுக்கு முன் அந்த மூல விக்ரகத்தில் சில பகுதிகள் சிதைவடைந்தன.

இதைப்போல வேறு ஒரு பொருளை உருவாக்க வேண்டும் என்று ஆராய்ச்சி நடத்தினேன்.

இந்த நவபாஷாண லிங்கம் ஆங்கிலத்தில் மெர்க்குரி, சல்பர் என்றழைக்கப்படும் பூரம், சந்தாம், ரசம் போன்ற ஒன்பது மூலப் பொருட்களைப் பயன்படுத்தியே அமைக்கப் பட்டது.

இந்தக் கூட்டுப் பொருளினால், புற்றுநோய் உட்பட பல்வேறு நோய்கள் குணமாகும்.

இச்சிலையைச் சிறிது நீரில் அமிழ்த்தினாலும் அந்த நீரில் கண்ணுக்குத் தெரியாத ரசாயன மாற்றம் ஏற்படும் —

இப்படி டாக்டர் தோட்டம் சொன்னார். முதல் கட்டமாகத் தான் உருவாக்கிய மூன்று அங்குல உயரம், 115 கிராம் எடையுள்ள நவபாஷாண லிங்கத்தைச்செய்தியாளர்களிடம் டாக்டர் காட்டினார்.

அந்த லிங்கத்தைப் படத்தில் காணலாம். ★

## மெட்ரிக் முறை கடிகாரம்!

உலகில் தற்போது பொருட்களின் எடை, நீளம் மற்ற எல்லா அளவுகளும் ''மெட்ரிக்'' முறையின் கீழ் வந்துவிட்டது. காலத்தைக் கணக்கிடும் கடிகாரம் மட்டும் விதிவிலக்காக இருந்து வருகிறது. இப்போது மெட்ரிக் முறையில் கடிகாரம் தயாரிக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

இந்த மெட்ரிக் முறை கடிகாரத்தில் ஒரு நிமிடத்துக்கு 100 வினாடி. ஒரு மணிக்கு 100 நிமிடம். ஒரு நாளைக்கு 10 மணி ஆகும். ★

## எய்ட்ஸ் நோய்க்கு ஊசிமருந்து!

எய்ட்ஸ் நோய்க்குப் புதிய ஊசிமருந்தை அமெரிக்காவில் உள்ள நிறுவனம் தயாரித்து உள்ளது.

இது எய்ட்ஸ் நோய் தாக்காதவாறு உடலில் எதிர்ப்புச் சக்தியை ஏற்படுத்தவல்லது. எய்ட்ஸ் நோயைக் கட்டுப் படுத்தக்கூடியது. அதிகமான 'டோஸ்' போட்டுக் கொண்டாலும் ஆபத்து இல்லாதது.

பலவித பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட இந்த ஊசிமருந்தை மனிதர்களுக்கு இனிமேல்தான் போட்டு சோதனை செய்ய வேண்டி இருக்கிறது. ★

## நடிகையின் செருப்பு விலை ரூ. 24 லட்சம்!

ஜூடிகார்லண்ட் என்ற பிரபல ஆலிவுட் நடிகை ஒரு ஆங்கிலப் படத்தில் நடித்தபோது அணிந்து இருந்த ஒரு ஜோடி செருப்பு நியூயார்க் நகரில் சமீபத்தில் ஏலம் விடப்பட்டது. பெயர் சொல்ல விரும்பாத ஒருவர் அதை ரூ. 24 லட்சத்துக்கு ஏலம் எடுத்தார்.

இதே போல விளம்பரத்துக்காக எடுக்கப்பட்ட நடிகை மர்லின் மன்றோவின் 96 புகைப்படங்களை மற்றொரு ஆசாமி ரூ. 8 லட்சத்துக்கு எடுத்தார். ★

## வீடியோவில் றேகன்

அமெரிக்க ஜனாதிபதி றேகனின் வாழ்க்கை வரலாறு வீடியோ படமாகத் தயாரிக்கப்படுகிறது.

மூன்று பகுதியாக எடுக்கப்பட்டு வரும் இப்படத்தின் முதல் பகுதி வெளிவந்து விட்டது.

இங்கிலாந்து டெலிவிஷனில் இது ஒளிபரப்பப்படுகின்றது.

றேகனின் இளமைக்கால வாழ்க்கை, திரையுலக வாழ்க்கை, மறக்கமுடியாத சம்பவங்கள், றேகனைப்பற்றி நான்ஸி சொன்ன கருத்துக்கள், நான்ஸி பற்றி றேகன் கொண்டுள்ள கருத்துக்கள் இந்த வீடியோப் படத்தில் அடங்கி உள்ளன.

## மாணவனிடம் மன்னிப்புக் கேட்ட ஆசிரியர்

ஒரு பள்ளி வகுப்பில் உள்ள மாணவர்களில் ஒரே ஒருவன் மட்டும் படிப்பில் பின் தங்கி இருந்தான்.

அந்த வகுப்பாசிரியர் ஒரு நாள் அம்மாணவனைத் தன்னருகே அழைத்து அவன் கையில் பிரம்பைத் தந்தார்.

இந்த வகுப்பில் உன் ஒருவனுக்குமட்டும் நான்சரியாகப் பாடம் நடத்தவில்லை என எண்ணுகின்றேன். அதற்குத் தண்டனையாக என்கையில் நீ அடி கொடு என்று கூறியவராய்த் தனது கையை அம்மாணவன் முன் ஆசிரியர் நீட்டினார்.

அதைக் கேட்டுத் துடித்துப்போன அம்மாணவன் ஆசிரியரிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டதுடன், அன்று முதல் அக்கறையுடன் படித்து சிறந்தமாணவர்களுள் ஒருவன் ஆனான்.

உண்மையில் நடந்த இந்த நிகழ்ச்சியை ஒரு கூட்டத்தில் [illegible]

# வாயில் போட்டு விழுங்கும் அதிசய தெர்மோ மீற்றர்

வாயில்போட்டு விழுங்கிவிடக்கூடிய அளவுக்கு அதிசயமான தெர்மோமீட்டர் (சுரமானி) ஒன்றை அமெரிக்க டாக்டர்கள் உருவாக்கி உள்ளனர்.

இந்தத் தெர்மோமீட்டர் சின்னஞ்சிறியது. இதன்நீளம் 19 மில்லிமீட்டர்கள்; குறுக்களவோ 8 மில்லிமீட்டர்கள் தாம். இந்தக்குட்டி தெர்மோமீட்டரில் எலக்ரோனிக் சாதனங்கள், 'ஸென்ஸார்' எனப்படும் புலன் உணர்வுச் சாதனங்கள்,பட்டரிகள் ஆகியவை நுணுக்கமாகப் பொருத்தப் பட்டுள்ளன.

நோயாளி ஒருவர் இந்தத் தெர்மோ மீட்டரை வாயில் போட்டு விழுங்கியவுடன் உடலின் உள்ளே இருக்கும் வெப்பநிலையையும் காய்ச்சலின் அளவையும் இது மதிப்பிட்டுவிடுகிறது. 0.01 டிகிரி சென்றிகிரேட் அளவுக்கு இது மிகவும் துல்லியமாகக் கணக்கிடுகிறது. பின்பு அதுபற்றிய சமிக்ஞைகளை .ஓர் 'ஒலி வாங்கி' (ரிசீவர்) மூலம் நாம் பெறமுடியும். பணி முடிந்த பிறகு, இந்தத் தெர்மோமீட்டரை உடலிலிருந்து வெளியேற்றிவிடலாம்.

உடலின் வெவ்வேறு பகுதிகளில், உடல் வெப்பநிலையில் ஏற்படும் மிகவும் நுட்பமான மாற்றங்களை அளப்பதற்கும், ஒரு நாளில் உடலின் வெப்பநிலையில் என்னென்ன மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதைக் கண்டறிவதற்கும் இந்தத் தெர்மோமீட்டரைப் பயன்படுத்தலாம். 'ஹைபோதெர்மியா' நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களைக் குணப்படுத்தவும் இந்தத் தெர்மோமீட்டர் பயன்படும்.

அமெரிக்காவில் மேரிலாந்து மாநிலத்திலுள்ள 'ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பிரயோக செயல்முறை பௌதிக ஆய்வுகூடத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இந்த அதிசய தெர்மோமீட்டரை உருவாக்கி உள்ளனர்.

அமெரிக்க விண்வெளி நிறுவனம் அளித்த தொழில்நுட்பத்தின் அடிப்படையில் தயாரிக்கப் பட்டுள்ள இந்தத் தொலையுணர்வு தெர்மோமீட்டரைக்கொண்டு வயிற்றில் உள்ள அமிலங்களின் அளவையும், இதயத்தின் மின்னியக்கத்தையும் அளக்க முடியும் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். ★

## 'சேலைகட்டிய மாதரை நம்பாதே' - புதிய விளக்கம்

தற்போது வழக்கிலிருக்கும் சில பழமொழிகள். அதன் உண்மையான பொருளிலிருந்து மாறிச்சொல்லப்பட்டு வருகிறது. உதாரணமாக: 'ஆயிரம்பேரைக் கொன்றவன் அரைவைத்தியன்' என்பது! அது, உண்மையில், 'ஆயிரம்வேரைக் கொன்றவன் அரைவைத்தியன்' என்று இருக்கவேண்டும். காரணம் அந்தக்கால சித்தவைத்தியர்கள் நோய்களை மூலிகைகளைக் கொண்டே குணப்படுத்தி வந்தனர். அதன்படி ஆயிரம் மூலிகை வேர்களை அழித்து கிடைக்கும் மருந்தின் மூலம்தான் ஒரு நோயைக் குணப்படுத்தமுடியும். மற்றொரு பழமொழி. 'சேலை கட்டிய மாதரை நம்பாதே' என்பது நம் அனைவரின் தாய், தமக்கை, மனைவி ஆகியோரும் சேலைகட்டியவர்களே. அவர்களை நம்பாதே என்றுசொல்லும் பழமொழி இருக்கமுடியுமா? சற்று சிந்தித்தால் இதன் உண்மைப் பொருள் விளங்கும். 'சேல் அகற்றிய மாதரை நம்பாதே' என்பதுதான் உண்மையான பழமொழி. சேல் என்பது கண். அகற்றிய என்றால் 'விரித்து நீக்கிய' என்று பொருள். அதாவது ஏமாற்றுக்கார பெண்களை நம்பாதே என்பதே அதன் பொருள். 'சேல் அகற்றிய' என்ற சொல் பின்னாளில் 'சேலை கட்டிய' என்று உருமாறிவிட்டது. இப்படிப் பழமொழிகளை சற்று சிந்தித்துப்பார்த்தால் அதன் சுவையான பொருள் புரியும். ★

## வாத்ஸாயனரின் 'காமசூத்திரம்' பாடநூலாக அங்கீகாரம்

வாத்ஸாயனர் எழுதிய 'காமசூத்திரம்' பாடநூலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

பள்ளியறைகளில் தானே என்று எண்ணி விடாதீர்கள்.

சோவியத் யூனியனில் உள்ள எஸ்டோனியன் நகரப் பாடசாலைகளில் 'காமசூத்திரம்' பாடநூலாக அங்கீகரிக்கப் பட்டு பயிற்றப்படுகிறது.

பெருகி வரும் விவாகரத்துக்களைக் குறைக்கவும், மாணவர்கள் செக்ஸ் கல்வி, குடும்ப வாழ்க்கை முறை ஆகியவற்றைப் புரிந்து கொள்ளவும் இந்தநூல் அங்கு பாடநூலாக்கப்பட்டுள்ளது என்று டாஸ் செய்தி ஸ்தாபனம் கூறுகிறது. ★

## புதிய சாதனை

இந்தியாவில் ரெய்ப்பூர் என்னும் இடத்தில் வசிக்கும் ரொபின் மோய் சௌத்திரிக்கு வயது 45. அவரின் இரத்தம் 'ஏ பி' வகை.

அவரின் உடலில் இரத்தம் தேவைக்கு அதிகமாக உற்பத்தியாகின்றதாம். அதனால் அவர் மாதம் 2 போத்தல் இரத்தத்தைக் கொடுத்தே ஆக வேண்டும் என்று டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

இல்லாவிடில் [illegible] உயிர்வாழ முடியாது என்று அறிவிக்கப்படுகிறது. ★

## திகிற் கிராமம்!

ஆந்திர மாநிலம் பிடார்நகர் அருகே திடாகி என்ற குக்கிராமம் உள்ளது. இங்கு 250 வீடுகள் இருக்கின்றன.

மே; ஜூன் மாதங்களில் பில்லி சூன்யம் வைத்தாற்போல் இந்தக் கிராமத்தில் மர்மச் செயல்கள் நடக்கின்றன.

சரமாரியாகக் கற்கள் வந்து விழுகின்றன. அவை எங்கே இருந்து வருகின்றன என்பது தெரியவில்லை. திடீர் திடீரென்று வீடுகள் தீப்பிடிக்கின்றன. ஆனால் யாரும் தீ வைத்ததாகத் தெரியவில்லை.

கல் விழுந்ததில் பலர் காயம் அடைந்து உள்ளனர். 10 வீடுகள் எரிந்து சாம்பலாகி விட்டன. அந்தக் கிராமத்துக்கு வந்த சில அரசியல் கட்சித் தலைவர்களும் இந்த மர்மத்தை நேரில் பார்த்து உள்ளனர். ஒரே மர்மமாக இருக்கிறது. ★

# பூனையை விரட்ட புத்தகங்கள்; மார்க்டுவைன் உபாயம்!

மார்க்ட்வைன் ஒருநகைச்சுவைக் கதாசிரியர். அவர் வீட்டிற்கு கிறிஸ்துமஸ் பண்டிகை சமயத்தில் ஒரு நண்பர் வந்து சேர்ந்தார். வந்தவரும் ஒரு எழுத்தாளரே.

வீடு நிறைய புத்தகங்கள் அடுக்கடுக்காய் இருந்தன. அவற்றைக் கண்ட நண்பர் மார்க்ட்வைனை நோக்கிக் கேட்டார்.

'இவைகள் எல்லாம் என்ன? உங்களுக்கு வந்த கிறிஸ்துமஸ் பரிசுகளா?'

'ஆமாம்' என்று தலையசைத்தார் மார்க்ட்வைன்.

'புத்தகம் எழுதுபவருக்கு மற்றவர்கள் எழுதிய புத்தகங்களை பரிசளிக்கிறார்களே. ஏன்? புத்தகங்களைத் தவிர வேறு எதுவும் நமக்கு தேவையில்லை என்பது அவர்கள் எண்ணமா?' என்று அவர் நலித்துக் கொண்டார் வந்த நண்பர்.

'அதனால் என்ன? புத்தகமென்றால் எனக்கு மிகவும் பிடிக்கும். கனமான புத்தகங்கள் பூனையை விரட்ட பயன்படுகின்றன. லேசானவற்றை மேசை, நாற்காலிகளின் காலுக்கடியில் வைத்தால் அவை ஆடாமல், அசையாமல் இருக்க உதவுகின்றன. தோல் பைண்டு செய்த புத்தகங்கள் சவரக்கத்தி தீட்டுவதற்கு நன்றாகப் பயன்படுகின்றன. அந்த மாதிரி புத்தகங்கள் நிறைய அனுப்பமாட்டேனென்கிறார்களே என்றுதான் எனக்கு கவலையாக இருக்கிறது' என்றார் மார்க்.

வந்த நண்பர் இதைக் கேட்டு வெட்கித் தலை குனிந்தார். ★

# பூரிசங்கரர் முதலில் உடன்கட்டை ஏறட்டும் செக்ஸ்சாமி ரஜ்னிஷ் சவால்

'உடன்கட்டை ஏறுவது புனிதமானது என்று கூறும் பூரி சங்கராச்சாரியார், முதலில் தானே உடன்கட்டை ஏறி மற்றவர்களுக்கு முன்னுதாரணம் ஆகட்டும்' என்று செக்ஸ் சாமியார் ரஜ்னீஷ் கூறியுள்ளார்.

'பகவான்' ரஜனீஷ் பூனாவில் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

'சத்' என்றால் சத்தியம். அதிலிருந்து பிறந்ததுதான் 'சதி' (உடன்கட்டை ஏறுதல்) கணவன் மரணம் அடைந்ததும், அவன் உடல் வைக்கப் பட்டுள்ள சிதையில் தானும் ஏறிநெருப்பில் சாம்பலாவதன் மூலம், சத்தியத்தோடு அந்தப் பெண் ஐக்கியமாகி விடுகிறாள். எனவே இந்தப் புனிதமான பழக்கத்தை சட்டரீதியானதாக ஆக்க வேண்டும் என்று பூரி சங்கராச்சாரியார் கூறியிருக்கிறார்.

இது அபத்தமான, மோசடியான விளக்கம். சுடுகாட்டு நெருப்பில் விழுந்து சாவதுதான் சத்தியத்தோடு ஐக்கியமாகும் வழி என்றால், மனைவி இறந்ததும் கணவன் உடன்கட்டை ஏறி சத்தியத்துடன் ஐக்கியமாகலாமே. இதுவரை ஒரு கணவன் கூட அப்படிச் செய்யவில்லையே.

பூரி சங்கராச்சாரியார் உடனடியாக உடன்கட்டை ஏறி, தனது விளக்கத்தை மெய்ப்பித்து, மற்றவர்களுக்கு நல்லதொரு முன்னுதாரணமாகத் திகழ நான் வேண்டுகிறேன். அவ்வாறு செய்வதன் மூலம் சரித்திரத்தில் அவருக்கு அழியாத புகழ் கிடைக்கும். செய்யத்தவறினால், 'உடன்கட்டை ஏறும் பழக்கத்தை சட்டரீதியாக்க வேண்டும்' என்று கூறுவதை அவர் நிறுத்த வேண்டும்.

தூய அன்பினால் உயிர்த்தியாகம் செய்யலாம். ஆனால் சம்பிரதாயம், சடங்கு ஆகியவற்றுக்காக உயிர்த்தியாகம் செய்யக் கூடாது. புதைய வேண்டிய பழங்கால சம்பிரதாயங்களை, சடங்குகளை சட்டமாக்க அரசை யாரும் கோர வேண்டாம்.

இவ்வாறு ரஜ்னீஷ் கூறியுள்ளார். ★

## மன்னனைத் திருத்திய துறவி

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெயேந்திரா ஸ்வாமிகள் அண்மையில் நேபாளம் சென்றிருந்தார்.

காத்மண்டு நகரின் நுழைவாயிலில் ஓர் ஆணும் பெண்ணும் குடிப்பதுபோன்ற விளம்பரப் பலகை ஸ்வாமிகளின் கண்களின் தென்பட்டது.

மனம்பொறுக்காது நேரடியாக நேபாள மன்னரிடமே சென்றுவிட்டார்.

'உங்கள் நாட்டில் குடிப் பழக்கம் இருக்கலாம். அதற்காக நுழைவாயிலிலே விளம்பரம் தேவையா என்று கேட்டார்.



ஜெயேந்திரர்

மன்னரும் பிழையை உணர்ந்து, விளம்பரப் பலகையை உடனே அகற்றிவிட்டார்.

இப்போது அந்த இடத்துக்கு சங்கராதுவார் என்ற பெயரில் நுழைவாயில் கட்டப்பட்டுள்ளது.

இத்தகவலை காஞ்சியில் நடந்தவிழா ஒன்றில் ஜெயேந்திர ஸ்வாமிகளே வெளியிட்டார்.

# உயிர் காக்கும் படை

'முன்னேறும் நாடு' என்று நாம் சில நாடுகளைக் குறிப்பிடுகிறோம்.

தன்னிறைவை நெருங்குவதை வைத்து மட்டும் ஒரு நாட்டை முன்னேறும் நாடு என்று குறிப்பிட முடியாது. மற்றவர் நலன்களில் அக்கறை காட்டுவதன்மூலமே ஒரு நாட்டை முன்னேற்றமான காரியம் செய்கிற நாடு என்ற பொருளில் 'முன்னேறும் நாடு' என்று குறிப்பிட முடியும்.

ஒரு காலத்தில் ஹிட்லர் கையிலே ஜெர்மனி நாடு இருந்த போது அதன் பணி மனிதர் உயிரைப் பலியாடுவதாக இருந்தது. இன்று அதே ஜெர்மனி மனிதாபிமானத்துடன் பல நல்ல பணிகளை மேற்கொண்டு கடந்த கால பாவங்களுக்குப் பிராயச்சித்தம் தேடிக் கொண்டுள்ளது.

இப்போது அதிவேக படகுகளை ஒரு நல்ல காரியத்திற்காக ஜெர்மனி நாடு பயன்படுத்தி வருகிறது.

'உயிர் காக்கும் ஜெர்மானிய படகுப் படை' என்று ஒரு படை அமைப்பையே ஏற்படுத்தி, கடலிலே சிக்கி உயிருக்காகப் போராடும் எண்ணற்றோரை வருடந்தோறும் காப்பாற்றும் அரும் பணியினை இப்படை செய்து வருகிறது. ★

## உலகம் இவ்வளவுதான்

ஆஸ்திரேலியா, சிட்னியைச்சேர்ந்தவர் 45 வயதான ரொபர்ட் வாக்கர் என்பவர்.

அவருக்கு ஆறு ஆண்டுகளாக மரக்கறி உணவையே சமைத்துப்போட்டு வந்தார், அவரின் மனைவி.

மாமிச உணவு தா என்று கேட்டுப் பார்த்தார். மனைவி மசியவில்லை.

ஒரு நாள் ஆத்திரம் தாங்காது மனைவிக்கு நல்ல அடி போட்டு விட்டார்.

விஷயம் நீதிமன்றத்துக்குப் போனது. அங்கும் அவர் விடவில்லை. விரும்பிய உணவு சமைத்துத்தரும் வரை அடித்துக் கொண்டே இருப்பேன் —இப்படி அவர் நீதிமன்றத்திலும் தெரிவித்தார்.

விசாரணை இன்னும் முடியவில்லை.

★ ★ ★

305 கிலோ எடையான ஆர்தர் ஹெர்மிட்டேஜ் என்பவர் நண்பர் ஒருவரின் திருமணத்துக்குச் சென்றிருந்தார்.

கதிரையில் அமர்ந்திருந்த அவர் திடீரென்று கீழே விழுந்து விட்டார்.

65பேர் சேர்ந்தும் அவரைத் தூக்கி நிறுத்த முடியவில்லை. தீயணைக்கும் படைக்குத் தகவல் அனுப்பப்பட்டது. குழாயினால் அவரைக் கட்டி இழுத்து எழுப்பவேண்டியதாயிற்று.

அப்போது தீயணைப்புப் படை வீரர் ஒருவர் காயமடைந்தார்.

★ ★ ★

உலக அதிசயங்களில் ஒன்று பாரிஸில் உள்ள எபெல் கோபுரம்.

அது போன்ற 'மாடல்' ஒன்றை ஜுவான் மொர்ச்சான் என்பவர் கட்டியிருக்கிறார். 884 பற்களைக் கொண்டு அவர் அதனைக் கட்டியிருக்கிறார் என்பது தான் புதுமை.

பற்களில் ஆறு அவருடையது. ஏனையவை மாடுகளின் பற்கள் ஆகும்.

'மாடல்' கட்டும் திட்டம் நிறைவேற 15 மாதங்கள் எடுத்தன. மாடுகளின் பற்களை இறைச்சி விற்பனையாளர் ஒருவரிடம் இருந்து பெற்றார்.

தனது ஆறு பற்களையும், பொய்ப்பற்களைக் கட்டும் போது எடுத்தார். ★

## கழிப்பறையா, பரிசோதனைக் கூடமா?

புதுமையான கழிப்பறை ஒன்றை ஜப்பான் நிபுணர்கள் அமைத்து உள்ளனர்.

இந்தக் கழிப்பறையினுள் நுழைந்து வெளியே வந்தால், நமது சிறுநீரில் உள்ள கோளாறுகள், ரத்த அழுத்தம், உடல் வெப்பநிலை இருதய செயல்பாடு ஆகியவை தானாகவே குறிப்பு எடுக்கப் படுகின்றன.

பிறகு அந்தக் குறிப்புகள் கம்பியூட்டர் மூலம் அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பப்படுகின்றன. அங்கு பரிசோதனைகள் நடத்தப் பட்டு அதன்முடிவு நமக்கு அனுப்பிவைக்கப்படுகிறது.

அடுத்த ஆண்டு முதல் இப்படிப்பட்ட கழிப்பறைகள் அங்கு புழக்கத்துக்கு வந்து விடும். ★

பஞ்சாமிர்தம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பட்டம் பயில்வோம்

ஆறும் ஆண்டு (5 ஆம் வகுப்பு) புலமைப் பரிசிலைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு உதவும் வித்தில்—

தமிழ், கணிதம் ஆகிய இரண்டு பாடங்களுக்குரிய முன்மாதிரிப் பயிற்சி வினாக்கள் வாரந்தோறும் சஞ்சீவியில் வெளியிடப்படும்.

வினாக்களுக்குரிய பதில்கள் உதயனில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் பிரசுரமாகும்.

தயாரித்துத் தருபவர்:

**நயினை சி. சோமேஸ்வரபிள்ளை**

(இந்து ஆரம்ப பாடசாலை, கொக்குவில்)

தமிழ் வினாத்தாள் இல: 2

## தமிழ்மொழி

1) அடைப்புக்குறிக்குள் பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

i. நளாயினி (தொழில் நுட்பச், தொழில் நுற்பக், தொழில் நுட்பக், தொழில் நுப்பக்) கல்லூரியில் படிக்கிறாள்.
ii. (நல்நூல், நந்நூல், நன்நூல், நன்னூல்) என்னும் இலக்கண நூலைப் பவணந்தி முனிவர் இயற்றினார்.
iii. கோயில் (மகோச்சவம், மகோற்சவம், மகோர்ச்சவம், மகோற்ச்சவம்) சிறப்பாக நடைபெற்றது.
iv. கப்பல் கடலில் (நங்கூரம், நம்கூரம், நன்கூரம், நண்கூரம்) இட்டு நின்றது.
v. அடியார்கள் கூட்டம் (பிராத்தனையில், பிருர்த்தனையில், பிரார்த்தனையில், பிருத்தனையில்) ஈடுபட்டிருந்தது:

2) அடைப்புக்குறிக்குள் முதற் சொல்லுக்கு சம கருத்துடைய இரண்டு சொற்களுண்டு. அவற்றின் கீழ் அடையாளமிடுக.

i. அம்பு (வில், பாணம், தனு, பானம், கணை)
ii. போர் (அமர், சமாதானம், சச்சரவு, சமர்)
iii. வேளாளர் (மறைவர், உழவர், மேழியர், துறைவர்)
iv. குதிரை (சியம், வேழம், அசுவம், கரி, புரவி)
v. தண்ணீர் (தீர்த்தம், அனல், அடுப்பு, புனல்)

3) அடைப்புக்குறிக்குள் முதலுள்ள சொல்லின் எதிர்ச் சொல்லைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

i. பூரிப்பு (துக்கம், வாட்டம், மகிழ்ச்சி)
ii. பாலர் (கிழவர், மனிதர், விருத்தர், இளைஞர்)
iii. அன்பு (பண்பு, வன்பு, மாண்பு)
iv. உத்தமம் (மத்திமம், கீழ்த்தரம், அதமம்)
v. மறதி (அவமறதி, ஞாபகம், உளம்)

4) பின்வரும் சொற்களை வாக்கியமாக்குக.

i. பாலும் பழமும்:
ii. மட மட:
iii. ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல:
iv. மதி < (பெயர்):— (வினை):—
v. வீடு < (எழுவாய் வாக்கியம்) (செயப்படுபொருள் வாக்கியம்)

5) அடைப்புக்குறியினுள் சரியான விடையைத் தெரிக.

i. (ஒரு காட்டில், ஓர் காட்டில், ஒரேயொரு காட்டில்) சிங்கமும் நரியும் நட்பாயிருந்தன.
ii. பந்து அருளப்பனால் அடிக்கப்பட்டது. இவ்வாக்கியம் (செய்வினை, செயப்பாட்டு) வினை வாக்கியமாகும்.
iii. துணை போனாலும் (பிணை, பிணை) போகாதே.
iv. தமிழ் எழுத்துக்களின் மொத்தம் (247, 248, 26)
v. ஆசிரியனுக்கு ஆசிரியை போல பண்டிதனுக்கு (பண்டிதள், பண்டிச்சி, பண்டிதை)

6) தொடர்பு படுத்துக.

| | |
|---|---|
| மலையும் மலைசார்ந்த இடமும் | திருவள்ளுவர் |
| புருடனை இழந்த பெண் | முரலும் |
| புல்லியர் | நோயாளி |
| ஆசைவெட்கமறியாது | சின்னு பின்னம் |
| திருக்குறள் | விதவை |
| கண்டதுண்டம் | முதுமொழி |
| பொதுப்பால் | குறிஞ்சி |
| வண்டு | கீழ்மக்கள் |

7) கோடிட்ட இடங்களில் ஓரெழுத்துச் சொற்களை வைத்து நிரப்புக.

i. ........ மாதம் என் வீட்டிற்கு ........
ii. ........... பறிப்பவனை ........... என்று அதட்டினார்.
iii. அவனுக்கு ........ அடக்கம் இல்லை.
iv. ........ எங்கும் பரவியது.
v. ........ ஓதலில் முதலிடம் கிடைத்தது.

8) கீழ் வரும் மூன்று தனி வாக்கியங்களையும் ஒரே தொடர் வாக்கியமாக மாற்றியமைக்குக.

1. மழை பெய்தது.
2. சிறுவன் ஓடினான்.
3. வழுக்கி விழுந்தான்.

9) பின்வருவனவற்றைச் சேர்த்தும் பிரித்தும் எழுதுக.

i. முட்செடி =
ii. தேங்குழல் =
iii. மூவாயிரம் =
iv. செலவில்லை =
v. பூ + இதழ் =
vi. கல் + எறிந்தான் =
vii. விண் + நாடு =
viii. அறம் + வினை =

10) பின்வரும் பழமொழிகளை நிறைவு செய்க.

i. தொட்டிற் பழக்கம் ..................
ii. விளையும் பயிரை ........ ........
iii. அழுத பிள்ளை ..................
iv. ஏழை பேச்சு ..................
v. இளங் கன்று ..................

11) பின்வருவனவற்றுள் ஒன்றினைப்பற்றி எழுத்துப் பிழைகளின்றி 15 வரிகளுக்குக் குறையாமல் கட்டுரை வரைக.

i. உம்மை வியக்க வைத்த சம்பவமொன்று.
ii. எனது ஆசைகள்.
iii. நாட்டுக்கு நீர் செய்யும் சேவைகள்.
iv. மின்சாரம் தரும் பயன்கள்.
v. பாடசாலையில் நடைபெற்ற ஒரு விழாவை வருணித்து நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

# முதன் முதலாக.....?

★ முதன் முதலில் நீராவிக் கப்பல் அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடந்தது.
— 1819 ஆம் வருடத்தில்.

★ முதன் முதலில் உலோகங்களை உபயோகித்தோர்,
— சால்டிய நாட்டினர்.

★ முதன் முதலில் காகிதம் செய்தோர்,
— சீனதேசத்தார். கி. மு. 170 வருடத்தில்.

★ அமெரிக்காவை முதன் முதலில் கண்டு பிடித்தோர்,
— நார்ந்மென் என்னும் சாதியார், கி. பி. 975 ஆம் வருடத்தில்; கொலம்பஸ் 1492 ஆம் வருடம் அக்டோபர் மாதம் 12 ஆம் தேதியன்று.

— மின்சார விளக்குகளை முதன் முதலில் கண்டு பிடித்தோர்,
— லோடிக்வின். கோல்லாப் என்னும் இருவர் லண்டனில் 1874 ஆம் வருடத்தில்.

★ ஈதர் என்னும் மயக்க மருந்தை முதன் முதலில் உபயோகித்தது,
— 1844 ஆம் வருடத்தில் ஆபரேஷன் செய்வதற்காக.

★ முதன் முதலில் தபால் அலுவலகம் ஏற்படுத்தப்பட்டது,
— 1516 ஆம் வருடத்தில் வியன்னாவுக்கும் பிரஸ்சல்ஸ் நகருக்குமாக.

★ முதன் முதலில் கடிகாரங்கள் செய்யப்பட்டது,
— 1477 ஆம் வருடத்தில். நியூரெம் பெர்க் நகரத்திலே;

★ முதன் முதலில் கண்ணுடி செய்தது,
— எகிப்திலே சுமார் 3000 வருடங்களுக்கு முன்பு அக்கண்ணுடிகளின் வழியாக ஒளி ஊடுருவிப் பாய்ந்தது. ஒளி ஊடுருவும் கண்ணுடியானது கி. மு. 119 ஆம் வருடத்திலே செய்யப்பட்டது.

முகம் பார்க்கும் கண்ணுடிகள் 13 ஆம் நூற்றுண்டில் இத்தாலிய தேசத்திலுள்ள வெனிஸ்யா மாகாணத்தினரால் செய்யப்பட்டது. அதற்கு முன்னுலெல்லாம் மெருகிட்ட லோகக் கண்ணுடிகளை வைத்துக்கொண்டு முகம் பார்த்து அழகுபடுத்திக் கொண்டு வந்தார்கள்.

★ முதன் முதலில் இரும்பினுல் நீராவிக் கப்பல் செய்தது,
— இங்கிலாந்தில் 1843 ஆம் வருடத்தில்.

முதன் முதலில் விளக்குகளுக்கு மண்ணெண்ணெய் உபயோகித்தது,
— கி. பி. 1826 ஆம் வருடத்தில்.

தொகுப்பு: ஏ. மதிவதனி

## சூழ்நிலை பாதுகாப்பு

காடுகள் என்பன மனித வாழ்வுக்கு ஒரு பேருதவி புரிவன ஆகும். சிவபெருமான் நஞ்சினை உண்டு அமிர்தத்தை அளித்ததுபோல் காற்றில் உள்ள நச்சுக்களைத் தாம் ஏற்று தூய்மையான காற்றை நமக்கு அளிப்பன காடுகளும், தாவரங்களும். கடலில்எழுந்து வானில் இயங்கி எங்கோ சென்று கொண்டிருக்கும் முகிற் கூட்டங்களைத் தடுத்து மழையாகச் செய்ய வல்லவை காடுகள். ஆனல் அவற்றைப்பற்றி பெலலாம் எண்ணுமல் காடுகளை மனிதன் விரைவாக அழித்து வருகின்ருன். இந்த வரியைப் படித்து முடிப்பதற்குள் உலகில் பலநூறு ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டிருக்கும். அவ்வளவு விரைவாக மனிதன் அழித்து வருகிருன்.

தொகுப்பு: க. கனகராசா.




## இயற்கையும் இறைவனும்

கடலைக் கட்டிக் காத்தவனும்
காற்றைத் தந்து காப்பவனும்
உடலைத் தந்து உயிர்ப்பவனும்
உணர்வைப் படைத்த உத்தமனும்

மண்ணை அமைத்தே மகிழ்ந்தவனும்
மனைகள் சமைக்கச் சொன்னவனும்
விண்ணைப் புடைத்தே விட்டவனும்
வித்தை தந்த வித்தகனும்

பொன்னைப் பொருளைப் போட்டவனும்
பொழுதை நீரைச் சேர்த்தவனும்
கண்ணைத் தந்தே காத்தவனும்
கடவுள் என்றே கண்டவனும்

இறைவன் தந்த வாழ்வுதனை
இனிமை ஆக்கி வாழ்ந்திடுவோம்
குறைகள் இன்றி நடத்திடுவோம்
குணங்கள் போற்றிச் சிறந்திடுவோம்

காலை மாலை வணங்கிடுவோம்
கருணை வேண்டித் தொழுதிடுவோம்
வேலை செய்து உழைத்திடுவோம்
வெற்றி எய்தி வாழ்ந்திடுவோம்.

முருக. வே. பரமநாதன்

# தம்பதிகள் சுகமாய் வாழ.....

எக்காரணம் கொண்டும் மனைவியின் எதிரில் பிற பெண்களைப் புகழாதீர்கள்.

மனைவி அழகாய் இருப்பதாய் அடிக்கடி சொல்லுங்கள்.

கையில் பணம் இருக்கும் பொழுது சின்னச் சின்னப் பரிசுகள் வாங்கிக்கொடுங்கள்.

மனைவியின் சமையல் நன்றாகயிருந்தால் புகழுங்கள். இந்த மருந்துக்கு எந்தப் பெண்ணும் மயங்குவாள்.

நீங்கள் குடும்பத்தின் தலைவர் என்றால் உங்கள் மனைவி குடும்பத் தலைவி என்பதை மறவாதீர்கள். அவளுக்குச் சம அந்தஸ்தும், உரிமையும் கொடுத்து மதியுங்கள்.

பொதுவாகப் பெண்கள் அதிகம் பேச விரும்புகிறார்கள் உங்கள் மனைவி உங்களிடம் பேசும் பொழுது அதை அலட்சியப்படுத்திப் பேப்பர் வாசித்துக்கொண்டிருக்காதீர்கள்

எப்பொழுதும் வீட்டில் அடைந்து கிடந்து சலித்துப் போயிருப்பாள் அவள் அவளை உற்சாகப்படுத்த அடிக்கடி வெளியே அழைத்துப் போங்கள்.

தன் சம்பாத்தியத்திலேதான் குடும்பம் நடக்கிறது என்ற அம்பாவத்தை விட்டொழியுங்கள்.

அது உங்கள் மடமை! வீட்டிலிருக்கும் பெண்களும் நிறைய வேலை செய்துகொண்டுதானிருக்கின்றார்கள் என்பதைப் புரிந்து அனுதாபத்துடன் நடந்து கொள்ளுங்கள்!

சமயம் கிடைக்கும்பொழுது மனைவிக்கு வீட்டு வேலைகளில் கொஞ்சம் உதவி செய்யுங்கள். இதில் வெட்கப்பட ஒன்றுமில்லை.

மனைவி வேலைக்குப் போகிறவளாயிருந்தால் கட்டாயம் அவளுக்குத் தினமும் உதவி செய்யுங்கள்.

அவளைச் செக்கு மாடாய் நினைத்து நடத்தாதீர்கள். உங்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளையும் சேர்த்து எத்தனையோ விடுமுறைகள் கிடைக்கின்றன. அவளுக்கு வீட்டு வேலைகளிலிருந்து என்று விடுமுறை?

கணவன் – மனைவி இருவரிடையே சண்டைகள் வருவது இயற்கைதான். எனினும், அது அளவுக்கு மீறுமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

ஒருவர் கோபத்துடன் கத்தும்பொழுது மற்றவர் மௌனமாய் இருப்பது நல்லது. அவருடைய கோபம் தணிந்த பின்னர் நீங்கள் சொல்லவேண்டியதைச் சொல்லுங்கள்.

மூன்ரும் மனிதரின் எதிரில் (கணவன் – மனைவி தவிர்ந்த அடுத்த மனிதன் வெறுமே மூன்ரும் மனிதன் தான். தம் பிள்ளைகள் உட்பட) தம் துணைவியை அல்லது துணைவரை மட்டம் தட்டிப் பேசாதீர்கள்.

ஒருபோதும் உங்கள் வாழ்க்கைத் துணைவியை அல்லது துணைவரை மற்றவரோடு எந்தக் காரியத்திலும் ஒப்பிட்டுப் பார்க்காதீர்கள்; பேசாதீர்கள்.

ஒவ்வொரு மனிதனும் தனித்துவம் பெற்றவன் என்பது நினைவிருக்கட்டும்.

மனிதன் என்றால் தவறு செய்பவன். தவறு செய்யாத மனிதனே இல்லை. எனவே, தம் துணைவர் மீது கண்டதற்கெல்லாம் தப்புக்கண்டு பிடித்து குறைகூறிக்கொண்டு, சீறிக்கொண்டு இராதீர்கள். இதனால் வாழ்க்கையில் சலிப்பே ஏற்படும். நிறைகண்டு போற்றும் குணத்தைக் கடைப்பிடியுங்கள்.

வாழ்க்கையில் எந்த விஷயத்திலும் இருவருமே கலந்தாலோசித்து ஒருமித்து முடிவு எடுங்கள். இவளை என்ன கேட்பது என்று அவரும், இவரிடம் என்ன கேட்பது என்று அவளும் அலட்சியப்படுத்திவிடாதீர்கள்.

சந்தேகம் ஒரு புற்றுநோய். சந்தேகம் தோன்றினுல் அதை மனம்விட்டுப் பேசித்தெளிவுபடுத்திக்கொள்ளுங்கள் மனதிற்குள்ளே வைத்துப்புழுங்கி, வேர்விட்டு வளரவிட்டால் கடைசியில் அது இல்வாழ்க்கையைக் கெடுத்து விடும்.

ஒருவர்க்கொருவர் உண்மையாயிருங்கள். இங்கு உண்மை என்பது 'உன் மூக்கு சப்பையாக அசிங்கமாய் இருக்கிறது' என்று சொல்லி நோகவைக்கும் உண்மையைக் குறிப்பதில்லை.

ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை வையுங்கள். நம்பிக்கை இல்வாழ்வில் ஓர் உறுதியான இணைப்புப்பாலம்.

கடைசியில் ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். இருவரும் வெவ்வேறு குடும்பச் சூழ்நிலைகளில் வளர்ந்து இணைந்தவர்கள். பழக்கவழக்கங்களிலும், கொள்கைகளிலும், கருத்துக்களிலும் வேறுபாடு இருக்கலாம்.

தாம் விரும்புவதையே தம் துணைவரும் விரும்பி; தன் பழக்கவழக்கங்களையே அவரும் பின்பற்றவேண்டும் என எதிர்பார்த்து தன் வழியில் மற்றவரை இழுப்பதிலேயே குறியாக இருந்தால் இந்தப் போராட்டத்திலேயே உங்கள் இளமை மறைந்துவிடும்.

ஒருவரையொருவர் அவருடைய நிறைகுறைகளோடு, பழக்க வழக்கங்களோடு ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தைப் பெறுங்கள்.

பந்தை மேலே தூக்கி எறிந்தால்தான் அது திரும்பி வரும். எனவே, அன்பை, மரியாதையை ஒருவருக்கொருவர் கொடுத்து வாங்குங்கள். தன் மனைவி அல்லது கணவன் தன்னை எப்படி நடத்தவேண்டுமென விரும்புகிறீர்களோ அப்படியே தன் கணவனை அல்லது மனைவியை நீங்கள் நடத்துங்கள்.

மனக்கசப்புகள் பெரிய சண்டைகளினுல் மட்டும் உண்டாகிறது என்பதில்லை.

சொல்லப் போனுல் பெரிய சண்டைகளைவிட சின்ன விஷயங்கள், அசட்டையாய்ச் சொல்லப்பட்ட விஷமான வார்த்தைகள், அலட்சியப் பேர்க்குகள் மனதில் புண்களை உண்டாக்கி நாளாவட்டத்தில் புரைவோடி வாழ்க்கையின் அஸ்திவாரத்தையே அசைத்துவிடும்.

எனவே, பேச்சிலும், நடத்தையிலும் கவனமாயிருங்கள். ★

## தேன்

தேன் சத்துள்ள உணவு. நூறு கிராம் தேனில் சுமார் எழுபத்தேழுகிராம் சர்க்கரை கிடைக்கின்றது. அதனுல் 300 கிலோ கலோரிகள் சக்தியைப் பெறலாம். கருஞ்சிவப்பு நிறம் கொண்ட தேன் வகைகளில் சிறிது இரும்புச்சத்து உண்டு. (0.9. mgm %) இவற்றைத் தவிர வேறுசத்துக்கள் பயன் படக்கூடிய அளவில் கிடையாது.

தேனின் நறுமணம் பசியைத் தூண்டவல்லது. மருந்துகள் கொடுக்கக் குறிப்பாகச் சிறு குழந்தைகளுக்கு மிகவும் உகந்தது. இருமல் மருந்துகளுடன் சேர்த்துக் கொடுத்தல் மெத்த பயனுடையது. மலமிளக்கியாகவும் இதை உபயோகிக்கலாம். ஒரு வேளைக்கு ஒன்று அல்லது இரண்டு மேசைக் கரண்டியளவுதான் உண்ணலாம்.

நாளொன்றுக்கு 200 கிராம் தேனுக்கு மேல் அதிகமாக அருந்துவது நன்றன்று. நீரிழிவு (diabetes) உடையவர்கள் அவரவர்க்கேற்ற கணக்கு வரைக்கு உட்பட்ட அளவில் தான் இதை அருந்த வேண்டும். ★




# பெண்மைக்குப் பெருமை சேர்க்கும்

# ஆடிச் செவ்வாய்

ஆடிமாதம் அம்பாள் வழிபாட்டுக்கு உகந்த மாதமாகும்.

சந்திரன் கர்க்கடக சஞ்சாரத்தில் இருப்பதால் அது பெண்மைக்குப் பெருமை கொடுக்கும் நாளாகும்.

அதுவுமின்றி இம்மாதத்தில் வரும் செவ்வாய்க்கிழமைகள் மேலும் மகத்தானவை.

இந்நாட்களில் தேனில் தோய்த்த வெட்சிப் பூவைத் தூவி, துர்க்கா சூக்தம் என்னும் மந்திரத்தை ஓதி வழிவிழாவாக தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் ஆடிச்செவ்வாய் விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

இன்றும் அந்த வழிபாடு சிறந்த முறையில் இடம் பெற்று வருகின்றது.

ஒரு நேர உணவு உண்டு விரதநியமத்தோடு தேவியின் சந்நிதிக்கு வரும் பக்தர்கள் குங்குமத்தால் அர்ச்சினை செய்து நெய்விளக்கேற்றி தமது நேர்த்திகளை நியமமாக நிறைவேற்றுவர்.

ஒரு குறிக்கோளை வைத்து

துர்க்கா துரந்தரி செல்வி

**- தங்கம்மா அப்பாக்குட்டி -**

பட்டால் எல்லா இன்னல்களும் பிணிகளும் சூரியனைக் கண்ட பனிபோல விலகி ஒழியும்.

சங்கு, சக்கரம், சூலம், பாலம் ஆகிய நான்கையும் நான்கு கரத்திலும் தாங்கியுள்ள துர்க்காதேவி தானே ஒரு போகமூர்த்தி என்பதை உணர்த்தி நிற்கின்றாள்.

இந்த ஆண்டு ஆடி மாதத்தில் நான்கு செவ்வாய் தினங்கள் அமைவது குறிப்பிடத்தக்கது.

19-07-1988 முதலாவது செவ்வாய் ஆரம்பமாகிறது.

முன்னூறு ஆண்டுகளுக்கு முந்பட்ட பழைமையான ஏழு செவ்வாய் அல்லது ஒன்பது செவ்வாய் இவ்விரதத்தை அனுட்டிப்பர்.

''மங்கள சண்டி'' என்பது துர்க்கைக்கு ஒரு நாமமாகும்.

துர்க்கா சூக்த தோத்திரங்கள் அற்புதமானவை. அவற்றின் தமிழாக்கம் எல்லாரும் அறியவேண்டியதே.

அது வருமாறு.-

''அக்கினி வடிவில் விளங்கும் சக்திக்கு சோமரஸத்தைப் பிழிந்து தருவோம். அனைத்தையும் அறியும் அந்தச் சக்தி எமது பகைமைகளைப் பொசுக்கட்டும். அது எமது எல்லா ஆபத்துக்களையும் போக்கட்டும். கப்பலால் பாவக்கடலைக் கடப்பதுபோல் பாவக்கடலில் இருந்து அக்கினிசக்தி நம்மரை அக்கரை சேர்க்கட்டும்''— ★

## துளசி மணம்

அதிகாலை காப்பி அருந்துவதற்கு முன் வெறும் வயிற்றில் 15 இலிருந்து 100 வரை துளசி இலைகளைச் சுவைத்து வந்தால் சிலவகைச் சுகவீனங்களுக்குப் பயன் தெரியும். குளிர் காலத்தில் அதிகமாகவும், வெயில் காலத்தில் குறைவாகவும் உட்கொள்ள வேண்டும். குழந்தைகளுக்கு 5 முதல் 25 வரை கொடுக்க வேண்டும். துளசிச் சாறெடுத்தும் 25 கிராம் வரை அருந்தலாம். வெறும் துளசியை விரும்பாதவர் தயிரிலோ, தேனிலோ, தண்ணீரிலோ கலந்து அருந்தலாம். பால் கூடாது. சுகவீனத்திற்கேற்ப அதிகாலையில் ஒரு முறையோ, ஒரு நாளைக்கு இரண்டு, மூன்று முறையோ உட்கொள்ளலாம். துளசியால் குணமடையும் வியாதிகள்.

1. மணல்வாரி அம்மையை நெருங்க விடாது.
2. ஒற்றைத் தலை வலிக்கு அருமருந்து.
3. கண்சம்பந்தமான நோய்களை அண்டவிடாது.
4. பெண்களின்மாதவிடாய்க் கோளாறுகளைச் சரிப்படுத்தும்.
5. சோகைநோயைக் குணப்படுத்தும்.
6. புற்றுநோய்க்கு ஒருசிறந்த மருந்து. குறிப்பாக பெண்டிருக்கு ஏற்படும் புற்று நோய்க்கு ஓர் அரிய மருந்து.
7. ஆறுத புண்களை ஆற்றும் சக்தி கொண்டது.
8. தோல் சுருக்கம் நீங்கும். எலுமிச்சைச் சாற்றுடன் உட்கொண்டால், சொறி சிரங்குகளையும் குணப்படுத்தும்.
9. சாதாரண தலைவலி சளி அருகில் நெருங்கா.—

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ‘விதவை’ சொல்லுக்கு பொட்டு இல்லை; ‘கைம்பெண்’ணுக்கு பொட்டு உண்டே!

## கண்ணதாசன் விழாவில் கலைஞர் கருணாநிதி



கண்ணதாசன்

அமரர் கவிஞர் கண்ணதாசனின் 61 ஆவது பிறந்தநாள் நினைவுவிழா அண்மையில் சென்னை மியூஸிக் அக்கடமியில் நடந்தது.

விழாவில் இசைஞானி இளையராஜாவும் கலைஞர் கருணாநிதியும் நிகழ்த்திய பேச்சுக்கள் இங்கு தரப்படுகின்றன.

நண்பர் கண்ணதாசனின் கருத்துக்கள் அவ்வப்போது மாறுபடுவதை இங்கே எடுத்துக் காட்டினார்கள்.

அதிசம் உணர்ச்சிவசப்படக் கூடியவராகவும், குழந்தை மனம் கொண்டவராகவும் கண்ணதாசன் இருந்ததன் காரணமாகவே அவரிடம் அந்த மாற்றங்கள் திடீர் திடீரென ஏற்பட்டன.

உணர்ச்சி வேகத்தில் அவர் எவ்வளவு அவசரமான முடிவுகளை மேற்கொள்வார் என்பதற்கு நான் ஒரு நிகழ்ச்சியை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அந்தக் காலத்தில் நான் சேலத்தில் இருந்தபோது பொள்ளாச்சியில் திராவிட கழக சார்பில் ஒரு பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ள பயணமாகிக் கொண்டு இருந்தேன். வழியில் என்னைச் சந்திக்க கண்ணதாசனும் வருவதாகப் புறப்பட்டு விட்டார்.

என்னோடு பொள்ளாச்சி வந்து சேர்ந்தவர், நான் பேசுவதற்காக மேடையில் ஏறி அமர்ந்தபோது அவரும் கூட மேடையில் வந்து உட்கார்ந்தார்.

அப்போது அவர் நெற்றியில் திருநீறும், குங்குமமும் அணிந்திருந்தார். "அந்த நிலையில் தானும் வேறு பேசலாமா" என்று வேறு என்னிடம் கேட்டார்.

ஓய். நெற்றியில் விபூதியும் குங்குமமும் அணிந்து கொண்டு இந்தக் கூட்டத்தில் நீர் பேசமுடியுமா...? என்று நான் அவரைக் கேட்டேன். அடுத்த கணம் அதற்கென்ன... அதை அழித்தால் போயிற்று என்று சட்டென கையால் நெற்றியில் தேய்த்து அழித்து விட்டார். இப்படித்தான் அவர் எந்த முடிவையும் உடனே எடுத்து விடுவார்.

கண்ணதாசன் என்னை மட்டுமல்ல அண்ணாவை, பெருந்தலைவர் காமராஜரை, மூதறிஞர் ராஜாஜியை என்று அனைவரையுமே போற்றியது போலவே தூற்றியும் இருக்கிறார். ஆனால் அவருடைய அழகுத் தமிழுக்காக அவர் போற்றுகிறாரோ தூற்றுகிறாரோ என்பதை மறந்து அனைவரும் அவரைப் பாராட்டினார்கள்.

கண்ணதாசன் தனக்குப் பின்னால் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தாமல் இளங்கவிஞர் வரிசையை உருவாக்கியதே அவருடைய பெருமையாகும் என்று இங்கு தம்பி வலம்புரி ஜான் குறிப்பிட்டார்.

ஆம் இன்று ஆர்வம் மிக்க இளங்கவிஞர்களை, புதுக் கவிதை பாடும் ஆற்றல் உடையவர்களை நிறையப் பார்க்கிறோம். அவர்கள் சிந்தனை புதுமை நயத்தோடு விளங்குகிறது.

ஒரு இளங்கவிஞர் புதுக் கவிதை பாடி இருந்தார். விதவை என்ற சொல்லுக்குக் கூடப் பொட்டில்லையே என்று அவர் கவிநயத்தோடு எழுப்பிய வினா நம் உள்ளத்தைத் தொடுவதாகும். நான் அந்த இளங்கவிஞருக்குச் சொன்னேன். ‘விதவை’ என்பது வடசொல். கைம்பெண் என்று தூய தமிழில் எழுதிப்பாருங்கள். அந்த வார்த்தைக்கு இரண்டு பொட்டு இருக்கிறது என்று. நான் அப்படிக் கூறியது அந்த இளங்கவியை வெல்வதற்காக அல்ல, நம் தமிழைப் போற்றுவதற்காக.



— இசைஞானி இளையராஜா

திரை இசையில் கவிஞர் கண்ணதாசன் பாடலுக்கு இசை அமைக்கும் வாய்ப்பு நமக்குக் கிடைக்குமா என்று ஏங்கிக்கொண்டு இருந்தவன் நான்.

முதன்முதலாக என்னை இசையமைப்பாளனாக்கி வைத்து பஞ்சு அருணாசலம் அன்னக்கிளி படத்தை [illegible] வந்தபோது அப்படத்திற்கு கவிஞர் கண்ணதாசன் அவர்கள்தான் பாடல்கள் எழுதப் போகிறார் என்று அவர் சொன்னபோது நான் மிகவும் பூரிப்படைந்தேன்.

ஆனால் அந்தச் சமயம் கவிஞர் அவர்கள் சிங்கப்பூர் பயணம் சென்றுவிட்டதால் அன்னக்கிளி படத்திற்கு அவர் பாடல் எழுத முடியாமல் போய்விட்டது.

அதன்பின் கவிஞர் அவர்கள் மற்றொரு படத்திற்காக ‘குலேகுலையாய் முந்திரிக்காய்’ என்று குழந்தைகள் பாடுவதாக எழுதிய பாடலுக்கு முதன்முதலாக நான் இசையமைத்தேன். அந்தப்பாடலை என்முன் அமர்ந்து கவிஞர் எழுதும்போது இப்பாடலின் இரண்டு இடங்களில் வா ராஜா, வா என்ற அடிகளை உன்னை வாழ்த்துவதுபோல சேர்த்திருக்கிறேன் என்று அவர் குறிப்பிட்டார். அப்போது நான் அடைந்த பெருமைக்கு அளவே இல்லை.

மற்றக் கவிஞர்களிடம் இல்லாத ஒரு பெரும் சிறப்பு கவிஞர் கண்ணதாசனிடம் உண்டு. ஒரு பாடலுக்கு நான் டியூன் போட்டுக்காட்டியதும் அவர் பாடல் வரிகளை மளமளவென்று சொல்லிக்கொண்டே போவார்.

இடையில் இப்படி இருக்கட்டுமா?...... அல்லது வேறு சொல்லட்டுமா என்று அடுத்து புதுவரிகளை தடங்கல் இல்லாமல் சொல்லுவார். நான் எப்படி மாற்றிக்கேட்

சென்னையில் இருந்து
தி. மேனகன்

டாலும் உடனே அவரால் கவிதைமழை பொழிய முடியும்.

ஆனால் இப்போது சில கவிஞர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கஷ்டப்பட்டு சிலவரிகளை எழுதிக்கொண்டு வருவார்கள். அதில் ஏதாவது வார்த்தைகளை மாற்ற வேண்டும் என்று நாம் கேட்டால் கூட இல்லை நான் எழுதிவந்திருப்பதுதான் சரி என்று வாதிட்டுக்கொண்டு இருப்பார்களே தவிர, வரிசை மாற்றித்தர முனையமாட்டார்கள். காரணம் உடனே ஒரு புதுவரிசை எழுத அவர்களால் முடியாது.

# சிம்பு பற்றி அப்பா ராஜேந்தர்

சிம்பு, 4 வயதுச் சிறுவன். பிரபல நடிகர், டைரக்டர் டி. ராஜேந்தரின் புதல்வன்.

அவரின் ‘என் தங்கை கல்யாணி, படத்தில் தூள் பறக்க சிம்பு நடித்துள்ளான்.

சிம்புவின் முழுப்பெயர் சிலம்பரசன்.

அண்மையில் குடும்பத்துடன் வெளிநாட்டுப் பயணம்



சிம்பு

ஒன்றை முடித்துக் கொண்டு ராஜேந்தர் நாடு திரும்பினார்.

செய்தியாளர்களிடம் அவர் தனது அனுபவம் பற்றிச் சொன்னார்.

கேள்வி: சிலம்பரசனை உங்கள் சொந்தப் படங்களைத் தவிர மற்றவர்கள் எடுக்கும் படங்களில் நடிக்க வைப்பீர்களா?

பதில்: என் பையனை வைத்துப் பெயர் சம்பாதிக்க வேண்டும் என்று எண்ணுபவன் நான். அவனை வைத்துப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்று எண்ணுபவன் அல்ல.

கேள்வி: சினிமாவில் புகழ் பெற்ற பின்பு அரசியல் துறையில் புகுவது நல்லதா அல்லது அரசியல் துறையில் புகழடைந்த பிறகு சினிமாத்துறையில் புகுவது நல்லதா?

பதில்: குளிப்பதற்காக சோப் போடலாமா? சோப்பு போடுவதற்காகக் குளிக்கலாமா? என்று கேட்பதைப் போல இருக்கிறது நீங்கள் கேட்கும் கேள்வி.

அரசியலில் ஆதாயத்துக்கு நுழையக் கூடாது. சமுதாய நலன் கருதி நுழைய வேண்டும் என்பதே என் கருத்து.

இப்படி ராஜேந்தர் சொன்னார். ★

# காலங் கடந்து வருகிறான் ‘காலத்தை வென்றவன்’

எம். ஜி. ஆர் நடித்த காட்சிகளைக் கொண்ட ‘காலத்தை வென்றவன்’ படத்தைத் திரையிட ஜானகி அம்மாள் அனுமதி வழங்கி விட்டார்.

திரைப்படத் தயாரிப்பாளரும் டைரக்டருமான மோகன் காந்திராமன் பாரத் சினி கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்தின் சார்பாக "காலத்தை வென்றவன்" என்ற படத்தைத் தயாரித்தார்.

இது முழு நீளக் கதை அம்சம் கொண்ட படம் அல்ல.

எம். ஜி. ஆர் நடித்துள்ள பிரபலமான பல படங்களின் முக்கிய சுவையான பாடல், சண்டைக் காட்சிகளுடன் உணர்ச்சிமயமான காட்சிகளையும் ஒன்றாக இணைத்துத் தயாரிக்கப்பட்ட படம்.

இதில் எம். ஜி. ஆர் நடித்த பல படங்களுடன் அவர் சம்பந்தமான அபூர்வமான ‘ஸ்டில்’களும் இடம் பெற்று உள்ளன.

இப்படத்தைத் திரையிடுவதற்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் எம். ஜி. ஆர். சார்பாக வழக்குத் தொடரப்பட்டுத் தடை உத்தரவு வாங்கப்பட்டது.

1981 இல் இவ்வழக்கு நடந்தது.

[illegible] ‘காலத்தை வென்றவன்’ படம் சம்பந்தமாக மோகன் காந்திராமனும் எம். ஜி. ஆரின் மனைவியுமான ஜானகி அம்மாளும் சமரச ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டனர்.



எம். ஜி. ஆர்.

இப்போது படம் திரையிடப்படவுள்ளது. மோகன் காந்திராமன் இப்போது தென் இந்திய திரைப்படத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக இருக்கிறார். (எ - 4)

## துணுக்கு

டிசம்பர் 2,000 என்ற பெயரில் ராமராமன் பிரபாகர் ஆரம்பித்த படம் தற்போது ‘நாளை மனிதன்’ ஆகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

★ ★ ★

பழைய நடிகைகள் வரிசையில் ரசிகர்கள் மறந்து போயிருந்த வாணிஸ்ரீ இப்போது மீண்டும் நடிக்கவந்திருக்கிறார். தமிழில் அல்ல! தெலுங்கில்

# சிவாஜி நடிக்கும் ‘புதியவானம்’

‘புதிய வானம்’ படத்தில் சிவாஜி கணேசன் நடிக்கின்றார்.

‘சத்யா மூவிஸ்’ இப்படத்தைத் தயாரிக்கிறது.

புதிய கட்சியை துவக்கிய பின்னர் சிவாஜி நடிக்க ஒப்புக்கொண்ட ஆரம்பித்திய படம் ‘புதிய வானம்’

அ. தி. மு. க. ஜானகி அணியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான ஆர். எம். வீரப்பனின் சத்யா மூவிஸ், சிவாஜி கணேசனை வைத்து தயாரிக்கும் முதல் படம் இது என்று சொல்லப்படுகிறது.

வீரப்பனின் மகன் உதயகுமார் திரைக்கதை, வசனம் எழுதி டைரக்ட் செய்யப் போகிறார்.

இசை: அம்சலேகா சிவாஜியுடன் சத்யராஜ், கவுதமி, ரூபிணி, ஜனகராஜ் ஆகியோரும் நடிக்கிறார்கள்.



கௌதமி

சினிமாஸ் கோப்பில் தயாராகின்றது ‘புதிய வானம்’ முதலில் ‘புரட்சித் தமிழன்’ என்ற பெயர் வைக்கப்பட்டிருந்தது. பின்னர் அது மாற்றப்பட்டது.

(எ-4)

# கலைஞர் வசனத்தில் ‘பொறுத்தது போதும்’

முதலமைச்சர் பதவிக்காகப் பொறுத்தது போதும் என்று கலைஞர் கருணாநிதி கூறவில்லை.

அவர் திரைக்கதை, வசனம் எழுதும் புதிய படத்தின் பெயர்தான் ‘பொறுத்தது போதும்’.

படத்தைத் தயாரிப்பவர் பழ. கருப்பையா. ஜனதாக் கட்சியில் இருந்து விலகி அண்மையில் தி. மு. க. வில் சேர்ந்தவர் தான் இவர்.


கதாநாயகனாக விஜயகாந்த் நடிக்கிறார். டைரக்ஷன்: கலைமணி, இசை. இளையராஜா

தொடக்கவிழா சென்ற 13 ஆம் திகதி நடந்தது. படப்பிடிப்பு ஆவணியில் ஆரம்பமாகிறது.

‘தீர்த்தக் கரையினிலே’ படத்தைத் தயாரித்த கமல சித்திரம் நிறுவனத்தின் பெயரில் தான் இப்படமும் தயாரிக்கப்படுகிறது. (எ-4)

**வெள்ளித் திரையில்**

# சொற்சிலம்பம்



போட்டி இல. 83

சொற்சிலம்பம் இல: 83
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

——— இங்கே வெட்டு ———

முடிவு திகதி: 20-7-1988

**இடமிருந்து வலம்**

1. நெடுங்காலம் வாழ்பவன் 3. தமிழ் மாதங்களில் ஒன்று 6. ஒரு மந்திரம் 9. போதை தருவது 11. பம்பைக் கட்டுப்படுத்தும் இசைக்கருவி 12. காலில் அணியும் ஒரு அணிகலன் 14. பெரிய மிருகத்தின் விலையுயர்ந்த உறுப்பு 15. பால்பகா உயர்திணைத் தன்மைப் பன்மைச் சொல் 16. அணிந்து கொள் 17. கண் 18. மனைவியை இழந்தவன் 19. பஸ்களில் இது தடைசெய்யப்பட்டுள்ளது 20. சூட்டிக் கொள்.

**மேலிருந்து கீழ்**

1. ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்று 2. குணம் 4. நகை 5. தாமரை 7. சூரியன் 8. மடல் 10. பறக்கும் பூச்சி இனம். கடைசி எழுத்தை இழந்து நிற்கிறது 12. துண்டு துண்டாகுதல் 13. புறங்கூறுதல் 15. நேரத்தை அளவிடும் அலகு 16. அடைக்கும் தாழ் இல்லாதது 17. பூமி தலை கீழாகிவிட்டது 18. மாறி நிற்பதால் தவிக்கிறது.

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டப்பட்டு வருபவை மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | 100 ரூபா |
| இரண்டாம் பரிசு: | 50 ரூபா |
| மூன்றாம் பரிசு: | 25 ரூபா |


உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை வளமாக்க

உழைக்கும்போதே சிறுகச் சிறுகச் சேமியுங்கள்...........

சேமிப்புக்கு வழிகாட்டி "ஷப்ரு"

மாதாந்த சேமிப்பு

உயர் வட்டியுடன்

உங்கள் கைகளுக்குக் கிடைக்க ‘ஷப்ரு’வை நாடுங்கள்

மாதாந்தம் ரூபா 500 சேமித்தால்

36 மாதங்களில் ரூ. 23216/35 கிடைக்கும்

மாதந்தோறும் 100 ரூபாவின் மடங்குகளாக 12, 24, 36 மாதங்களுக்குச் சேமிக்க முடியும்.

மேலதிக விபரங்களை எமது அலுவலகத்திற்கு நேரில் வந்தோ அல்லது கீழேயுள்ள கூப்பனை நிரப்பி அனுப்புவதன் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்.

ஷப்ரு

யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்

61, நியூ புல்லர்ஸ் வீதி, கொழும்பு - 4.
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தங்களின் மாதாந்த சேமிப்புத் திட்டம்பற்றி மேலதிக தகவல்களை தயவு செய்து அனுப்பும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

பெயர்: ..............................

விலாசம்: ..............................

தொழில்: ..............................

(C/5163) கையொப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரியை நண்பனாக கருதுவது கோழைத் தனத்தினால் அல்ல!

## கருணாநிதி விளக்கம்

தமிழகத்தில் தி. மு. க கொடியா, காங்கிரஸ் கொடியா எந்தக்கொடி உயரப் பறக்கவேண்டும் என்று மக்கள்தான் முடிவு செய்ய வேண்டும் என்று கருணாநிதி கூறினார்.

சேலம், நகரசபைத் தலைவர் சூடாமணியின் மகள் திருமணத்தை நடத்திவைத்து தி. மு. க. தலைவர் கருணாநிதி பேசியதாவது:

காமராஜருக்கும், எனக்கும் அரசியல் ரீதியாக பல கருத்து வேறுபாடுகள் உண்டென்றாலும் எனது இல்ல நிகழ்ச்சிகளுக்கு அவர் என்றும் வரத் தவறியதில்லை.

ராஜாஜியும் பெரியாரும் தமிழகத்தில் இரு துருவங்களாகத்திகழ்ந்தார்கள். இருந்தாலும் அவர்களிடையே இருந்த பாச உணர்வை ராஜாஜி மறைந்த போது பெரியார் கண்ணீர் விட்ட போது அருகிலிருந்து பார்த்தேன்.

காயிதே மில்லத், காமராஜ், பெரியார், அண்ணா போன்றவர்கள் நமக்கு இத்தகைய பண்பாட்டைக்கற்றுத் தந்துள்ளார்கள். இன்றைக்கும்கூட எடுத்தேன். கவிழ்த்தேன் என்றும் இவர் எனக்கு பிறவி எதிரி, இவர் கண்ணிலே கூட விழிக்க மாட்டேன். இவர் அருகில் செல்லக் கூடாது என்று சிலர் வேகமாகக் பேசுகிறார்கள். அது அவர்கள் வேகத்தைப் காட்டுமேதவிர விவேகமாகாது.

என்னை யார் எதிரி என்றாலும்கூட நான் அவர்களை நண்பனாகக் கருதுகிறேன் என்று கூறிவருகிறேன். இது கோழைத் தனம் என்று யாரும் கருதிவிடவேண்டாம். பெரியார், அண்ணா, காமராஜ் போன்றவர்கள் நமக்குகற்றுத் தந்த பண்பாடு இது.

இங்கு பேசியவர்கள் மணமக்கள் மிகவும் படித்தவர்கள். ஒத்தகருத்துக்கொண்டு பழகுபவர்கள் என்று சொன்னார்கள். மணமக்கள் இருவரும் டாக்டர்கள். எப்போதும் இரண்டு கடிகாரங்கள் ஒரே நேரத்தைக் காட்டாது. அதுபோலவே இரண்டு டாக்டர்கள் ஒரே மருந்தை எழுதித் தரமாட்டார்கள். ஆனால் நோயைத் தீர்க்கவேண்டும் என்ற ஒரே கருத்தைக் கொண்டிருப்பார்கள்,

என்னைக்கேட்டால் தி.மு.க. கொடி பறந்தால், நாடு வாழும் என்பேன். மற்றவரைக் கேட்டால் காங்கிரஸ் கொடி பறந்தால் நாடு வாழும் என்று சொல்வார். எந்தக் கொடி பறக்கவேண்டும் என்பதை மக்கள் தான் முடிவுசெய்யவேண்டும். எது சரியான முடிவு என்பதை இந்த இடத்தில் நான் சொல்வது சரியாக இருக்காது. ஏனென்றால் அது அரசியல் பண்பாடாக இருக்காது. முழுக்கமுழுக்க நமது கட்சிக்காரர்கள் கூடுகின்ற விழாக்களில் நான் அரசியல்பேசுவது உண்டு. இப்படிப்பட்ட எல்லா அரசியல் கட்சிக்காரர்


கருணாநிதி

களும் கூடுகின்ற இடத்தில் நான் அரசியல் பேசுவதே இல்லை.

— இவ்வாறு கருணாநிதி பேசினார். ★

# ஆடம்பரம் என்னிடம் இருக்காது!
## ஜானகி அம்மாள் பேச்சு!!

அண்ணா உருவச்சிலை திறப்பு விழாவில் ஜானகி அம்மாள் கலந்து கொண்டார். அவர் மேடையில் இருந்த பொத்தானை அழுத்தி அண்ணா சிலையை திறந்துவைத்தார்.

விழாவில் அவர் பேசியதாவது:

### புகழ்

சினிமாவில் மக்கள் திலகம் பெயரும், புகழுடன் இருந்த போது நாடகம் நடத்தி வந்தார்: காரணம் 40, 50 பேருக்கு வேலை கிடைக்கும் என்று அவர் கருதினார். நாடகத்தில் நடித்தபோது அவருக்கு ஒரு விபத்து ஏற்பட்டது. 350 பவுண்டு எடையுள்ள சண்டை நடிகர் குண்டுமணியை அவர் தூக்கியபோது கால் தவறியதால் காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது.

எனக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்கிறார்கள். எனக்கு அதிகப்பிரசங்கியாக பேசத் தெரியாது என்பது உண்மை. ஆடம்பரம் என்னிடத்தில் பார்க்க முடியாதது. அதே நேரத்தில் அடக்கமாக அன்பாக பண்புடன் பேச தெரியும். மக்களின் தேவைகளை அறிந்து கொண்டு செய்ய எனக்குத் தெரியும்.

இவ்வாறு ஜானகி அம்மாள் பேசினார். ★

# மரண பயத்தில் இருந்து மீள இலக்கியங்கள் படித்தேன்!

83 வயதானாலும் இன்னும் தளராத நெஞ்சுறுதியோடும் அயராத ஊக்கத்தோடும் செயற்படும் ம. பொ. சிவஞானகிராமணியார் ஒரு சரித்திரம்.

83 ஆவது பிறந்தநாளை அண்மையில் கொண்டாடிய சிலம்புச் செல்வர் 'ம. பொ. சி.' தமிழின் செல்லக் குழந்தை.

அவரையும் தமிழையும் பிரித்துப்பார்க்க இயலாது.

தனது அனுபவங்களை இங்கு அவர் கேள்வி, பதிலாக சஞ்சீவி வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கிறார்.

? அரசியலில் சினிமா நடிகர்கள் அதிகம் ஈடுபடுவது பற்றி உங்கள் கருத்து என்ன?

! அது தனிமனிதர் உரிமை. வரக்கூடாது என்று சொல்ல மாட்டேன். வரவேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன். எல்லோரும் காந்தியாக முடியாது. அதுபோல எல்லா நடிகர்களும் எம். ஜி. ஆர். ஆகி விடமுடியாது.

எம். ஜி. ஆருக்கு. கலைஞன் எந்த எல்லையில் நிற்கவேண்டும் என்பது கடைசிக்காலம் வரை தெரிந்திருந்தது.

நடிகர்களுக்கு ஏன் இந்த வறுமைப் புத்தி என்பது தெரியவில்லை. அவர்களுக்குக் கிடைக்கிற புகழும் செல்வமும் யாருக்கும் கிடைப்பது இல்லை. அப்படி இருக்கும்போது அவர்களுக்கு ஏன் இந்த அரசியல் ஈடுபாடு?

? இன்றைய அரசியல் தலைவர்கள் பற்றி உங்கள் மதிப்பீடு என்ன?

! என்னைப் பொறுத்தவரையில் அரசியலில் நேர்கோட்டில் நடைபோடுபவர்களையே மதிக்கத்தக்க தலைவர்களாகக் கருதுகின்றேன். அப்படித்

## சிலம்புச்செல்வரின் பிறந்ததினப் பேட்டி

தான் ராஜாஜியை நேசித்தேன். காமராஜனைக்கூட மதித்தேன். கடந்த 20 ஆண்டுகளில் அப்படிப்பட்ட தலைவர்களைக்காண முடியவில்லை.

நேர்கோட்டில் நடைபோடும் ஒழுக்க சீலர்களைத் தலைவர்களாகத் தோற்றுவிக்கும் சக்தியை தமிழகம் இழந்துநிற்கிறது.

? உங்கள் தனிவாழ்வில் ஏற்பட்ட திருப்புமுனை எது?

! எனது சொந்த ஜாதிக்கே எதிராக மதுவிலக்கை விரும்பி கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டது. அதனால் எனது குடும்பத்தையே பட்டினிப் படுகுழியில் தள்ளினேன்.

மராட்டிய மாநிலத்தில் அமராவதி சிறையில் 1½ ஆண்டுகள் பிரிட்டிஷ் அரசு என்னை சிறைவைத்தது. பிற்காலத்தில் ஜனாதிபதி பதவிக்குவந்த சஞ்சீவரெட்டி, வி. வி. கிரி மற்றும் காமராஜர், பக்தவத்சலம், சத்தியமூர்த்தி ஆகியோருடன் சிறையிருக்கும் பேற்றை பிரிட்டிஷ் அரசு அளித்தது. அது எனது வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்பட்டது. அங்கு தனிமை வாழ்க்கையே நடத்தவேண்டிய நிலை. அதனால் இலக்கியங்கள் பயின்றேன். உடல் நோய்ப்பட்டு நிறைகுறைந்தது. மரணபயம் ஏற்பட்டது. அந்தப்பயத்திலிருந்து மீளத்தான் ஆசிரியர் துணையின்றி நானே இலக்கியங்களைப் படித்தேன்.

அமராவதிச் சிறை வாழ்க்கை இல்லை என்றால் நான் இன்று இருக்கும் நிலையை அடைந்திருக்கமுடியாது.

? உலகத் தமிழ் மாநாடுகளில் தமிழ் வளர்ந்து இருக்கிறதா?

! கோவில் பிரமோற்சவம் மாதிரித்தான் தமிழ்மாநாடும் ஆகி விட்டது. தமிழுக்காக நடக்கும் மாநாடுகளில் தமிழ் மொழியை வாசற்படியில் கட்டி வைத்து விட்டு ஆங்கிலம் கோலோச்சுகிறது.

? 20 ஆண்டுகால திராவிட ஆட்சிகளைப் பற்றி உங்கள் கணிப்பு?

! நமக்கு ஜனநாயகமே விடுதலைக்குப் பிறகு கிடைத்த புதிய சரக்கு. சமீப 20 ஆண்டு ஆட்சியில் விரும்பத்தகாதவை நடந்து இருக்குமானால் அதில் அவர்களோடு ஒத்துழைத்தவர்களும் பொறுப்பு ஏற்கத்தான் வேண்டும். முன்


மா. பொ. சி.

இருபது, பின் இருபது என்றோ, தேசிய ஆட்சி, திராவிட ஆட்சி என்றோ விமர்சித்துப் பார்ப்பதை நான் விரும்பவில்லை. உண்மையில் எந்த ஒரு கட்சியும் தன் காலில் நிற்கும் சக்தியைப் பெறவில்லை.

ராஜாஜி ஒத்துழைப்போடு தான் திராவிட பாரம்பரியம் என்று சொல்லிக் கொள்பவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். ★

# அ.தி.மு.க. 'ஜெ' அணியில் மோதல்!

## ஜெயலலிதா பேட்டி

"கட்சிக்குள் தனக்கும் மூத்த தலைவர்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகள் விரைவில் தீர்க்கப்பட்டு விடும். என அதி.மு.க. (ஜெ) பொதுச்செயலாளர் ஜெயலலிதா தெரிவித்தார். கட்சிக்குள் எந்தக் குழப்பமும் இல்லை எனவும் தெரிவித்தார்.

ஜெயலலிதா நிருபர்களிடம் கூறியதாவது:

கே: சமரச முயற்சி எவ்வளவு தூரத்தில் உள்ளது?

ப: சமரச முயற்சி தொடர்கிறது. நல்ல முடிவு கிடைக்கும் என்று நம்புகிறேன்.

கே; எதனால் இந்தப் பிரச்சினை ஏற்பட்டது?

ப; (மௌனம்)

கே: அரசியல் விவகாரக் குழுவை கலைக்க உங்களுக்கு அதிகாரம் இல்லை, பொதுக் குழுதான் கூடி முடிவு செய்ய வேண்டும் என்று கூறுகிறார்களே.

ப: இது உட்கட்சி விவகாரம், பொதுச்செயலாளருக்கு அரசியல் விவகாரக் குழுவை கலைக்க அதிகாரம் உண்டு. கட்சியின் பொதுக்குழுவை அடிக்கடி கூட்ட முடியாது. பொதுக் குழு கூடாத போது இடையில் ஏற்படும் பிரச்சினைகளுக்குப் பொதுச் செயலாளர் முடிவு எடுக்கலாம். பின்னால் இதைக் கட்சியின் ஆட்சிமன்றக் குழுவின் ஒப்புதல் பெறலாம். அரசியல் விவகாரக் குழுவைக் கலைத்தது இந்த அடிப்படையில் தான்.

### ஜானகி

கே: ஜானகி நேற்று விடுத்துள்ள அழைப்பைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: நாங்கள் தான் உண்மையான அ. தி. மு. க. என்று பொதுமக்களும் கட்சித் தொண்டர்களும் ஏற்றுக் கொண்டு உள்ளார்கள். எம். ஜி. ஆர். மறைந்தவுடன் நெடுஞ்செழியன் முதல்வர் பொறுப்பேற்றார். அவர் தொடர்ந்து நீடிக்கட்டும் என்றோம். ஜானகி தானே முதல்வர் என்று பிரகடனப்படுத்திக் கொண்டதுடன் எம். ஜி.


ஜெயலலிதா

ஆர். ஏற்படுத்திய ஆட்சியைக் கலைக்கவும் காரணம் ஆனார். இன்றைக்கு நீலிக்கண்ணீர் வடிக்கிறார் ஜானகி.

கடந்த ஜனவரி 13ம் தேதி அவ்வை சண்முகம் சாலையில் உள்ள கட்சி அலுவலகத்தின் கதவுகளைப் பூட்டி, பொலீசாரை விட்டு நெடுஞ்செழியன், திருநாவுக்கரசு, பண்ருட்டி மற்றும் என்னையும் அடித்தார். அப்போது இந்தத் தாய்ப்பாசம் எங்கே போனது. எனவே இந்த நீலிக் கண்ணீரை நம்பி நாங்கள் ஏமாறமாட்டோம். ஜானகியின் தலையீட்டால்தான் கட்சியில் பிளவு ஏற்பட்டது.

கே: நெடுஞ்செழியன் தனிக்கட்சி தொடங்கப்போகிறாராமே.

ப: அதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது.

கே: நெடுஞ்செழியன், பண்ருட்டி, திருநாவுக்கரசு உங்களைச் சந்தித்தார்களா?

ப: சமரச முயற்சிகள் நடந்து கொண்டு இருக்கும் போது நான் அதைப் பற்றிக் கூற விரும்பவில்லை.

கே: உங்கள் டில்லிப்பயணம் எப்போது,

ப: இப்போதைக்கு எதுவும் இல்லை.

கே: கட்சியில் இருந்து பாஸ்கரராவை நீக்குக என்று

### சென்னையிலிருந்து தி. மேனகன்

நகரில் போஸ்டர்கள் ஒட்டி இருக்கின்றனவே.

ப: நான் அது மாதிரிப் போஸ்டர்களைப் பார்க்கவில்லை.

கே: நெடுஞ்செழியன், திருநாவுக்கரசு, பண்ருட்டி ஆகியோருடன் நீங்கள் பேசினீர்களா?

ப: கட்சித் தலைவர்கள் பேசிக் கொண்டு இருக்கிறார்கள்.

கே: காங்கிரஸில் ஒரு பிரிவினர் அ. தி. மு. க. வுடன் கூட்டணி கூடாது என்று கூறுகிறார்களே.

ப: அது அவர்களுடைய சொந்தக் கருத்து. கூட்டணி பற்றியே இன்னும் பேசவில்லை. தேர்தலே இன்னும் அறிவிக்கப்படாதபோது கூட்டணி பற்றி எப்படி [illegible] முடியும்.

கே: அப்படியானால் டில்லியில் பூட்டாசிங் - பண்ருட்டி சந்திப்பு எதற்கு நடந்தது?

ப. ஜூலை மாதத்தில் தேர்தல் நடக்கும் என்ற நம்பிக்கையில் அவர்கள் சந்தித்துப் பேசினார்கள்.

கே: தி. மு. க. மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் உடனடியாகத் தேர்தல் நடத்தவேண்டும் என்றுபோராட்டம் நடத்தினார்களே. அது போல நீங்கள் போராட்டம் நடத்தவில்லையா?

ப: ஆரம்பத்தில் இருந்தே தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று நான் வலியுறுத்தி வருகிறேன்.

கே; கட்சிக்கு வசூலிக்கப்பட்ட தேர்தல் நிதியை உங்கள் பெயரில் உள்ள கணக்கில் இருப்பதாகக் கூறுகிறார்களே.

ப: அது உள்கட்சி விவகாரம். அதுபற்றி நாங்கள் பேசி முடிவு செய்வோம். ஆனால் இதுபற்றித் தவறான செய்தியை வெளியிட்ட பத்திரிகையின் மீது வழக்குத் தொடர இருக்கிறேன்.

கே: விடுதலைப்புலிகள் மற்றும் இந்திய அமைதிப்படை பற்றி ஏதாவது கூறுகிறீர்களா?

ப: (மௌனம்)

### பிரச்சினை இல்லை

கே: தற்போது உங்கள் அணியில் ஏற்பட்டு உள்ள பிரச்சினைகளின் முடிவு பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: எங்கள் கட்சியில் பிரச்சினை எதுவும் இல்லை. இப்போது இருப்பது ஒரு சிறு பிரச்சினைதான் இதற்கு சீக்கிரம் நல்ல முடிவு கிடைக்கும்.

[illegible]




அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
முகத்தின் அழகு படத்தில் தெரியும்
அழகுக்கு அழகூட்டும் தரமான
கலர்ப்படப் பிரதிகளை
யாழ்ப்பாணத்திலேயே
அதிகுறை கட்டணத்தில்
மிகக் குறுகிய காலத்தில் பெற
"ஷப்ரு"வை நாடுங்கள்!
கலர் படச் சுருள் கழுவுதல்-
முற்றிலும் இலவசம்!!

- 3 முதல் 5 நாட்களுக்குள் விநியோகம்
- நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில் பிரதி செய்யப் படுதல்
- ஸ்ருடியோக்கள், 'ஷப்ரு' வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகை!!!
- கலர்ப் பிரதி Glossy / Matt தாள்களில் பிரதி செய்து கொடுக்கப்படும்

எல்லா நாட்களிலும் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்

நீங்கள் நாடவேண்டிய இடம்:

ஷப்ரு
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T. Phone No: 22073


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்தனின் ஆக்கங்கள் சில ஐயங்கள், செய்திகள்

'தமிழ்ப் பண்பாட்டுக்குக் கிடைத்த பரிசு' என்ற தலைப்பில் 02.07.1988 'சஞ்சீவி' வார இதழில் 'கௌரி உத்தராடன்' எழுதிய கட்டுரை என்னைப் பெரிதும் கவர்ந்தது. சம்பந்தன் அவர்கள், கலாநிதி இ. பாலசுந்தரம் ஆகியோர் பற்றி அரிய செய்திகளைக் கட்டுரையாசிரியர் தந்துள்ளார். இத்தகைய சிறந்த கட்டுரைகளைத் தேடிப்பெற்று வெளியிடும் சஞ்சீவி ஆசிரியர்க்கும் குழுவினர்க்கும் தமிழ் கூறும் நல்லுலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

இக்கட்டுரையில், 'கிராம ஊழியனில் வந்த ஒரு கதையைத்தவிர மற்றையவை எல்லாம் கலைமகளில் வந்தவையே' எனக் கௌரி உத்தராடன்' கூறியுள்ளார்.

இன்று கிடைக்கும் தரவுகளின்படி தாராபாய் (1938), கூண்டுக்கிளி (1940), விதி (1940), புத்தரின் கண்கள் (1940), தூமகேது (1941), மகாலக்ஷ்மி (1942), மனித வாழ்க்கை (1944), மதம் (1948), மனிதன் (1950), சலனம் (1960), துறவு (1960) ஆகிய பதினொரு கதைகளே கலைமகளில் வெளிவந்ததாகத் தெரிகிறது.

கலாக்ஷேத்திரம் (ஈழகேசரி, 15.11.1942), இரண்டு ஊர்வலங்கள் (மறுமலர்ச்சி, பங்குனி 1946), வாழ்வு (ஈழகேசரி, 3.7.1949 பிரயாணி வெள்ளிவிழா மலர் 1956), சபலம் (கலைச்செல்வி, 1959) ஆகிய ஐந்து கதைகளும் கலைமகளில் வெளிவந்து, பின் இவற்றில் மறுவெளியீடு செய்யப்பட்டனவா? அவ்வாறுயின் வெளியீட்டு விபரம் என்ன? இத்தகவல்களைக் 'கௌரி உத்தராடன்'னேன நம்புப. பிறரோ தருவார்களாயின் அது ஆய்வாளர்க்குப் பயன்படும்.

மறுமலர்ச்சி (கார்த்திகை 1947) இதழில் மறுபிரசுரம் செய்யப்பட்ட 'அவள்' சிறுகதை கிராம ஊழியனில் எப்போது வெளியானது?

இங்கு குறிப்பிட்டுள்ள பதினேழு கதைகளைத்தவிர, சம்பந்தன் அவர்கள் எழுதிய பிறகதைகளும் உள்ளனவா?

தமிழ்க் கலைமாணிச் சிறப்பு நெறிக்கால 'அறியாப் பருவத்தில்' மூலத்தைப் படித்தன்றி ஆய்வுக்கட்டுரை எழுதேன்' என்று விடாப்பிடியாக நின்றவர். 'சாவகச்சேரி, சல்லடி ஒழுங்கை, 'நிழல்' இல்லத்தில் வாழும் திரு. க. முருகதாசன். பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களின் நெறிப்படுத்தலில் சம்பந்தன் அவர்களைப்பற்றிய ஆய்வேட்டை உருவாக்கிய முருகதாசன் அவர்கள், சம்பந்தன் அவர்களின் கதைகளுள் ஒன்றிரண்டைத் தவிர அனைத்தையும் தேடிப் பிரதி செய்து அல்லது நிழற்பிரதி எடுத்து பலமுறை படித்து, ஆராய்ந்தே தமது ஆய்வேட்டை உருவாக்கினர். இந்த ஆய்வேட்டை அச்சிட்டு வெளியிடும் முயற்சியில் 'சமாதான அழிப்புகளுக்கு' முன்னர் திரு. முருகதாசன் ஈடுபட்டிருந்தார். 'செல்'லுக்கு இரையாகாமல் ஆய்வோடு தப்பியிருந்தால் அவர் அதனை விரைவில் வெளியிடுவார் என நம்பலாம்.

★ ★

அ. செ. முருகானந்தன் அவர்களின் 'மனிதமாடு' சிறுகதைத் தொகுதியைத் தொடர்ந்து சம்பந்தன் அவர்களின் சிறுகதைத்தொகுதியை வெளியிடுவதென யாழ்ப்பாண மாவட்டக் கலாசாரப் பேரவையின் இலக்கியக் குழு முடிவுசெய்திருந்தது. கலாசாரப்பேரவைக்குச் சமர்ப்பிக்கத் தயாரிக்கப்பட்டுள்ள தட்டச்சுப் பிரதிக்கு திரு. முருகதாசன் பிரதியே முக்கிய அடிப்படையாக இருந்தது என்பதை இங்கே குறிப்பிடுவது அவசியம்.

யாழ் மாவட்டக் கலாசாரப் பேரவை சமாதானப் புயலில் சாய்ந்துவிட்டது. அது மீண்டும் தலைநிமிர்த்தி இயங்கும் வாய்ப்பு இல்லையென்றே தோன்றுகிறது. புத்துயிர்ப்புப் பெற்றாலும் புதிய இலக்கியப் பேரவை இதனை வெளியிடுமா? 'இப்போது அவர் கவிதைகளைத் திரட்டி வெளியிடும் பணியில் யாழ். மாவட்டக் கலாசாரப் பேரவை ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது' என்று 'கௌரி உத்தராடன்' கூறுகிறார். இறுதிப்பகுதியை, 'ஈடுபட்டிருந்தது' என்று திருத்திக்கொள்ளலாம்! ஏனெனில், பேரவை வெளியிடும் என்ற நம்பிக்கை, 'பொய்யாய், கனவாய், பழங்கதையாய் மெல்லப்போயிற்று!

'ஒரு காலத்தில் சிறுகதைகள், நாவல் என்று எழுதியவர் சம்பந்தன். இப்போது அந்தத் துறையை அவர் திரும்பியும் பார்ப்பதில்லை.' என்று 'கௌரி உத்தராடன்' கூறுகிறார். எனவே, அவரும் தமது சிறுகதைகளை வெளியிடப்போவதில்லை. எனவே, துறவு சம்பந்தன் சிறுகதைகள்' என்ற தொகுதியை வெளியிடும் பொறுப்பு ஈழத் தமிழர் சமூகத்தைச் சார்ந்ததாகும்.

'என்னில் எனக்கினியன்' என்று சம்பந்தன் அவர்கள் அன்போடும் உரிமையோடும் கூறும் எழுத்தாளர் திரு. சு. இராஜநாயகன் அவர்களிடம் 'துறவு-சம்பந்தன் சிறுகதைகள்' தட்டச்சுப்படி வெளியீட்டுக்குத் தயாரான நிலையில் உள்ளது என்ற செய்தியையும் இங்கு கூறுவதில் தவறில்லை அல்லவா?

'யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் சம்பந்தன் கதைகளை ஆராய்ந்தே ஒருவர் எம். ஏ. பட்டம் பெற்றுவிட்டார்' என்று 'கௌரி உத்தராடன்' கூறியுள்ளார். சம்பந்தன் படைப்புகளை அவர்களது பரந்த இலக்கிய ஆக்க, இலக்கிய வரலாற்றுப் பின்னணியில் எம். ஏ. பட்டத்திற்கு ஆய்வுசெய்யமுடியும். ஆனால், அந்த நல்லபணியை இதுவரை யாரும் செய்யவில்லை என்றே நம்புகிறேன். 'கௌரி உத்தராடன்' செய்தியால் அவ்வாறு ஆராய விரும்புவோர் தமது முயற்சியைக் கைவிட நேரலாம். ஆகவே, அவர் தமது செய்தியை விளக்கமாக வெளியிடுவோர் என நம்புகிறோம்.

## - கூத்தப்பூசத்தான் -

★

## பொன் மொழிகள்

உன் நோக்கத்தை வாளால் சாதித்துக் கொள்வதைவிட நகை முகத்தால் சாதித்துக் கொள்வதே சாலச் சிறந்ததாகும்.

நன்றி மறத்தலை விலங்குகள் மனிதனுக்கு விட்டுவிடுகின்றன.

ஆதாரம்: இராமகிருஷ்ண விஜயம்

# பதார்த்த நஞ்சா? பார்வை நஞ்சா?

# விவாதத்தை விட்டுக் குறள் தரும் மாட்சியில் மகிழ்வோமாக!

கூற்றல் விதியில் அண்மை நிலை விதியே ஏற்புடைத்தாகும். எந்தப் பொருள் கொள்வதும் 'அண்மைநிலை, அவாநிலை, தகுதிநிலை' என்ற நியதியில் கொள்ளுதல் சிறப்பு எனத் தொல் காப்பியம் - கிளவியாக்கம் கூறுகிறது.

எப்பொருளும், அவ்வப் சந்தர்ப்பத்திற்குப் பொருந்தவே பொருள்கொள்ள வேண்டும் என மொழியியலாளர்கள் கூறுகிறார்கள்.

> 'பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர்...' என்ற குறளில் வள்ளுவர் கூறியது பார்வை நஞ்சே என்று புலவர் ஈழத்துச் சிவானந்தன் முதலில் தெரிவித்தார்.
>
> 'இல்லை. அது பதார்த்த நஞ்சுதான்'– என்று வட்டூர் கடம்பன் வாதிட்டார்.
>
> கம்பன் கழகத் தலைவர் திரு. நந்தகுமார் 'வள்ளுவர் கூறியது பார்வை நஞ்சையே'– என்று விளக்கம் தந்தார்.
>
> பண்டிதர் செல்வராஜா அலெக்ஸாண்டர் 'குறள் கூறும் நஞ்சு பதார்த்த நஞ்சையே குறிக்கின்றது' என்று கூறியதுடன் 'விவாதத்தைக் கைவிட்டு குறள் தரும் மாட்சியில் மகிழ்வோமாக!' என்று கூறி விவாதத்தை நிறைவு செய்கிறார்.

சாதாரண வழக்கிலும் வாக்கியநிலை கொண்டே பல பொருள் கருதும் ஒரு சொல்லின் கருத்தைக் கருதுகிறோம். ஆதலின் உண்ணல் அல்லது உண்டு அமைவது, உண்ணப்படும் உணவையே கருதும்.

எந்த அகராதியைப் புரட்டினாலும், போசனை, அருந்துதல் போன்றவற்றையே கருதி நிற்கும். மற்றப்புலன் வழியாய பார்வை என்பதைக் கருதாது. 'ஆல்' உருவு நடக்கமுடியாதது. ஆங்கிலத்திலும் 'If' என்பது நடக்க முடியாதது ஒன்றையே கருதும். 'கல்லைத் தின்றாலும் செமிக்கும் வயது' என்று கருதுவது அவாநிலையும், தகுதிநிலையும் கருதியே என்பது வெள்ளிடைமலை.

வலிந்திழுத்துக் கருத்துத் தெரிவிப்பது, நடைமுறை இலக்கணத்துக்கோ, அன்றேல் வாழ்வு நோக்கு அணுகுமுறைக்கோ பொருந்தாது. நயங்காணல் கருதி அவர்க்கு அந்நிலை பொருந்தும் எனக்கொண்டு, வில்லங்கத்திற்கு இழுத்து வந்து 'பார்வையும்' நஞ்சு என்று கூறுவது எந்நோக்கிலும் சரிவராது.

மெய்ப்பொருள் நாயனாரும் முத்திநாதரும் ஒருவருக்கொருவர் நண்பரல்லர். முத்திநாதன், நாயனாரை வெல்ல மாட்டாமையினால் நாயனாருக்கு இருந்த பக்தியுணர்வை பயன்படுத்தினன். நீறு பூசிய மதிப்பால் - தர்மம் எனக் கொண்டு நாயனார் அவனைக் கொல்லாது விட்டார். இங்கு எதுவும் நஞ்சுண்டமையவில்லை.

சீசரோ நண்பன் - அரசன். எனவே இது பொருத்தமானதே! உதாரணங்களை வாதிடுவது 'பிறிது பிறிதாகும்' என்ற தொல்காப்பிய விதியை நோக்கின், கருதும் அண்மை நிலைப்பொருள் வராது வேறாகிவிடும்,

வள்ளுவர் கூறிய நஞ்சு-நஞ்சைத்தான். 'நஞ்சும் உண்பர் என்னும் நற்றினைத் தொடர்' நஞ்சு உண்ணும் எல்லைக்கே வரக்கூடியது 'அன்பு' என்பதை உரித்தாக்குகிறது. இங்கு வரும் 'உம்' இடைச்சொல் கவனிக்கத்தக்கது.

நற்றிணையில் நட்பு பேசப்படுகிறது. குறளில் கண்ணோட்டம் (நட்பு) கூறப்படுகிறது. எனவே நஞ்சு பெய்தல்-முன்னிலையில் இருந்து நஞ்சு தந்தாலும், நட்பெனும் நனி நாகரிகம் கருதி ஏற்றுக் கொள்ளுதல் வலியுறுத்தவே வள்ளுவரும் நற்றிணைப் புலவரும் முயன்றனர் என்பது தெளிவு.

திருக்குறள் பெருங்கடல்: அக்கடலிலே காண்பவர் தத்தமக்குப் பொருத்தமுற, வாழ்வு நோக்கை, தகுதி நோக்கை, அண்மை நிலைக் கருத்தைக் கருதாது விமர்சிப்பது ஏற்புடையதாகாது.

விவாதம் கருத்து மிளிர்ச்சி, பல்வேறு உத்திகள் தரினும், உளவியல் நோக்கில் தாக்கத்தைத் தரவல்லது. விவாதத்தை விட்டு குறள் தரும் மாட்சியில் மகிழ்வோமாக!

★

## - பண்டிதர் செல்வராஜா அலெக்சாண்டர் -

## கொசுக்களைக் கொல்ல ஒரு போராட்டம்!

கொசுக்களைக் கொல்பவர்களை ஆஸ்திரேலியா கௌரவிக்கின்றது.

மெல்போர்னில் இருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்று, கொசுக்களைக் கொல்லும் இளைஞருக்கு சர்டிபிக்கட் வழங்கிவருகின்றது.

25 கொசுக்களைக் கொன்றவர் ஒவ்வொருவரும் இந்த சர்டிபிக்கட் பெறத் தகுதி உடையவர்கள் என்று அறிவிக் பபட்டுள்ளது.

கொசுத் தொல்லை நிறைந்த நாடாகிவிட்டது —இப்படி அந்தச் சஞ்சிகை தெரிவிக்கிறது.

10 லட்சம் கொசுக்களைக் கொல்ல வேண்டும் என்ற இயக்கத்தை அப்பத்திரிகை நடத்துகின்றது. ★

## மிகப் பெரிய தொலை நோக்கி

ரஷியாவில் வடகாகஸஸ் மலையில் ஜீலன்சுக்(Zelenchuk) என்னுமிடத்தின் அருகே உலகின் மிகப்பெரிய தொலை நோக்கி உள்ளது. இதில் உள்ள ஆடியின் குறுக்களவு 236 அங்குலம். மற்ற தொலை நோக்கிளை விட இது வான வெளியில் மிகமிகத் தொலைவில் உள்ளவற்றைத் தெளிவாகக்காண உதவுகிறது. எனினும், கடந்த பத்தாண்டுகளில் இத்தொலை நோக்கியைக் கொண்டு வானவியல் துறையில் புதிய சாதனை எதுவும் நிகழ்த்தப்படவில்லை. ★

# 'பொடி'யால் வந்த சம்பந்தம்!

காலை ஏழு மணி. வடிவேலு வாத்தியார் கோப்பி குடித்து விட்டு வெற்றிலைத் தட்டத்தைத் தேடினர். வீடு முழுக்கத் தேடியும் தட்டத்தைக் காணவில்லை. அவருக்குக் கோபம் பற்றிக்கொண்டு வந்தது.

'காலையில் இருந்து தேடறேன் தேடறேன் ஒரு இடமும் காணவில்லை. இந்த வீட்டில் ஒரு சாமானும் வைச்ச இடத்தில் இருக்காது' என்று சத்தம் போட்டார்.

சமையலறையில் வேலையாயிருந்த செல்லம்மா 'தேடறேன் தேடறேன் என்று பாட்டுப் பாடினல் என்ன தேடுறியள் என்று எங்களுக்கு எப்படித் தெரியும்' என்றுள்.

வாத்தியாருக்குக் கோபம் உச்ச எல்லையை அடைந்துவிட்டது. 'நான் கதைக்கிறது உனக்குப் பாடற மாதிரியாவா இருக்கு. உனக்கு வாய் நீண்டு போச்சு. கோப்பி குடிச்சவுடன் வெத்திலை தானே போடுவன். வெற்றிலைத் தட்டத்தையும் காணேல்லை, பொடி டப்பாவையும் காணேல்லை'

வெற்றிலை, பொடி என்ற வார்த்தைகளைக் கேட்டதுமே செல்லம்மா முகத்தைச் சுளித்தாள். இவை இரண்டும் அவளுக்கு அலர்ஜி. 'இந்தக் கண்டறியாத வெத்திலையை விடுங்கோ எண்டு எத்தனை வாட்டி சொல்லிப் போட்டேன் கேட்க மாட்டீங்க'

வாத்தியார் சால்வையைத் தோளில்போட்டுவிட்டு, செல்லம்மாவைக் கோபக்கனல் வீசப் பார்த்தார், அவருடைய வெத்திலையை கேவலமாகப் பேசியதை அவரால் பொறுக்க முடியவில்லை.

'பேசாதே. அறிவு கெட்ட பேச்சல்லவா இது. வெத்திலை செல்வமடி. அது லக்சுமியடி. வெத்திலை இல்லாத கருமம் இருக்கா'

கோபமாய்ப் பேசியவரின் பார்வை ஹோலின் இருந்த ஷோகேசிற்குக் கீழ் சென்றது. அங்கே இவருடைய வெற்றிலைத்தட்டம் இவரின் அரவணைப்பிற்காகக் காத்திருந்தது. அருகில் அவருடைய பொடி டப்பா.

அவருடைய கோபம் காற்ருய்ப் பறந்தது: ஓடிப்போய் அதை எடுத்தார். கையில் வைத்துக் குழந்தையைக் கொஞ்சுவது போல் பார்த்தார். அவர் உள்ளம் குதூகலித்தது.

ஒரு வாய் வெற்றிலைச் சீவல் போட்டுக் கொண்டு நாற்காலியில் அமைதியாக உட்கார்ந்து பேப்பரை எடுத்தார்.

வாத்தியாருக்கு வெற்றிலை, சீவல்தான் உயிர் என்றாலும் பொடி டப்பாவும் எப்போதும் கையில் இருக்கும், கால் மணித்தியாலத்திற்கு ஒரு தரம் வெற்றிலை போடுவார். வெற்றிலை போடாத சமயம் பொடி போடுவார்,

வெற்றிலை போட்டால் தான் அவரால் பேப்பரை ரசித்துப் படிக்க முடியும். பேப்பரில் உள்ள கண்ணீர் அஞ்சலிப் படங்களைப் பார்த்தவருக்கு மூளை சுறுசுறுப்பாக வேலை செய்தது.

### கடுகுக் கதை

பொடி டப்பாவைத் திறந்து ஒரு சிட்டிகை எடுத்து மூக்குக்கு அர்ப்பணம் செய்து 'சொர்ர்' என்று சி... கொடுத்துவிட்டு 'செல்லம்மா என்ரை பென்சன் கார்ட் போட்டோ கொப்பி பத்திரமா இருக்குதா?' என்று கேட்டார்.

சமையலறையில் வேலையாயிருந்த செல்லம்மா 'அதைப் பற்றி ஏன் மண்டையைப் போட்டு உடைக்கிறீங்க' என்ருள் அலட்சியமாக.

'அடியே நான் மண்டையைப் போட்டிட்டா கண்ணீர் அஞ்சலிக்கு நல்ல படம் வேணுமே அதுக்குக் கேட்டேன்'—

செல்லம்மாவிற்குத் தொண்டை அடைத்து விட்டது.

'வெள்ளிக்கிழமையும் அதுவுமா என்ன பேச்சுப் பேசுறியள்' என்ருள். பின்பு, 'பென்சன் எடுத்திட்டு சும்மா இருக்கிற நேரம் நாலு பிள்ளைகளுக்கு டியூசன் சொல்லிக் கொடுத்தால் என்ன' என்ருள்.

அப்போதுதான் குளித்து விட்டு வந்த மகன் சுதாகர் 'அப்பாவிடம் யாரம்மா டியூசனுக்கு வருவார்கள். நாம தான் காசு கொடுத்துப் பிடிக்கணும்' என்றான்.

வாத்தியார் கோபத்துடன் 'டேய் மூடடா வாயை. நான் படிப்பிச்ச பையன்களெல்லாம் டாக்குத்தரா இருக்காங்க தெரியுமா' என்ருர்.

மீண்டும் ஒரு சிட்டிகைப் பொடியை உறிஞ்சியவாறு.

'அப்பா, அன்னைக்கு ஒரு ஆஸ ஹொஸ்பிட்டல்ல எனக் ஹெல்ப் பண்ணினரு நம்பர் எடுக்க. உங்ககிட்டப் படிச்சவராம்' என்ருள் உமா.

'நான் சொன்னேன் பாத்தியா? யார் சங்கரா' என்ருர்.

'இல்லையப்பா யாரோ சுந்தரமாம், வாச்சரா இருக்கான்' என்றவள் அவரின் வெள்ளிப் பொடி டிப்பாவைப் பார்த்து 'அதைத் தாங்கப்பா குங்குமம் போட்டு வைக்கலாம்' என்ருள்.

'கல்யாணம் ஆகாத பெண்ணு குங்குமம் போடக் கூடாது. போ வேலையைப் பார்' என்ருர்.

கல்யாணம் என்றதும் செல்லம்மா வாத்தியாரை முறைத்துப் பார்த்தாள். ''வீட்டிலை குமர் ஒன்று இருக்கெண்ட நினைப்பில்லாமல், வெத்திலையையும் பொடியையும் போட்டுக்கொண்டு பேப்பர் படியுங்கோ'' என்ருள்.

''செல்லம்மா கத்தாதே. கல்யாணம் காலாகாலத்திலை கைகூடும்'' சொன்னவர் தோளில் சால்வையைப் போட்டுக் கொண்டு வெளியே போனர்.

இரண்டு நாட்களுக்கு முன் உமாவின் சாதகக் குறிப்பையும், படத்தையும் ... வைத்துக்கொண்டு ... புரோக்கரிடம் போனர்.

வழியில் பொடி வாங்கக் கடைக்குப் போய், அங்கே ஒரு சிட்டிகையைப் போட்டு விட்டுப் பார்த்தார் டயறியைக் காணவில்லை. கடையில் விசாரிக்கலாம் என்று செல்லம்மா ஞாபகப்படுத்தினதும் புறப்பட்டார்.

கேற்றைத் திறந்து இரண்டடி வைத்தவர் அருகில் கார் ஒன்று வந்து நிற்பதைப் பார்த்துப் பிரமித்துப் போய் நின்ருர்.

கார் டிரைவர் வெளியே தலையை நீட்டி ''இங்கே வடிவேலுவின் வீடு எது'' என்ருர்.

''வடிவேலு அல்ல. வடிவேலு வாத்தியார் என்று சொல். அது நான் தான் என்ருர்.

இதைக் கேட்டதும் காரின் பின் சீட்டில் இருந்த இளைஞனும், அவன் தாயாரும், காரை விட்டு இறங்கி வாத்தியாரிடம் ''உங்களுடன் பேச வேண்டும் வீட்டிற்குப் போய் பேசலாம்'' என்று சொல்லி அவருடன் வீட்டிற்குப் போனர்கள்.

இளைஞனின் தாய் விபரமாகச் சொன்னர். தன் மகன் டாக்டர் என்றும், வாத்தியார் தவறவிட்ட டயறி தன் மகனுக்குக் கிடைத்ததாகவும் உமாவின் குறிப்பு தன் மகனுக்கு நல்ல பொருத்தம் என்றும் சொன்னர்.

மேலும் உமாவின் படத்தைப் பார்த்த மகன் உமாவையே மணக்க விரும்புவதாகவும் சொன்னர்.

அன்றே கல்யாண நிச்சயதார்த்தம் சம்பிரதாய பூர்மாக நடந்தது.

அவர்கள் போனபின்பு மகிழ்ச்சிவெள்ளத்தில் மிதந்த வாத்தியார் ''அடி செல்லம்மா என் பொடியை மட்டம் தட்டினியே அந்தப் பொடி தானடி இந்தச் சம்பந்தத்தைக் கொண்டு வந்தது'' என்று சொல்லி ஒரு சிட்டிகை ... ''சொர்'' என்று மூக்குக்கு அர்ப்பணம் செய்தார். ★

## - பசுபதிராஜா -

## பொது அறிவுப்போட்டி இல. 9

1. சடலைத் தாண்டப் பயன்படுவது எது? ... ... ... ... கப்பல் / விமானம்
2. பெண்கள் முகத்தில் பூசிக்கொள்வது எது? ... ... ... மஞ்சள் / பவுடர்
3. எங்கே பணம் கிடைக்கும்? ... ... ... ... ... ... வங்கி / வட்டிக்கடை
4. சடிப்பது எது? ... ... ... ... ... ... ... ... ... ... நாய் / செருப்பு
5. மருந்தாகப் பயன்படுவது எது? ... ... ... ... ... ... இஞ்சி / மஞ்சள்
6. எது பேசும் சக்தி படைத்தது? ... ... ... ... ... ... ... விழி / மொழி
7. தேனீக்களிலும் யார் உண்டு? ... ... ... ... ... ... ... ராணி / ராஜா
8. மழைகாலத்தில் எதை எதிர்பார்ப்பார்கள்? ... ... ... மழை / வெய்யில்
9. யாருடன் கவனமாகப் பேசவேண்டும்? ... ... ... ... அறிவாளி / முட்டாள்
10. பூனையைப் பார்த்தால் பயப்படுவது எது? ... ... ... ... ... எலி / கிளி
11. எது விளக்கேற்றும் திருநாள்? ... ... ... ... தீபாவளி / திருக்கார்த்திகை
12. அரசியலில் எது வேண்டும்? ... ... ... ... ... ... வாய்மை / தூய்மை

பெயர்:- ..................

விலாசம்:- ........................

..............

பொது அறிவுப்போட்டி இல: 9
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

——— இங்கே வெட்டுக ———

### நிபந்தனைகள்:

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ளமுடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 27. 7. 88 புதன்கிழமைக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

### பொது அறிவுப் போட்டி இல: 8 சரியான விடைகள்:

1. மீன், 2. இறப்பு, 3. தெய்வானை, 4. விபத்து, 5. கழுதை, 6. அணில், 7. கதர், 8. ——, 9. விடை, 10. கோபுரம், 11. பட்டம், 12. காலை.

(எட்டாவது கேள்வியில் தவறு நேர்ந்து விட்டது அதனுல் பதினொரு கேள்விக்கான விடைகளை வைத்தே பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ் - கொழும்பு
விமான சேவை விசேட போக்குவரத்து வசதியுடன் தினசரி நடைபெறுகிறது. முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.
TELEX MESSAGES, கடிதங்கள், சிறு பொதிகள் விமான மூலம் அனுப்பப்படும்.
MACK TRAVELS
1St - Lane, Pt - Pedro Rd, Jaffna.

சஞ்சீவி சஞ்சிகை
16-7-88 சனிக்கிழமை

★ குறைந்த கட்டணத்தில் விமான டிக்கற் CONFIRMATION, RECONFIRMATION and CANCELLATION.
★ பாஸ்போட் பொன்டிங் இந்தியன் விசா.
ஆகியவைக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
MACK TRAVELS
Jaffna.

## கருத்துக் கலசம்

### தலைமைத்துவம்

'இளமையில் கல்வி சிலைபோல் எழுத்து' என்பது முதுமொழி.

கல்வியை மட்டுமல்ல. வாழ்க்கைக்குத் தேவையான பல விஷயங்களையும், அம்சங்களையும் கற்றுக் கொள்வதற்கு இளமைப் பருவமே உகந்ததாகும்; உரியதுமாகும்.

தொட்டில் பழக்கம் சுடுகாடு வரையும். அதனால் நல்வாழ்க்கைக்கு இளமையிலேயே அத்திவாரம் இடப்பட வேண்டும்; அடித்தளம் அமைக்கப்பட வேண்டும்.

தனிநபர் வாழ்க்கைக்கு உரிய குணம்சங்கள், பண்புகள், கடமைகள், நெறிகள் என்பன இளமையிலேயே பயிற்றுவிக்கப்பட வேண்டியவை.

அதே வகையில் சமூக வாழ்க்கைக்குத் தேவையான சமூக நெறிகளும், சமூக ஒழுங்குகளும் இளமைக் காலத்திலேயே பயிற்றுவிக்கப்படுவது அவசியம். தலைமைத்துவப் பயிற்சியும் இளமையில் புகட்டப்பட வேண்டிய ஒன்றே. திறமை, ஆளுமை, ஆற்றல் என்பன இளமையில், சிறு பராயத்தில் மிளிர்ந்து தெரிவதில்லை. மறைந்து. வெளிக் கொணரப்படாமல் இருக்கும். அவற்றை இனங்கண்டு வளர்த்து, உரமூட்டி, ஊக்குவித்து, மேம்படுத்தி, மேலோங்கச் செய்வதற்கு இளமைப்பருவமே உரிய பருவம்.

ஆற்றல், ஆளுமை, திறமையை இனங்கண்டு உரிய முறையில் வளர்த்தெடுக்கும் பொறுப்புவீட்டையும்- பெற்றோர்களையும், பாடசாலையையும்- ஆசிரியர்களையும் சார்ந்ததாகும்.

தலைமைத்துவம் என்றதும் உடனடியாக அரசியல் தலைமைத்துவம் என்று அனேகர் நினைத்து விடுகிறார்கள். அப்படியல்ல.

பாடசாலையில், அலுவலகத்தில், தொண்டு செய்வதில், சமூக சேவையில், சமய சேவையில் என்று எல்லா இடங்களிலுமே தலைமைத்துவம் தேவைப்படுகிறது.

எந்தக் காரியமும், சேவையும் தலைவன் ஒருவனுக்குக் கீழ் நடந்தாலே உரிய பலனை எதிர்பார்க்க முடியும்.

கிராமத்திலும் நாட்டிலும் தலைவனாக விளங்குவதற்கு நல்லொழுக்கம், நற்பண்பு, கண்ணியம், கடமை உணர்வு, சேவை மனம், பொறுப்புணர்ச்சி, தீர்க்கதரிசனம், பரந்த நோக்கு, ஆழ்ந்த அறிவு, துணிவு, முடிவெடுக்கும் ஆற்றல், கொள்கை வகுக்கும் திறன், விடாமுயற்சி, விட்டுக்கொடுத்தல், புரிந்துணர்வு, சுறுசுறுப்பு என்பன பிரதான தேவைகளாகும்.

இவற்றை இளைஞர்களிடையே வளர்ப்பதற்கு வீடுகள், பாடசாலைகளுடன், மேலதிகமாக நிறுவனரீதியான பயிற்சிகளும், பயிற்சி முகாம்களும் உதவலாம்.

கல்வியில் பயிற்சி, விளையாட்டில் பயிற்சி என்பதோடு மூன்றாவதாக தலைமைத்துவப் பயிற்சியும் சேர்க்கப்பட வேண்டும். அதற்கும் முக்கியத்துவம் தரப்பட வேண்டும். நிகழ்காலம், எதிர்காலம் இரண்டிலும்நாட்டைசமூகத்தை, நல்ல முறையில் கட்டி எழுப்புவதற்குச் சிறிய தலைமைத்துவம் அவசியம் அல்லவா? ★

# சீதை வளர்த்த கிளிக்கு "கைகேயி" என இராமன் பெயரிட்ட காரணம் என்ன?

அயோத்தி மாநகரில் சீதாப்பிராட்டி அழகிய கிளி ஒன்று வளர்த்து வந்தாள். அக்கிளியிடம் பிராட்டிக்கு மிக்க அன்பு உண்டு. அக்கிளிக்குப் பெயர் ஒன்று சூட்ட வேண்டும் என்று ஆவல் கொண்டாள் மிதிலைச்செல்வி.

சீதை எக்காரியத்தைச் செய்தாலும் தன் மருந்தனைய நாயகனின் ஆலோசனையைக் கேட்டே செய்வாள். எனவே கிளியின் பெயர் பற்றிய குழப்பத்தை இராமனிடம் கூறினாள்.

'சுவாமி, நான் ஆசையோடு வளர்க்கும் என் கிளிக்குப் பெயர் ஒன்று சூட்ட விரும்புகின்றேன். எப்பெயர் வைப்பது என்பதிலேதான் எனக்குக் குழப்பம்!'- என்றாள் சீதாப்பிராட்டி.

ஐயன் புன்னகைத்து, 'சீதா, இதிலே குழப்பத்திற்கு என்ன வேலை? என் தாயாகிய கைகேயியின் பெயரையே சூட்டிவிடு'- என்று திருவாய் மலர்ந்தருளினார்.

சீதாப்பிராட்டிக்கு வியப்பாக இருந்தது. தன் சொந்த அன்னை கோசலையின் பெயரைச் சூட்டாமல், தந்தையின் பெயரைச் சூட்டாமல் சிற்றன்னையான கைகேயியின் பெயரைக் கிளிக்குச் சூட்டுகிறாரே என்று! 'தன் தாயைக் காட்டிலும் சுவாமிக்கு சிற்றன்னையான கைகேயியின் மீதிலுள்ள அன்பு நான் எவ்வளவு பெரிது' என்று பூரித்தார் பிராட்டியார். நாயகன் கூறியவாறே சீதாப்பிராட்டியும் கிளிக்குக் 'கைகேயி' என்ற பெயரையே வைத்து விட்டார்.

ஆனால், அப்போது அவர் அது பற்றி நாயகனிடம் எந்தக் கேள்வியும் கேட்கவில்லை.

கேட்டால் ராமபிரானுக்குத் தர்மசங்கடமாக இருக்கக் கூடும் என்று நினைத்தாள். காரணம்; பெற்ற அன்னையை விட உங்கள் சிற்றன்னையார் பேரில் அதிக அன்பு பாராட்டும் காரணம் என்ன?'- என்று கேட்டால் ராமபிரான் மறுமொழி கூறத் தயங்கக் கூடும். எனவே, தன் ஊகங்களை அப்படியே தம் மனதுக்குள் அடக்கிக் கொண்டார் பிராட்டியார்.

இருப்பினும் பிராட்டியாருக்கு இந்தச் சம்பவம் மறக்கவே இல்லை.

கைகேயி தசரதனிடம் வரம் பெற்று ராமனைக் காட்டுக்கு அனுப்பும்போது, சீதாப் பிராட்டியின் மனதில் இந்தச் சம்பவம் நெருடுகிறது. தம் நாயகன் விசேட அன்பு செலுத்திய கைகேயியே அவருடைய வனவாசத்துக்குக் காரணமானார் என்றபோது...

.......... பிராட்டி சிந்திக்கிறார். பொறிதட்டினாற் போல் ஓர் உண்மை புரிகிறது. ஆயினும்



**- புலவர் க. துரியானந்தம் -**

தன் சிந்தனைகளை யாரிடமும் வெளிப்படுத்தவில்லை, பிராட்டியார்.

அதை வெளிப்படுத்த ஒரு வேளை வருகிறது.

அந்த வேளை......

இராவணனால் சிறை செய்யப்பட்டு சீதாப்பிராட்டியார் அசோகவனத்தில் இருக்கிறார்.

அப்போது அனுமன் ராமதூதனாகப் பிராட்டியாரைச் சந்திக்கிறான். அந்தச் சந்திப்பில், ராமபிரான் தெரிவித்த செய்திகளைத் தெரிந்து கொண்ட தாயார், தன் பங்குக்கு ஓர் அரிய செய்தியை ஸ்ரீராமனுக்குத் தெரிவிக்க வேண்டுமே...... அதற்காக யோசிக்கிறார் பிராட்டி.

அப்போது அவருக்குப் பளிச்சென்று இந்தச் சம்பவம் தான் நினைவுக்கு வருகிறது.

அனுமானிடம், கிளிக்கு ஸ்ரீராமர் கைகேயியின் பெயரிட்ட அந்தச் சம்பவத்தை- பிராட்டியின் உள்ளத்தில் பசுமையாக இருந்த அந்த அந்தரங்க சம்பவத்தைக் கூறுகிறார்.

சீதாப்பிராட்டியார் கூறிய இந்தச் சம்பவத்தைக் கேட்டு அனுமனும் வியப்புறுகிறான்...

கூடவே ஓர் ஐயம்—

ஸ்ரீராமருக்குத் தன் சிற்றன்னையான கைகேயி மீதுள்ள அன்பு அனைவரும் அறிந்த ஒன்றே... அப்படி இருக்க ஒரு கிளிக்குப் பெயர் சூட்டுவதன் மூலம்தான் தன் அன்பை ராமபிரான் வெளியிடுவாரா?

தன் சிற்றன்னையின் பேரில் உள்ள அன்புக்கும் மேலாக, வேறு ஏதாவது காரணமும் கருத்தித்தான் அப்படிப் பெயர் சூட்டியிருப்பாரோ, ராமபிரான்?

அந்த யோசனை தோன்ற அனுமான் சீதாதேவியை நோக்குகிறார்.

அனுமான் சிந்தனையை உணர்ந்த சீதாப்பிராட்டி பொருள்செறிவுடன் மென்மையாகப் புன்னகைக்கிறார்.

அந்தப் புன்னகையிலிருந்தே அனுமானுக்குப் பளிச்சென்று அந்தக்காரணம் புரிந்துவிடுகிறது...

என்ன அந்தக் காரணம்?

கிளிக்கு ஒரு பழக்கம் உண்டு. அதற்குத்தானே பேசத்தெரியாது. யார் என்ன சொல்லிக் கொடுக்கிறார்களோ அதை அப்படியே கூறும். அதாவது கிளி சொன்னதைச் சொல்லும். அவ்வளவுதான். அதுபோலவே கைகேயி, தான் பெற்ற இரண்டு வரங்களைப் பயன்படுத்திக்கொண்டு இராமனை வனவாசம் செல்லச் சொல்கின்றாள்.

இது கைகேயியாகச் சொன்னது கிடையாது. அவளது மூளையில் அத்திய கருத்து உதயமாகாது! ஆகவில்லை. அவளுக்குச் சொல்லிக்கொடுத்துச் சூடேற்றிக் கொதிக்கச் செய்து அயோத்தி வேந்தன் முன் குதிக்கச்செய்தவள் கூனி ஆவாள்.

இப்படி ஒரு நிகழ்ச்சி பிறகு நடக்கும் என்பதை முன்பே அறிந்திருந்த கோசலைச்செல்வன், சொன்னதைச் சொல்லும் கிளிக்கு அதே குணமுடைய கைகேயியின் பெயரையே வைக்கச்சொன்னான்!

இக்காட்சியை பின்வருமாறு கம்பர் வர்ணிக்கிறார்:-

'என்னொர் இன்னுயிர் மென்கிளிக்
கியார் பெயர் ஈகேன்
மன்ன!. என்றலும், 'மாசறு
கேகயன் மாதென்
அன்னை தன்பெய ராகென' அன்பினொ
டந்நாள்
சொன்ன மெய்ம் மொழி சொல்லு
மெய்ம்மை தொடர்ந்தோய்!

— (கம்பராமாயணம் — சுந்தர காண்டம் சூடாமணிப்படலம்).

# உங்கள் மனம் உங்களிடம் இல்லையா?

ஒரு சங்கீதக் கச்சேரி! ஒரு பெண்மணி பாடினாள். சபை நிரம்பியிருந்தது. 'எத்தனையோ பிறவி... எடுத்தெடுத்தே... இளைத்தேன்... எத்தனையோ... பிறவி... எடுத்தெடுத்தே... இளை...ய்த்தேன்...' என்று உருக்கமாகப் பாடினார். சபையில் ஒரே சிரிப்பு! காரணம். அந்தப் பெண்மணி இரட்டைநாடி! இளைத்தேன் என்றால் யாரும் நம்பமாட்டேன் என்கிறார்கள்! சிரித்து விட்டார்கள். சரி... விடுங்கள்!

'எத்தனையோ பிறவி எடுத்தெடுத்தே இளைத்தேன்' என்றால் சரீரம் இளைத்ததாகப் பொருள் அல்ல! பிறப்பதும் இறப்பதுமாக இப்படி எத்தனையோ ஜென்மம் எடுத்து எடுத்து என் உள்ளம் தேய்ந்து துரும்பாகி விட்டதே! பிறவியே இல்லாமல் உன்னைய அடைவது எப்போது? என்று மனமுருகப் பாடி வருத்தப்படுவது அதன் பொருள்!

பக்தி செய்து முக்தி பெற வேண்டும் என்பார்கள். ஏதோ ஒரு பிறவியில் இந்த பக்தி என்ற பயிரை இதயத்தில் (பூமியில்) நட வேண்டும். பகவான் நாம சங்கீர்த்தனம், பகவத் குணங்களைக் கேட்பது போன்றவைகளா

**- வைரம் ராஜகோபால் -**

கிற தண்ணீரைப் பாய்ச்ச வேண்டும். நடுவிலே காமம், குரோதம் போன்ற முட்செடிகளாகிற 'களை' எடுக்க வேண்டும். இப்படியே செய்து வந்தால் பக்தியாகிற பயிர் செழித்து வளரும். காலம் வரும்போது சிறந்த தானிய 'முக்தி' என்ற பலனைக் கொடுக்கும். அது ஒரே பிறவியிலா, பல பிறவிகளுக்குப் பிறகா என்பது சொல்ல முடியாது. அது விளையும் பயிரின் தரத்தைப் பொறுத்தது!

இந்த மாதிரி பிறவியே இல்லாத நிலையைத்தான் மகான்கள் விரும்புகிறார்கள்! 'மனதைப் பகவானிடமே வைத்து விடு. வேறு எதிலும் வைக்காதே! முக்தி கிடைக்கும்' என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஆதிசங்கரர் பரமேஸ்வரனைக் குறித்துப்பூஜை செய்கிறார் ஹேசம்பா! உனக்கு நான் ஏதாவது கொடுக்கலாம் என்று நினைத்தால் எதைக் கொடுப்பது என்று தெரியவில்லையே! இந்த உலகமே உன்னுடையது. உன் பொருளையே எடுத்து உனக்கு நான் எப்படிக் கொடுப்பது? உன்னிடம் தங்கமலையே இருக்கிறது! சகல விதமான ஆபரணங்களும் உள்ளன. இப்படி யோசித்துப் பார்த்தால் உன்னிடம் இல்லாத பொருளே ஒன்றுமில்லை. ஆகையால் உன்னிடம் இல்லாத பொருளாக ஏதாவது ஒன்றைக் கொடுத்தால்தான் அது பெருமையாக இருக்கும். உன்னிடம்இல்லாத ஒன்று என்னிடம் இருக்கிறது. அது என்ன தெரியுமா? சதா காலமும் சஞ்சலமும் வேதனையும் நிறைந்த 'மனம்' என்ற ஒன்று என்னிடம் உள்ளது. இது உன்னிடமில்லை! ஆகவே இந்த மனதை உன்னிடம் கொடுத்து விடுகிறேன். அதற்குப் பதிலாக நீ எனக்கு மோட்சத்தை அருள்வாய்' என்று பிரார்த்திக்கிறார்.

இது செலவில்லாதது. சுலபமானது. ஆனால் மனிதர்கள் மனதை பகவானிடம் வைக்கிறார்களா? வேறு எங்கெல்லாமோ வைத்துவிட்டு, மீட்க முடியாமல் திண்டாடுகிறார்களே! இது தான் ஆச்சரியம் என்கிறார்கள் மகான்கள்! ★

# விண்ணிலிருந்து பூமியை ஆராயத் திட்டம்

விண்வெளியிலிருந்து பூமியைத் தொடர்ந்து ஆராய்வதற்கு, உலக நாடுகளின் ஒத்துழைப்புடன் ஒரு மாபெரும் ஆய்வுத் திட்டத்தை அமெரிக்க விண்வெளி நிறுவனம் ('நாஸா') அமுலாக்க உள்ளது.

மனிதனின் விண்வெளிப் பயண வரலாற்றில், மிகப் பெரிய அறிவியல் ஆய்வுப் பணிகளுள் ஒன்றாக இது அமையும். இத்தகவலை நாஸா நிறுவன விஞ்ஞானி டிக்சன் பட்லர் தெரிவித்துள்ளார்.

விண்வெளி மேடைகள், தொலையுணர்வுச் செயற்கைக் கோள்கள், நிரந்தர ஆய்வு நிலையம், அதிவேகக் கம்பியூட்டர்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி இவ்வாறு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படும்.

விண்ணில் பறக்கவிடப்படும் இந்தச் செயற்கைக் கோள்களைப் பராமரிப்பதற்காக, விண்வெளி வீரர்கள் அவ்வப்போது விண்வெளிக்குஅனுப்பி வைக்கப்படுவார்கள். 'ரோபோட்' (Robot) எனப்படும் இயந்திர மனிதர்களும் இப்பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

பூமியைப் பற்றிய எல்லாத் தகவல்களும் இந்தப் புதிய திட்டத்தின் மூலம் முறைப்படி ஆராயப்படும். பூமியைச் சூழ்ந்துள்ள மேகமண்டலங்கள், பனிப்படலங்கள், பூமியில் தாவர வளர்ச்சி, மழை ஈரப்பதம் அளவு முதலியவை ஆராயப்படும்.

கடலில் உள்ள குளோரோபில்லின் அளவு, வாயு மண்டலத்தின் காபன் - டை - ஒக்சைடு, மீதேன், ஓசோன் போன்ற வாயுக்களின் அளவு ஆகியவை பற்றியும் ஆராயப்படும்.

மலைத் தொடர்கள், எரிமலைகள் ஆகியவற்றின் தோற்றத்திற்குக் காரணமான அடிப்படைப் புவியியல் இயக்கங்கள் குறித்தும் ஆய்வுகள் நடத்தப்படும். விண்வெளியில் உலவ விடுவதற்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ள 'நிரந்தர ஆய்வு நிலையத்தின்' ஒரு பகுதியாக 4 விண்வெளி மேடைகள் உலவ விடப்படும். இவற்றுள் இரு மேடைகளை அமெரிக்கா வடிவமைக்கிறது. ஐரோப்பிய விண்வெளி நிறுவனம், ஜப்பானிய தேசிய விண்வெளி வளர்ச்சி நிறுவனம் ஆகியவை ஒவ்வொரு மேடையை வடிவமைத்துத் தருகின்றன.

பூமியின் வேகத்துக்கு இணையாச் சுற்றும் 5 தொலையுணர்வுச் செயற்கைக் கோள்களும் 1996-ஆம் ஆண்டு முதல் 2000-ஆவது ஆண்டிற்குள்ளாக விண்வெளியில் ஏவப்படும்.

இவற்றில் அமெரிக்கா 3 செயற்கைக் கோள்களையும், ஜப்பான், ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் ஆகியவை ஒவ்வொன்றும் ஒரு செயற்கைக்கோளையும் வழங்கும்.

## இன்று நாட்டில் இல்லை....!

வேம்புக்கு நிகரான மரமு மில்லை – கதர்
வேட்டிக்கு நிகரான துணியு மில்லை
பூம்பட்டை விரும்பாத பெண்ணுமில்லை – அவள்
பொன்மேனிக் கிணையான சுகமுமில்லை.

தோடிக்கு நிகரான ராகமில்லை – மயில்
தோகைக்கு நிகரான சாயல் இல்லை
ஆடைக்குள் மறையாத அங்கத்தாளின் – தனி
ஆணைக்கு அடங்காத ஆணு மில்லை

நீந்தற்கு விரும்பாத சோடி இல்லை – கலை
நிகழ்ச்சிக்குச் சேராத கூட்டமில்லை
காந்திக்கு நிகரான மனிதரில்லை – அவர்
காட்டிய வழியின்று நாட்டிலில்லை

அமுதுக்கு நிகரான இனிமை இல்லை – அதை
அறிந்தவர் சுவைத்தவர் யாரும் இல்லை
தமிழுக்கு நிகரான மொழியுமில்லை – அதைத்
தாரணிக் காக்குதல் நம்கடமை

சாதியும் சமயமும் உண்மையில்லை – அதன்
சம்பிரதாயமும் உண்மை இல்லை
நீதியும் நேர்மையும்தானே உண்மை – அதை
நீயறி வாயெனின் வாழ்வே மேன்மை

பாட்டுக்குள் பாரதியின் பாட்டைப்போல – தமிழில்
பாஷைக்கு வளமீந்த பாடல் இல்லை
நாட்டுக்கு விடுதலையை ஈட்டித்தந்த – அவன்
நாவுக்கு நிகரான நாவு மில்லை.

— புலவர் பெ. பொ. சிவசேகரனார் —

[(திருகோணமலை தந்த பேரறிஞர் புலவர் பெ. பொ. சிவசேகரனாரின் கையெழுத்துப் பிரதி யில் கிடைக்கப்பெற்ற கவிதைகளுள் ஒன்று)]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org